கல்கி

KALKI 3-5-81

ரூ. 1.20




வாழ்வின் இணையிலா இனிமைகள்
அவை என்றென்றும் புதுமைகள்
Pond's
நீங்கள் எப்போதும்
விரும்பும் சுகந்த மணம்



கனடா நாட்டுக் கலைஞர்

நிலா வெளிச்சம்போல் ஒளிபடரும் நடன மேடையில், மார்கரெட் கில்லிஸ்ஸின் உடல் வில்லாய் வளைகிறது. கொடியாய்ப் படர்கிறது. பூவாய் மலர்கிறது. மான் போல் துள்ளுகிறார். வேங்கையாய்ப் பாய்கிறார். அத்தனையிலும் நளினம். உடல் நூறு விதங்களில் நூறு பாவனைகளைக் காண்பிக்கிறது. இவரை எல்லோரும் அழைப்பது மார்கி என்று. மார்கி மட்டும் நடனமாடுவதில்லை. அவர் உடைகள் நர்த்தனமாடுகின்றன. இடுப்பைத் தொடும் கூந்தலும் கூட நடனமாடுகிறது. பாவங்கள் மேற்கத்திய நடனத்தில் பார்க்க முடியாது. மார்கி தமது நடனங்களில் இதை வெகு அழகாகக் கொண்டு வந்திருக்கிறார். இவரது நடனங்களில் கிழக்கத்திய நடன பாணியின் சாயல்கள் கலக்கிறது. அதனால்தான் இது மேல் நாட்டினருக்கு வித்தியாசமானதாகப் படுகிறது. நமக்கும் புதுமையாகத் தெரிகிறது. ''ஏற்கனவே அமைத்த இசைக்கேற்ப நடனமாடுவதால், ஒவ்வொரு மேடையிலும் ஒரே மாதிரியாகத்தான் ஆடுவீர்களா?'' ''இல்லை. மாற்றிக் கொள்கிறேன்.'' என்றார் மார்கி. அவ்வப்போது ஏற்படும் புதிய கற்பனைகளுக்கு இடமளிப்பாராம். நிகழ்ச்சி முடிவில் செக்கச் செவேல் என்ற உடையணிந்த சின்னஞ் சிறு பெண் குழந்தை மேடையில் நடன பாணியிலேயே மார்கியை வணங்கி அபிநயத்துடன் பூங்கொத்தை வழங்கியபோது திகைப்பு. கொடுத்தார் ஒரு முத்தம் — குழந்தையின் கன்னத்தில்! கனடா தேசத்தின் கலாசார தூதுவர் என்று அந்நாட்டுப் பிரதமரால் பாராட்டப்பட்ட மார்கிக்கு 27 வயதாகிறது. கிளாஸிகல் நடனமும் நவீன நடனமும் கற்றிருந்தாலும், 1977ல் இந்தப் புதுமையான நடன பாணியைக் கண்டுபிடித்துப் புகழைக் குவித்து வருகிறார். ''மார்கி உணர்ச்சியோடு ஒன்றிப்போய் நடனமாடும் அபூர்வ நடனக் கலைஞர்!'' என்றனர் நிகழ்ச்சியை அளித்த ஸ்டேஜ்-1 அமைப்பாளர்களான மித்ரன் தேவநேசனும் அம்பிஹார்ஷாவும். சென்னைக்கு வந்த அன்று நடனக் கலைஞர்கள் தனஞ்சயனும் சாந்தா தனஞ்சயனும் நடத்தும் பள்ளிக்கு விஜயம் செய்தார் மார்கரெட். அருணாசலக் கவியின் ராம நாடகக் கீர்த்தனைகளைத் தனஞ்சயன் தம்பதி நடனமாக வழங்கிய போது மெய்மறந்து ரசித்தார்.

-சாருகேசி

சாலிடெர் அ
வைத்திரு
வருந்த

நீங்கள் மிகவும் விரும்பும் கிரிக்கெட் டெஸ்ட் மாட்ச் ஒளிபரப்பப் படுகிறது. ஆனால் உங்களால் அதைக் கண்டு களிக்க இயலாதபடி படம் தெளிவாக இல்லாமல் மங்கலாக உள்ளது. அல்லது உங்களுக் இசைவான இசைக்கச்சேரி இன்னமுதாய் இனிக்கையில் தேவையில்லாத வெளிப்புற ஓசைகள் கலந்து, திடீரென ஒ நின்றுவிட்டால் எப்படி இருக்கும் உங்களுக்கு ?




லாது வேறு டிவி வர்கள் கூடிய நேரங்கள் பல

னி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களில் ாட்டப்பட இருக்கும் திரைப்படத்தை க்கத்துடன் எதிர்பார்த்துக் கொண் ருக்கையில் படம் நெளிந்து கோணலா த் தெரிகிறது. பலமுறை போன் ய்தும் சர்வீஸ் என்ஜினியர் தலைகாட் மல் இருந்தால் எரிச்சலூட்டாதோ ங்களுக்கு ?

வி செட்டை பழுதுபார்க்க நீங்களே ர்வீஸ் சென்டருக்கு தூக்கிச் செல்லும் டி நேர்ந்தால் எரியும் நெருப்பில் ண்ணெய் விடுவது போன்றிருக்காதோ ங்களுக்கு ? இத்தகைய டிவியை ாங்கியதற்காக நீங்களே உங்களைச் பித்துக்கொள்ள நேரிடும்.

இத்தகைய நிலை உங்களுக்கு நேராம லிருக்க நீங்கள் வாங்கும் டிவி சாலிடெ ராக இருக்கட்டும். சாலிடெர் டிவி வைத்திருப்போரிடம் விசாரித்து நீங்களே நிருபணம் செய்துகொள்ளுங்கள். சாலிடெ்ர் டிவி வைத்திருப்போருக்கு இத்தகைய நிலை ஏற்பட வாய்ப்பில்லை. ஏன்னெனில் இதில் மிகச்சிறந்த தரமிகுந்த உறுப்புகளும், உலகப் புகழ்பெற்ற பிக்சர் ட்யூபுகளுமே உபயோகிக்கப் படுகின்றன. இதனால் படக்காட்சிகள் மிகத் துல்லியமாகவும், ஒலி வெகு சீரானதாகவும் இருக்கின்றது. சர்வீஸ் தேவைப்படும்படியான சந்தர்ப்பம் நேர்ந்தால், சிறந்த பராமரிப்புக்குப் பறந்தோடி வருவர் சாலிடெர் சர்வீஸ் என்ஜினியர்கள். இவர்கள் மிகவும் சுமூகமானவர்கள். கடமையில் கண்ணும் கருத்துமாய் இருப்பர். வார 7 நாட் களிலும் சிறந்த பராமரிப்பு. சென்னை யிலிருந்து 160 கி.மீ. தொலைவில் வசிப்பவர்களின் சௌகரியத்திற்காக காஞ்சிபுரம் மற்றும் பாண்டிச்சேரியிலும் சர்வீஸ் வசதி. மொத்தத்தில், மட்டற்ற மகிழ்ச்சிக்கு சாலிடெர் ஒரு உத்தரவாதம்.




சாலிடெர்

உங்கள் டிவியின் கிரஹிப்புத் தன்மையை அதிகரிக்கலாம்.

சென்னை டிவி நிலையத்திலிருந்து 85 கி.-மீட்டருக்கு அப்பால் வசிப்பவர் சாலிடெர் டிவி பூஸ்டரை இணைப்பதன் மூலம், தங்களது டிவியில் (எந்தவொரு டிவியானாலும்) தெளிவான படக் காட்சிகளை பெறலாம். விவரங்களுக்கு அருகிலுள்ள டீலரை அணுகவும்.

HE. 260



நீ வயலின் வாசிக்கறதை நான் தடுக்கலியே!
கிளர்ச்சியாளர்
பேச்சு வார்த்தை
பேச்சு வார்த்தை
ஜெயில் சிங்
போராட்டம்
அடக்குமுறை
அம்பலம்
'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்ற அண்ணாவின் ஆழ்ந்த கருத்தினை நெஞ்சினில் ஏற்று...
...ரத்தத்தின் ரத்தமே!...பஞ்சாயத்து உள்ளாட்சி தேர்தல்களை மீண்டும், மீண்டும் ஒத்தி வைக்கிறோம்! அண்ணா நாமம் வாழ்க!

யாரிடம் பயப்படுகிறார் ஜியா?

பாரதத்துக்கு விஜயம் செய்த மார்கரெட் தாட்சர் ''இங்கிதம் அறியாதவர், வெளிப்படையாகப் பேசுகிறவர்'' என்று தாம் பெற்றுள்ள பெரும் புகழுக்கு ஏற்ப, 'பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதம் வழங்குவதில் என்ன தப்பு?' என்று அப்பட்டமாகக் கேட்டார். 'ருஷ்யா ஆப்கானிஸ்தானை ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது; அடுத்து பாகிஸ்தானுக்கும் ருஷ்யாவிடமிருந்து ஆபத்து ஏற்படலாம்; அதனால் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு யுத்தத் தளவாடங்களைத் தருகிறது' என்பது மார்கரெட் தாட்சரின் வாதம். இது அமெரிக்கா வெளியிட்டுள்ள கருத்துக்குப் பின்பாட்டுத்தான்.

'அமெரிக்கா ஆயுதங்களை விற்கிறது; பாகிஸ்தான் வாங்கிக் கொள்கிறது. இடையில் புகுந்து தடுக்க நாம யார்?—சட்டரீதியாக நமக்குத் தகுதி யில்லைதான். ஆட்சேபணை எழுப்ப தார்மீக ரீதியான தகுதியேனும் வேண்டும். அதையும் நாம் உலக அரங்கில் இழந்து விட்டு நிற்கிறோம். ஆப்கன் பிரச்னை கம்பூசியா பிரச்னை போன்றவற்றில் நமது ''வழ வழா, கொழ கொழா'' நிலை காரணமாக நமது மதிப்பு விழுந்து விட்டது. இதனால்தான் நமது ஆட்சேபணை இன்று எடுபட மாட்டேன் என்கிறது. 'பாகிஸ்தானுக்கு ராணுவத் தளவாடங்களைத் தந்தால் நமது உற்ற நண்பனாகிய இந்தியா வருந்துமே' என்ற எண்ணம் அமெரிக்காவுக்கு ஏற்படப்போவதில்லை. கூட்டு சேராக் கொள்கை நமக்கு நிரந்தர நண்பர்கள் என்று யாரையுமே ஏற்படுத்தித் தரவில்லை.

'அமெரிக்கா விற்கிறது; பாகிஸ்தான் வாங்கிக் கொள்கிறது' என்பது பெயரளவில்தான். ஏறத்தாழ இலவசம் என்றே வைத்துக் கொள்ளலாம்! கோடிக்கணக்கில் கொட்டிவாங்க பாகிஸ்தானிடம் பணம் கிடையாது. இன்று பெறும் மிக நவீன ஆயுதங்களுக்கான கிரயத்தை நாளடைவில் தருவதாக ஒப்பந்தம்—ஒப்புக்கு. பாதுகாப்பு தொடர்பான பொருளாதார உதவி என்றும் தனியே அமெரிக்கா தருகிறது. ருஷ்யாவிடமிருந்து ஆபத்து என்று பூச்சாண்டி காட்டியே அமெரிக்காவை தாஜா பண்ணிக்கொண்டு போய் விடுவார் ஜியா.

ஜியா யாரிடம் பயப்பட்டுக் கொண்டு ஆயுதக் குவிப்பு நடத்துகிறார் என்று புரியவில்லை. இந்தியாவிடமிருந்து அவருக்கு எந்த விதமான ஆக்ரமிப்புத் தொந்தரவும் இராது. மாறாக அமெரிக்கா ஆயுதங்களை இந்தியா மீது படையெடுத்த போது பாகிஸ்தான் துஷ்பிரயோகம் செய்ததாகத்தான் சரித்திரம் பேசுகிறது.

ஆப்கானிஸ்தானத்தை ஆக்கிரமித்துள்ள ருஷ்யாவிடமிருந்து படையெடுப்பை எதிர்பார்த்து இந்த ஆயுதக் குவிப்பை ஜியா நடத்துகிறார் என்றால் அதைவிட முட்டாள்தனம் இருக்க முடியாது. ஏனெனில், எத்தனை நவீன அமெரிக்க ஆயுதங்களை ஜியா வாங்கி வைத்துக் கொண்டாலும், நொறுக்குவது என்று தீர்மானித்தால் ருஷ்ய வல்லரசுக்கு அது ஓமப் பொடியாகத் தான் இருக்கும்.

எனவே ஜியா நடத்துவது அர்த்தமற்ற ஆயுதக்குவிப்பு. அவர் புத்திசாலித்தனமாகச் செயல்படுவதெனில் ருஷ்யா, இந்தியா ஆகிய இரு நாடுகளிடமும் நேசக் கரம் நீட்டி, அமைதிக்கும் பூரண சுதந்திரத்துக்கும் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

ஜியா தாமாக முன்வந்து இதைச் செய்வார் என்று காத்திராமல் புது தில்லியும் இதில் தீவிரம் காட்டவேண்டும். ''ஸிம்லா — டாஷ்கெண்ட் சூழல்'' மீண்டும் உருவாக வேண்டும். அமெரிக்காவிடம் போய் ''அநியாயம் பண்ணுகிறீர்களே'' என்று குறைப்பட்டு முட்டிக் கொள்வதைவிட நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான், ருஷ்யா ஆகியவற்றுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒரு மும்முனை சமாதான — சுதந்திர ஒப்பந்தத்துக்கு முயல்வது நல்லது. முனைந்தால் முடியாத காரியமும் அல்ல.

1981 மே 3

துன்மதி சித்திரை 21

மலர் : 39 இதழ் : 40



கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

நியூஸ் ஜூஸ்

—அனிதா



நமது நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் நாளிதழ் ஒன்றினை ஆட்டி அசைத்து, ''விளம்பரங்கள் பிரசுரிக்கவா பத்திரிகைக் காகிதம் இறக்குமதி செய்கிறோம்?'' என்று கேட்டதைப் பார்த்தால், நமது அரசாங்கம் விளம்பரங்களின் பரம விரோதியோ என்று தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல! ரேடியோ, டீ. வி. விளம்பரங்களை அரசு தாராளமாக வரவேற்கவே செய்கிறது!

அதுமட்டுமல்ல, ரேடியோ விளம்பர விகிதங்களை அண்மையில் உயர்த்தியும் இருக்கிறது. எவ்வளவு தெரியுமா?

150 சதம்!

பிரமிக்காதீர்கள்! உண்மைதான். சில பெரிய நகரங்களில் 200 சதம் வரை உயர்ந்துள்ளது! விளம்பரங்களால் இன்று வானொலிக்கு ஆண்டு தோறும் ரூ. 10 கோடி வருமானம் கிடைக்கிறது. இனி இது 20 கோடியாகவும் அதற்கு மேலும் உயரும்!

இந்த லட்சணத்தில் பத்திரிகைகள் விளம்பரங்களைப் பிரசுரித்துக் கொள்ளை லாபம் அடிக்கின்றன என்பது போல் பேசுவானேன்?

• • •

மதுராந்தகம் ஏரி வற்றிவிட்டது: தமிழக மெங்கும் வறட்சி நிலை தீவிரமடைந்துள்ளது: நாளுக்கு நாள் மின்வெட்டுத் தொல்லை கூடுகிறது. இதற்கெல்லாம் பருவ மழை பொய்ப்பதுதான் காரணம்.

பருவ மழை ஏன் பொய்க்கிறது? கானகங்கள் அழிக்கப்படுமாயின் பருவ மழை பொய்க்கும் என்கின்றனர் அறிஞர்கள். அண்மையில் ஒரிஸ்ஸா மாநிலத்தில் வீசிய சூறாவளிக்கு நூறு பேருக்கும் அதிகமாகப் பலியாயினர். இந்தச் சூறாவளிக்குக் காரணம் கானகங்கள அழிக்கப்பட்டதுதான் என்பதற்கு விஞ்ஞான ரீதியான விளக்கம் தரப்பட்டுள்ளது.

''வீட்டுக்கு ஒரு மரம்''; ''ஒரு மனிதன் ஒரு மரம்'' என்பதெல்லாம் வெற்றுக் கோஷங்கள். நகர்ப்புறங்களில் நடக்கிற காரியமில்லை. அயல் நாட்டுப் பிரதமர்களும் ஜனாதிபதிகளும் வந்து மரம் நடு விழா நடப்பதோடு சரி. இந்த பப்ளிஸிடி விழாக்களால் ஒரு பயனும் இல்லை.

சென்னையில் நம்மாலான கைங்கரியம், இருக்கிற ஒரு சில மரங்களிலும் விளம்பரங்களைக் கட்டித் தொங்கவிட்டு அசிங்கப்படுத்த அனுமதிக்கிறோம். மரங்களின் அழகைக்கூட ரசிக்க லாயக்கற்றவர்களாகி அவற்றை விகாரப் படுத்தி வருகிறோம்!

• • •

கானகம் வளர்ப்பது தொடர்பாக கோபால் சங்கர் ரங்கநாதன் என்பவர் எழுதிய ஒரு சிறு நூல் 79 இறுதியில் வெளியாயிற்று. ''திட்டத்தில் முதலிடம் குடும்பக் கட்டுப்பாடு: அடுத்த இடம் – கானகம் வளர்த்தல்'' என்பது தேச முன்னேற்றத்துக்கு ரங்கநாதனின் சூத்திரம்.

'உற்பத்திக்கு உதவுகிற மாதிரி வேலை வாய்ப்பு அளிக்கத் தரிசு நிலங்களில் கானகம் வளர்ப்பது போல் எளிதானதும் பயனுள்ளதுமான வேறு தொழில் கிடையாது' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

அவர் கணக்குப்படி நாட்டில் ஏற்கனவே அழிக்கப்பட்ட கானகங்கள் – தரிசாக உள்ள நிலங்கள் என்று எடுத்துக் கொண்டு 4–5 கோடி ஹெக்டேரில் புதிய கானகங்கள் வளர்க்கப்பட்டால், அவற்றிலிருந்து, முதல் மூன்று நான்கு ஆண்டுகள் சென்றதும் வருடமொன்றுக்கு 10,000 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும்! இரண்டு கோடிப் பேருக்குப் புதிதாக வேலை வாய்ப்புக்கள் ஏற்படும். ஆரோக்கியமான உடன் விளைவுகளாக நாடெங்கும் நீர்வளமும், நில வளமும் பெருகும்.

ஆனால் கூடவே ஒரு எச்சரிக்கையும் விடுக்கிறார் ரங்கநாதன். அரசாங்கம் தனது சோஷலிஸக் கோட்பாட்டுக்கு ஏற்ப இந்த பிரும்மாண்டத் திட்டத்தைத் தானே நிறைவேற்றுவதாக மேற்கொண்டால் அதிகாரிகள் பட்டாளமும் அவர்களுக்கு சிப்பந்திகளும் தாம் அதிகரிக்குமே தவிர உருப்படியாக ஏதும் நடக்காது.


எனவே, தனியாருடைய நிர்வாகப் பொறுப்பில் விட்டு லாபம் காண்பதை அவர்கள் குறிக்கோளாகக் கொண்டால் ஜப்பானோ அமெரிக்காவோ எங்கிருந்தாவது அவர்கள் நவீன உத்திகளைக் கற்றறிந்து வந்து கையாண்டு, வெற்றிகளைக் குவிப்பார்கள்.

ஆட்சிப் பொறுப்பில் உள்ள யாரேனும் இதைப் படிக்க நேர்ந்து, தப்பித் தவறி அவர்கள் கோபால் சங்கர் ரங்கநாதனின் கருத்துக்களை மேலும் ஆராய்ந்து அறிய விரும்புவார்களேயானால் – அப்படி ஓர் அதிசயம் நம் தேசத்தில் நடக்கக் கூடுமென்றால்– அவர்களுக்கு ரங்கநாதனின் விலாசம்: 2, "Flower mead" West Field Estate, B. Desai Road, Bombay-400 026.

ஏழாண்டு இல்வாழ்க்கை



✕ லவ் ஸ்டோரி திரைப் படத்தில்...



என் மனைவியின் கைப்பிடித்து நடந்து வந்த பாதையில், கண்ட உறவில் தென்றலின் இதம், தேவனின் கீதம்... விவரிக்க முடியவில்லை... என் அன்னையின் விருப்பப்படி நடந்த திருமணம்.

எங்கோ பிறந்தவர்கள் திருமணப் பந்தத்தால் ஓர் இரவில் தொடங்கி ஒருயிராக வாழ்கிறோம். இரண்டு குழந்தைகளைப் பார்க்கும் போதுதான் ஏழு ஆண்டுகள் ஓடிச் சென்ற கணக்குத் தெரிகிறது. என் மனைவிக்குப் படிக்கத் தெரியாது. ஆனால் அவள் எல்லாப் பண்புகளின் உறைவிடம்.

என் கண்கள் பக்கவாட்டில் மேயும்போது என் மனைவி ஒரு முறை ''இன்னொரு கல்யாணம் செய்துக்கோங்க''..என்றாள் கிண்டலாக. அன்று முதல் அவளை அருகில் வைத்துக் கண்கள் மொய்க்காது. ஒரு நல்ல மனைவி தெய்வத் துணை. அதிகாலையில் என்னை எழுப்பி, இரவு தூக்கத்துக்குச் செல்லும் வரை இரண்டு குழந்தைகளோடு என்னையும் ஒன்றாக்கி மூன்றாக்கிக் கொள்கிறாள்.

இருந்தாலும் என் மனம் பதினாறையும் பதினெட்டையும் தேடுகின்றது. தடுமாறும் என் மனம் என் புஷ்பாவை மட்டுமே நினைக்கப் பால முருகன் அருள் புரிய வேண்டும். பிரார்த்தனையும் மனைவி காட்டும் பிரியமும் மனஉறுதி அளிக்க வல்லவை என உணர்கிறேன்.

எஸ். இதயமது

திருமணமாகி ஆறு ஏழு ஆண்டுகள்வரை சாமர்த்தியமான முறையில் பெண்கள் குழந்தைகள் பெற்றுக் கொள்ளாமல் இருந்து விட்டுப் பிறகு குழந்தைகள் பெற்றுக் கொள்ள ஆரம்பித்தால் கணவனின் மனம் என்றும் மாறாது. திருமணமாகிச் சில வருஷங்கள் மனைவியிடமும் பிறகு குழந்தைகளிடமும் பாசம் வளரும். எனக்குத் திருமணமாகி ஏழாவது ஆண்டு தான் குழந்தை பிறந்தது. என் கணவர் முன்னைவிட இப்போது அன்பும் குடும்பத்தில் பாசமுமாக இருக்கிறார்.

வசந்தா கோவிந்தன்.

எனக்குத் திருமணமாகி ஏழு ஆண்டுகள் ஆகின்றன. (14–3–74). நான் என் மனைவியைத் திருமணமான புதிதை விட அதிகம் நேசிக்கிறேன். ஏனெனில் அவள் என்னை நன்கு புரிந்து கொண்டு மிக அன்போடு எல்லாவற்றையும் கவனித்துக் கொள்கிறாள். இந்த ஏழு ஆண்டுகளில் எங்களுக்குள் சிறு சச்சரவுகூட வந்த இல்லை. அதற்குக் காரணம் நான் அவளுடைய விருப்பு வெறுப்புக்களை மதித்து விட்டுக் கொடுத்து வருவதுதான். மனைவி அமைவ தெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்றாலும் நம் கையிலும் இருக்கிறது. சிற்சில விஷயங்களில் அநுசரித்துப் போக வேண்டும் மேல் நாடுகளில் எப்படியோ, எங்களைப் பொறுத்தவரை கணவன் – மனைவி அன்பு, வருடங்கள் செல்லச் செல்லத்தான் அதிகரிக்கிறது.

முரளிதரன் – பானுமதி

எங்களுக்குத் திருமணமாகி இந்த ஆண்டு ஏப்ரலுடன் ஏழு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. ஆரம்பத்தில் இருந்ததை விட எங்கள் நேசப் பிணைப்பு இப்போது அதிகம் என்றே கூறவேண்டும். இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பின்புகூட இன்றும் நான் அலுவலகத்தில் இருந்து திரும்பி வரும் போது அவள் வாசலில் காத்திருக்கத் தவறுவது இல்லை Seven Year Itch மேல் நாடுகளில் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் பாரதப் பண்பாட்டில் ஊறிய தமிழர்களிடம் அதுபோல் நேராது.

கதிர்வேல் – பிருந்தா

But eternal shame to be Dutch who cruelly speculated on the miseries of the Indians. They piled the Indians up in their ships and transported them to other countries to be sold as slaves.

Proenza (1662 AD

5

தோதா குதிரையைத் தட்டிச்சென்றது.

போகும்போது 'முட்டாள்' என்று வார்த்தையைச் சொடுக்கியது.

இரண்டும் அர்ச்சுனன் மனத்தில் இரண்டு கன் அம்புகளாகப் புதைந்தன.

அந்த வெய்யில் தகிப்பை மீறி ஒரு அந்தகாரம் 'பொல்'லென்று மூடியது.

சிறிது நேரம் கழிந்துத்தான் பிரக்ஞை திரும்பியது.

''நண்பன்! என் நண்பன்!'' என்று முனகினான். 'என் நண்பனு அவன்? என்ன துரோகம்! பச்சைத் துரோகம்! நான் இறக்கப் போகிறேன் என்று தெரிந்தும் என்னைப் புறக்கணித்துப் போகிறானே!''

வயிற்றிலிருந்து அக்கினியாக மூச்சு எழுந்து அவன் நாசியை அனலாக்கி வெளியேறியது.

கண்களில் ரத்த பாஷ்பமாக ஒரு வெப்பு ஊறியது.

அவன் கண் முன்னால் யுத்த களத்தில் கடைசிக் காட்சி நினைவுக்கு வந்தது.


ரங்கப்பா கடைசி மூச்சுக்களுடன் படுத்திருந்தார். அவர் வாயருகில் சென்று அவர் சொன்ன விஷயங்களைக் கிரகித்து உடனே போர்க்களத்தை விட்டு வெளியேறும் போது யாரோ பின்னால் அம்பு எய்து அவனைக் காயப்படுத்தினார்களே, அது இந்தத் தோதா தானோ?

தோதா! நயவஞ்சகமாக நீ நடித்திருக்கிறாய்! நான் போகும் விஷயத்தை அறிந்து கொண்டு என் பின்னால் மறைந்து என்மீது அம்பு எய்திருக்கிறாய்! தோழன் போல் நடித்து எதிரிக்கு உடந்தையாக இருந்திருக்கிறாய். இதோ இறக்கப் போகிறேனே! இதற்கான முழுக் காரணமும் நீயேதான்!

வஞ்சகா! எவ்வளவு கேவலமான காரியத்தைச் செய்து அபகீர்த்தியைச் சம்பாதிக்கிறாய்!

அர்ச்சுனன் பல்லை இறுக்கினான்.

அவன் முன்னால் தோதாவின் உருவமும் அடிக்கடி தோன்ற, அவன் மூச்சு கொதிஉலைபோல் பயங்கர நெருப்பைக் கக்க ஆரம்பித்தது.



ஆத்திர எண்ணங்கள் வேகமாக வர, திடீரென்று 'நான் ஏன் சாகவேண்டும்?' என்ற உத்வேகம் எழ ஆரம்பித்தது.

'நான் ஏன் சாக வேண்டும்? நான் செத்தால் என் உடம்பு வேகாது. என் ஆத்மா நற்கதி அடையாது. தோதாவைப் பழிக்குப் பழி வாங்கினால்தான் என் மனம் சமாதானம் அடையும். கடவுளே! எனக்கு உயிரைத் திருப்பிக் கொடு!'

இறுக்கிய பற்களிடையே பிரார்த்தனை செய்தவாறே,

மெள்ளக் கை ஊன்றினான். என்ன வலி! முதுகில் தோதா கொடுத்த காயம்! காலை மெள்ள மடிக்க முனைந்தான். முட்டில் ஒரு காயம்! அது போரிடும்போது ஏற்பட்டது.

'உடலே! சொன்னபடி கேள்! எனக்கு இப்போது புது லட்சியம் வந்திருக்கிறது. அது முடியும்வரை தயவுசெய்து கேள், உடலே!'

ஏனெனில் எழுந்திருக்க முயலும்ஒவ்வொரு முறையும் உடல் வலுவில்லாமல் கீழே உதிர்ந்தது. 'சுவாமி! எழுமலையானே! நான் இறக்க விரும்பவில்லை. நான் இறக்க விரும்பவில்லை!' என்று கத்தினான் அவன்.

சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் சென்னை நகர் எப்படி இருந்தது பார்க்கிறீர்களா?

மன்னிக்கவும்.

சென்னை நகரம் என்ற பெயர்கூட அப்போது உற்பத்தியாகவில்லை.

எங்கும் கன்னித்தனம் அழியாத காடுகள் மூடியிருந்தன.

சிறுசிறுவென்று ஓடைகள், வாய்க்கால்களின் ஓட்டங்கள் எங்கும் ஊடுருவியிருந்தன.

கூவம், அடையாறு நதிகள் மின்னல் கீற்றுகள் போல் கிளை விட்டு ஓடின.

கிழக்கே அழகான நீல அலைகள் கரைகளை அலம்பிக் கொண்டிருந்தன.

சிற்றூர்கள் இங்கும் அங்கும் புள்ளிகளாகக் கிடந்தன.

ஊர்க் கோபுரங்கள் பசும் கொழிப்புகளிடையே இலை மறைவு காய் மறைவாக ஊசலாடின.

பெரிய பெரிய மயில்கள் ஒய்யாரப் பெண்கள் போல் எங்கும் உலாவின.





அரவிந்தின் அட்டகாசங்கள்!

"அரவிந்துக்கு இப்போது மூணு முடிந்து நான்கு வயது. இதற்குள் அவன் செய்யும் விஷமங்கள் கொஞ்ச நஞ்சம் அல்ல. இவனுக்காகவே வீட்டில் டெலிபோனை ரொம்பவும் உயரே தான் வைத்திருக்கிறோம். தாழ்வாக இருந்தபோது டெலிபோன் பேசுகிறேன் என்று ரிஸீவரை அவன் பதம் பார்த்தது, எங்களுக்குச் சரியான அனுபவம்!

"ஒருமுறை இவன் அப்பாவைப் பார்க்க நண்பர் ஒருவர் வந்திருந்தபோது வாசலில் நின்ற அவர் ஸ்கூட்டரில் இவன் தன் கைவரிசையைக் காட்ட, கடைசியில் மனுஷன் பரிதாபமாகத் தள்ளிக் கொண்டு போனார்!

"எனக்கு உடம்பு சரியில்லாதபோது, என் கணவர் ஒரு முறை சமையல் அறையில் எனக்காகச் சுடு தண்ணீர் போட்டுக் கொண்டிருந்தார். நடுவே போன் வந்தபோது எடுத்த அரவிந்த், கொஞ்சமும் தயங்காமல் "அப்பா சமையல் செய்கிறார்" என்றானே பார்க்கலாம். நண்பர்கள் இன்றைக்கும் இவரை அதுபற்றிக் கிண்டல் செய்து கொண்டிருக்கிறார்கள்!

"யாராவது மொட்டைத் தலையர்கள் வந்தால் இவனுக்குக் குஷி பிறந்துவிடும். பேராசிரியர் மேத்தா என்பவர் என் கணவரின் ஆசிரியராக இருந்தவர். அரவிந்தின் பிறந்த நாளுக்காக அவர் வந்தபோது உப்பு மூட்டை தூக்கச்சொன்னான். அவரும் பையன் ஆசையாய்க் கேட்கிறானே என்று முதுகில் ஏற்றிக் கொண்டார். அவ்வளவுதான். அவர் தலையை மிருதங்கம் வாசிப்பது போல் பதம் பார்த்து விட்டான்!

"இவனோடு சினிமா போனால் படம் பார்த்த மாதிரிதான். என் கணவரோ அல்லது நானோ யாராவது ஒருவர் இவனைத் தூக்கிக் கொண்டு வெளியே நிற்பது நிச்சயம். சும்மா நிற்கவும் விட மாட்டான். போகிற வருகிற ஆட்டோ, டாக்ஸிகளை எண்ணச் சொல்வான்!

"குறும்புத்தனம் ஒரு புறம் இருந்தாலும் தெரிந்தோ தெரியாமலோ ஏழைகள்என்றால் இவனுக்கு அலாதி பிரியம் ஏற்படுகிறது. கொடுக்கிற தின்பண்டங்களை அவர்களோடு பகிர்ந்து சாப்பிட விரும்புகிறான். சுற்று வட்டாரத்தில் பல ஏழைக் குழந்தைகள் இவனுக்குச் சினேகம்" என்று சொல்கிறார் அட்டையில் குழந்தை அரவிந்துடன் சேர்ந்து சிரிக்கும் தாய் மீனா கிருஷ்ணமூர்த்தி.

பேட்டி: சிக்கி

வண்ணப்படம் எடுத்தவர்: யோகா

மான்கள் கூட்டம் கூட்டமாக மௌனச் சித்திரம் போல் பசுமைகளை ஊடுருவின. எப்போதாவது குதிரை ஓடும் குளம்பொலி கேட்டால் உண்டு.

வாழ்க்கை மிக நிதானமாக அங்குல வேகங்களில் நகர்ந்து கொண்டிருந்தது.

போக்கு வரத்துக்கு ஒரே வழி நடைதான். ஆறுகளும் நீர்நிலைகளும் குறுக்கிட்டதால் மாட்டு வண்டிகள் மிக அதிகமாக உதவவில்லை.

வசதி படைத்தவர்கள் குதிரைகளிலும், பல்லக்குகளிலும் சென்றார்கள். சாதாரண டோலிகளும் புழக்கத்தில் இருந்தன.

இதனால் பிரயாணமே மிக மெதுவாக ஊர்ந்தது அந்நாளில்.

மயிலாப்பூர் கிராமத்திலிருந்து மாம்பலம் கிராமத்துக்குச் செல்லக் கிட்டத்தட்ட ஒரு காலைப்பொழுது ஆகிவிடும்.

மயிலாப்பூர் கிராமத்தில் வான் கோயன்ஸ் வந்து இறங்கியபோது அந்தி நேரம்.

கபாலீச்வரத்திலிருந்து சந்தியா மணிகள் கணார் கணார் என்று ஒலித்தன.

எப்போதும் நிசப்தமே உறையும் அந்தப் பிரதேசத்தில் மணிகளின் நாதங்கள் இனிய சங்கீதமாகவே கேட்டன.

சுவர்ணமுகி பிரார்த்தனை செய்தாள்.

செங்கழுநீர்ப்பட்டு (செங்கல்பட்டு) சீர்மைத் தலைவர் சென்னப்ப நாய்க்கருடன் மயிலைக் கோயிலுக்கு வந்திருக்கிறாள்.

அந்தநாளைக் கண்ணீருடன் நினைவு கூர்ந்து, "கபாலீச்வரா! என்னைக் காப்பாத்து!" என்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

இரவு மனமில்லாமல் உண்ட பிறகு, தூக்கம் சரியாக வரவில்லை.

கோவிலுக்கு வடபுறம் சாந்தோமேக்குப் போகும் சாலை ஓரமாக அவர்கள் தண்டு இறங்கி யிருந்தார்கள்.

மெல்லிய நிலா அரைத் தூக்கமாக எங்கும் விழுந்திருந்தது.

கப்ரேக்களில் ஒருவன் அடிக்கடி திவர்த்தியில் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தான்.

அதன் வெளிச்சங்கள் இங்குமங்கும் ஆடி திடீர் நிழல்களை அடிக்கடி ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

சுவர்ணமுகி மெள்ள எழுந்தாள். நடுநிசியாக இருக்கும்.

மெள்ள அபரஞ்சியை எழுப்பினாள். பெரிதாகக் கொட்டாவி விட்டுக் கொண்டே அவள் எழுந்தாள்.

''அபரஞ்சி! நாம் தப்பிக்க வேண்டும்!'' என்றாள்.

''முடியாது. நம்ப ஆறு பேர் கையையும் கட்டியிருக்காங்க!''

''அது தெரியும். ஆறு பேரும் சேர்ந்து போக வேண்டும்.''

அபரஞ்சிக்கு மூளை பற்றியது.

மெள்ள ஒவ்வொருத்தரையும் எழுப்பினாள். ஒவ்வொருவரிடமும் விஷயத்தைச் சொல்லி இணங்க வைப்பதற்கு ஒரு நாழிகை ஓடியது.

பிறகு எல்லோரும் சம நேரத்தில் தரையோடு மண்டியிட்டு ஊர்ந்து வேலி ஓரம் வந்தார்கள்.

அது வெறும் முள் வேலி. இரவு பாதுகாப்புக்காகக் கப்ரேக்கள் வெட்டிப் போட்டிருந்தார்கள்.

கைகளை உபயோகிக்க முடியாத நிலையில் யோசனை செய்து ஆறு பேரும் சேர்ந்து தாவ வேண்டும் என்று திட்டமிட்டு அதன்படியே தாண்டினார்கள்.

விடுதலை கிடைத்த சந்தோஷத்தில் முன்னும் புதரும் கவனியாமல் ஓடினார்கள். மாட வீதிகளில் புகுந்து நிழல்களில் மறைந்தார்கள்.

இளம் காலையில் எல்லோரும் சேர்ந்து திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்தபோது முதலில் அந்தச் சத்தத்தைக் கேட்டு எழுந்தவள் கவர்ணமுகி.

வான் கோயன்ஸும் ஒரு கப்ரேயும் பலமாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

''அட தந்திரம் தெரியாத பெண்களா! இங்கேயா இருக்கிங்க? எழுந்திருங்க எழுந்திருங்க!'' என்றார் கோயன்ஸ்.

அவர் நின்ற நிலை, அநாயாசமாகப் பார்த்த பார்வை, சிரித்த சிரிப்பு எல்லாமே கவர்ணமுகியைக் கலவரப்படுத்தின.

அவளைத் தொடர்ந்து ஒவ்வொரு பெண்ணாக எழுந்திருக்க, எல்லோரும் கோயன்ஸைப் பார்த்து விக்கித்து நின்றார்கள். முந்திய இரவில் யாருடைய உதவியையாவது பெற்றுத் தங்கள் கைப் பிணைப்புக்களை அகற்றாதது தங்கள் பிழை என்று இப்போது நினைத்தார்கள்.

எல்லோரும் கைப்பிணைப்புக் கயிற்றோடு சேர்ந்து அகப்பட்டது அவர்களுக்கு அவமானத்தைக் கொடுத்தது.

கப்ரே அவர்களுக்கு இரண்டு கசையடி கொடுத்து.—மாட வீதி வழியே அழும் கண்களோடு அழைத்துச் செல்ல,

அந்தக் காலைக் காட்சியைப் பார்த்த வீதி ஜனங்கள் உடனே வீட்டுக்குள் ஓடிக் கதவு

தலைப்புக் கொடுங்கள்
(போட்டி முடிவு)

சரியான விடைகள் :

1. நீந்த மறந்து விடுவானா?
2. இப்படியும் ஒரு தொழில்!
3. நினைத்த விபரீதம் நடக்கிறது!
4. நேராகச் சுட்ட அன்பு

எழுத்துக் கூடப் பிசகாமல் சரியான தலைப்புக்களை எழுதியவர்கள் பட்டியல் அடுத்த வாரம்.

களைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டவரே அன்றி, உதவி ஏதும் செய்ய வரவில்லை.

''பயந்தாங்கொள்ளி இந்தியர்கள்! இவர்களுக்கு ஒரு ராஜா!'' என்று பலமாகச் சிரித்தவாறு கோயன்ஸ் ''அரும்பா! நேரே இவங்களை ஸாந்தோமேக்கு ஓட்டு! முதல்லே கப்பல் ஏத்திட்டு வேறு வேலை பார்க்கணும்'' என்று சொன்னான்.

கட்டியே அவர்களைச் சிறு ஓட்டமாகத் துரத்திக்கொண்டு வெய்யிலில் கனக்கும் வேளையில் ஸாந்தோமேயின் மண் சுவர்க் கோட்டையை அடைந்தான்.

கோட்டை வாசலைக் கடந்து உள்ளே நுழைய, முற்றிலும் புதிய காட்சி ஒன்று உதயமாகியது.

அந்தப் பகுதி ஒரு போர்ச்சுக்கீசிய நகரம் போல் ஐரோப்பியக் களையோடு தெரிந்தது.

உயரமான கவுன்கள் அணிந்த வெள்ளைக்காரப் பெண்களும்.

உயரத் தொப்பி, கனத்த கோட்டுகள் தரித்த வெள்ளைக்கார ஆண்களும் தெருக்களில் விசித்திர பாஷை பேசிக்கொண்டு உலாவினார்கள்.

முதல் தெருவைத் தாண்டி, இரண்டாவது தெருவில் நுழையும்போது,

எதிரே ஒரு வெள்ளைக் குதிரைமீது அமர்ந்து அமர்க்களமாகச் சிரித்துக் கொண்டு ஒரு வெள்ளைக்காரர், தமது வேலைக்காரர்கள் சூழ வந்து கொண்டிருந்தார்.

கோயன்ஸைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டு குதிரையை நிறுத்தி ''மிஸ்டர் கோயன்ஸ் ஏது இங்கே? உங்கள் வியாபாரப் பொருள்கள் எங்கே? வேலையாட்கள் எங்கே?'' என்று சரமாரியாகக் கேட்டான்.

கோயன்ஸ் உடனே — ''என் குடும்பம் மயிலாப்பூரில் இருக்கு. மிஸ்டர் டே! இவங்க ஓடப் பார்த்தாங்க! இவங்களை முதல்லே கொண்டு போய்க் கப்பல்லே வித்துடப் போறேன்'' என்றான்.

''அப்படியா! எல்லாரும் பெண் அடிமைகளா?'' என்று சொல்லி முதல் முறையாக அவர்களை நோக்கித் திரும்பினார்.

திரும்பியவர் படக்கென்று பார்வையை நிறுத்தினார்.

அவர் வாய் பிரிந்து விரிந்தது.

அவர் பார்வைக்கு நேர் இலக்கில் சுவர்ணமுகி நின்று கொண்டிருந்தாள்.

மிகவும் களைப்பான நேரத்திலும் அவளது அழகு பொலிவாக விகசித்து வெளியே வந்து கொண்டுதான் இருந்தது.

அவள் சோக விழிகளில் கூட மெல்லிய நீல வெளிச்சம் ஓடியது.

வியர்வை நிரம்பிய வதனம் ஒரு கடல் சங்கு போல் சுமை வெளுப்பாக மின்னியது.

''அடே...!'' என்று சொல்லிக் குதிரையை விட்டுக் கீழே இறங்கினார்.

சுவர்ணமுகியின் அருகில் போய் நின்று, ''இவளை எனக்குக் கொடு'' என்றான்.

டேயின் கண்கள் அபரிமித வேட்கையுடன் அவள் உருவத்தில் மொய்த்தன.

(தொடரும்)

''என்னடா உன் கிராமத்து டீஸ்டாலைப் போய் ஃபைவ் ஸ்டார் ஓட்டலுங்குறே?''

''இந்தக் கிராமத்துக்கு ஷூட்டிங்குக்கு வந்த ஐந்து சினிமா ஸ்டார்கள் அங்கே டீ குடிச்சாங்களே!'' — அ. இராமதாஸ்





''எனக்கு நீங்கள் ஒரு லவ் லெட்டர் டைப் செய்து தருவீர்களா?''

''யெஸ் ஸார்!... யார் முகவரிக்கு?''

''உன் முகவரிக்கு....!''

டி.கே.ஸியின் இலக்கியக்கொள்கைகளோடும், கலை ஆய்வுகளோடும் சேர்த்து ரசிக்க வேண்டிய அத்தனை தனித் தன்மை வாய்ந்தவை, அவருடைய வாழ்க்கை முறையும் பழக்க வழக்கங்களும்!

வீட்டில் யாருக்காவது காய்ச்சல் கண்டால் டி.கே.ஸி. என்ன செய்வார் தெரியுமா? அப்படியே குழாயடியில் கொண்டு உட்கார்த்தி விடுவார்! அவருடைய இதயத்தில் கம்பருக்கு அடுத்த இடம் பச்சைத் தண்ணீருக்கு என்று சொல்ல வேண்டும்!

டைபாய்ட், நிமோனியா, ப்ளூரஸி, வேறு வேறு விஷக் காய்ச்சல்கள் எதுவாக இருந்தாலும் சரி; ரண சிகிச்சையே செய்ய வேண்டிய ராஜ பிளவை வந்தே துடியாகத் துடித்தாலும் சரி, பச்சைத் தண்ணீரிலே குளிப்பாட்டி விடுவார் டி.கே.ஸி! புண்களுக்கு அவர் போடுகிற களிம்பு என்ன தெரியுமா? தண்ணீரிலே நனைத்த ஈரத் துணி 'பாண்டேஜ்'!

ஒரு சமயம் தொண்டைப் புண்ணுக்கு வைத்தியம் என்ன என்று டி.கே.ஸி. ஒரு கடிதத்தில் 'ப்ரஸ்க்ரிப்ஷன்' எழுதி அனுப்பினார். 'ப்ரஸ்க்ரிப்ஷன்' எதுவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? இதோ பாருங்கள்:

''சாமானியமாகத் தொண்டையில் புண் இருந்தால் அது ஆறுதபடி பல நாள் தொந்தரவு கொடுக்கலாம். அதற்குச் செய்ய வேண்டிய வைத்தியம் இது:

இரவில் படுக்கப் போகும்போது ஈரத் துணி ஒன்றைச் சுற்றி, அதற்கு மேல் பிளானலையோ, பட்டையோ சுற்றிக் கொள்ள வேண்டியது. அவ்வளவுதான். நன்றாய்த் தூக்கம் வந்துவிடும். அனேகமாய்த் தொண்டையில் உள்ள புண் ஆறிவிடும். இது சொந்த அனுபவம். ஒரு பத்து நாள் தொடர்ந்து செய்தால் முற்றிலும் குணம் உண்டாய்விடும்.

இந்த வைத்தியத்துக்கு ஒரே ஆக்ஷேபணை தான் இருக்கக் கூடும். அதாவது, செலவு இல்லாத காரியமாயிருக்கிறது என்பதுதான்! செலவு இல்லாமல் போனால் நமக்குக் கஷ்டம்தான். ஆனால் வியாதிக்கு அந்த விஷயம் தெரியாதல்லவா? ஏதோ ரொம்பச் செலவு செய்துதான் காரியம் நடந்திருக்கிறது என்று எண்ணிக் கொண்டு பயந்து விலகிவிடும்.

உலகம் இப்படி இருக்கிறது!''

இது ஒரு கடிதம். இதே வைத்திய முறையைப் பற்றி இன்னொரு கடிதத்தில் இன்னொரு பகுதியைப் பாருங்கள்:

''இங்கே எல்லோருக்கும் என் வைத்தியந்தான் அனேகமாய்! குளிர்ந்த தண்ணீரில் குளித்து எம். எஸ்.ஸுக்கும் ராதாவுக்கும் காய்ச்சல் நன்றாகக் குணமாகிவிட்டது!''

இன்னொரு கடிதம்:

''எனக்குக் காலில் இருந்த புண் குணமாகி விட்டது. (எல்லாம் ஈரத் துணி வைத்தியம் தான்!) அன்று மலை மேல் அரை மைல் தூரம் ஏறிவிட்டு வந்தேன்! ஒரு மைல் தூரம் கூடப் போய்விட்டு வந்திருக்கலாம், மிஸிஸ் சாஸ்திரிகளும் உடன் வந்ததால்! என்னத்துக்கு முதல் நாளே அவ்வளவு அதிகப்பிரசங்கித்தனம் என்று அரை மைலோடு நிறுத்திக் கொண்டோம்!''

இது பச்சைத் தண்ணீர்வைத்தியம் பற்றிய இன்னொரு கடிதம்!


மேனாடுகளில் பச்சைத் தண்ணீர் வைத்தியத்தைச் சில புகழ் பெற்ற நிபுணர்கள் மிகவும் உயர்வாக எழுதியிருக்கிறார்கள் என்பது உண்மையே. என்றாலும் 105 டிகிரி காய்ச்சல் கொளுத்தும்போது ஷவரிலே போய்த் தலையைக் கொடுப்பதற்கு வேண்டிய துணிச்சல் எத்தனை பேருக்கு வரும்?

ரா. கி. அவர்கள் ஆனந்த விகடன் திரு

ரசிகமணி ரசித்த மணிகள்



X கல்கி, டி. கே. ஸி.



மீ. ப. சோமு

வாக ஆசிரியராக இருந்தபோது, 42 ஆண்டு களுக்கு முன் ஒரு குளுகுளுத்தமிழ்க் கும்மாளி போட்டுக் கொண்டு இது பற்றி எழுதினார்:

''சென்ற வருஷம் மழைக் காலத்தில் ஒரு நாள் (டி.கே.சி. அப்போது சென்னையில் இருந்தார்.) அவருக்கு உடம்பு சுரமென்றும், படுத்த படுக்கையாய் இருக்கிறார் என்றும் கேள்விப்பட்டு அவரைப் பார்க்கச் சென்றேன். அவர் வீடு அடைந்ததும் நான் கண்ட காட்சி — அதைக் குறிப்பிடத் 'திகைப்பு', 'பிரமிப்பு' என்பனவெல்லாம் சரியான வார்த்தைகள் அல்ல! அப்போது 'சோ'வென்று மழை பெய்து கொண்டிருந்தது. ஆனால் சுரமாய்க் கிடப்பவர் என்று நான் கேள்விப்பட்ட கனவான் செய்ததென்ன? முற்றத்தின் மூலையில் மாடியில் பெய்த ஜலம் கொட கொடவென்று தாரையாய்க் கொட்டிக் கொண்டிருந்தது. அந்தத் தாரையில் அவர் சாவதானமாக உட்கார்ந்து ஸ்நானம் செய்து கொண்டிருந்தார்! ஸ்நானம் முடிந்ததும் 'உங்களுக்குசுரம் என்று சொன்னார்களே' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். 'ஆமாம் நேற்று 104 டிகிரி இருந்தது. இன்று 102 இருக்கிறது' என்றார். 'பின் அதற்குள் பச்சை ஜலத்தில்....'' என்று நான் இழுக்க, ''ஆமாம். சுரத்துக்கு இது சிகிச்சை. குளிர்ந்த ஜல ஸ்நானத்தினால்தான் நேற்றை விட இன்று குறைந்திருக்கிறது. நாளைக்குப்பூராவும் சரியாகிவிடும்!'' என்று முடித்தார்.

பிறகு, தமது மலேரியா சுரத்தின் கதையை ஆரம்பித்தார். பதினைந்து வருஷ காலம் மலேரியாவினால் மிகவும் கஷ்டப்பட்டதாகவும், எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் பயனில்லை என்றும், கடைசியாகக் குளிர்ந்த ஜல ஸ்நானத்தின் மூலம்தான் மலேரியாவை வெற்றி கொண்டதாகவும் கூறினார்.

இவ்வளவுக்குப் பிறகு என்னுடைய பெருமையை நான் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியுமா? என்னுடைய ஜலதோஷத்தின் சரித்திரத்தை எடுத்து விட்டேன். அவருடைய முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடிற்று. தம்முடைய ஜல சிகிச்சை முறையைச் சோதனை செய்வதற்கு இவ்வளவு நல்ல பாத்திரம் கிடைத்ததே என்று போலிருக்கிறது! ''தினம் இரண்டு தடவை காலையிலும் மாலையிலும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து வாருங்கள். ஜலதோஷம் நீங்காவிட்டால் என்னைக் கேளுங்கள்!'' என்றார் அவர். 'ஆள் உயிரோடு இருந்தால் அல்லவா உங்களைக் கேட்பதற்கு?' என்றேன். பிறகு குளிர்ந்த ஜல ஸ்நானம் சம்பந்தமாக என் அனுபவங்களைக் கூறினேன். ஒரு தரம் குளிர்ந்த தண்ணீரில் குளித்து ஜலதோஷம் அதிகமாகிக் குளிர்ந்த தண்ணீர் ஸ்நானத்துக்கே முழுக்குப் போட்டதையெல்லாம் சொன்னேன். 'நீங்கள் ஒரு தடவை ஸ்நானம் செய்துவிட்டு நிறுத்தியதுதான் தவறு. தொடர்ந்துசெய்திருக்கவேண்டும்!''என்றார்.

நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் அவரோ நான் அங்கிருக்கும்போதே மறுபடியும் சென்று முற்றத்தின் மூலையில் உட்கார்ந்து மழைத் தாரையில் ஸ்நானம் செய்து விட்டு வந்தார். அல்லாமலும் வீட்டில் உள்ள ஏழு வயதுப் பெண் குழந்தையைக் கூப்பிட்டார். 'அம்மா, உனக்கு சுரம் கிரம் வந்தால் என்ன செய்வாய்?' என்று கேட்டார். 'பச்சைத் தண்ணீரில் குளிப்பேன்' என்றது குழந்தை. இதற்குப் பிறகு என் உயிருக்குத் துணிந்தேன். தும்மலுடன் வீட்டுக்குள் நுழைந்தவன் கொட்டுகிற மழையில் நேரே குழாயடிக்குச் சென்று உட்கார்ந்தேன். அன்று என் வீட்டில் ஏற்பட்ட அல்லோல கல்லோலத்தைச் சொல்ல முடியாது! ஏறக் குறைய ஒன்பது மாதம் ஆகிறது. தினந்தோறும் தவறாமல் குளிர்ந்த ஜலத்தில் இரண்டு தடவை ஸ்நானம் செய்து வருகிறேன். உயிரோடு இருக்கிறேன் என்பது வெளிப்படை! குளிர்ந்த ஜலம் வெற்றி பெற்று விட்டது. ஜலதோஷத்துக்குத் தோல்விதான்!''

அருவியில் குளித்த மாதிரியே இருக்கிறதல்லவா கல்கியின் குளிர் ஸ்நானத் தமிழ்!



பச்சைத் தண்ணீர்




''அவர்கள்'' கமல்-பாலசந்தர்

51.	தர்ம சங்கடமான தருணம்?	—''என்னைத் தெரிகிறதா?'' என்று கேட்டவரிடம், ''தெரிகிறது'' என்று போய் சொன்ன பின்பு, ''எங்கே யார் என்று சொல்லுங்கள் பார்ப்போம்?'' என்று அவர் கேட்கும்போது....
52.	பிடித்த மலர்?	—பாசமலர்.
53.	விரும்பும் நிறம்?	—வறுமையின் நிறம்.
54.	அதிகமாக ரசிப்பது?	—சினிமாவை.
55.	பார்த்த படங்களில் பிடித்தமான ஆங்கில, இந்தி, மலையாள, தமிழ், தெலுங்கு படங்கள்?	—இந்தி: முகலே ஆஜாம்; மலையாளம்: அரை நாழிகை நேரம்; ஆங்கிலம்: Citizencane தமிழ்: ராஜ பார்வை; தெலுங்கு: அம்மா வாசை சந்துருடு.
56.	தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி பிடித்தமான நட்சத்திரங்கள்?	—சிவாஜி, சத்யன், ரங்காராவ், திலீப்.
57.	உணவில் அதிகமாக விரும்புவது?	—சாற்றமுது.
58.	பெரிய தோல்வி?	—ஏற்பட்டதே இல்லை.
59.	அரசியலில் பிடித்த தலைவர்?	—சுபாஷ் சந்திர போஸ்.
60.	பிடித்தமான ஊர்?	—பரமக்குடி.
61.	பள்ளியில் அதிகபட்ச மார்க்? சப்ஜக்ட்?	—ஆங்கிலம்: 100க்கு 25.
62.	குறைந்தபட்ச மார்க் எதில்?	—கணக்கு. சைபரைவிடக்குறைவாக வாத்தியாரால் மார்க் போட முடியவில்லை.
63.	அடி வாங்கிய நிகழ்ச்சி?	—யாரிடத்தில்என்பதைத்தெளிவுபடுத்தவும்!
64.	வெட்கப்படுவது?	—பெண்களுக்கு அழகு!
65.	கோபம் வருவது?	—முரடர்களின் உரிமை!
66.	அமைதியைத் தருவது?	—ஆசிரமங்களின் கடமை!
67.	பெரிய வெற்றி?	—வரவிருக்கிறது.
68.	பிடிக்காதவர்களை வெளியே அனுப்ப மார்க்கம்?	—கேட்டுதான் வழி.
69.	எப்பொழுது ஜூனியர் கமல்?	—எனக்கு மகன் பிறக்கும்போது!
70.	இன்பம் உங்களுக்கு எங்கே உள்ளது?	—எனக்குள்ளே.
71.	வீட்டில் பாசத்தை பொழிபவர்?	—என் மனைவி
72.	சுஹாசினியின் நடிப்பைப் பற்றி?	—சிறப்பாக நடிக்கிறாள்; நடிக்க வேண்டும் – என் வீடே கலைக் குடும்பமாக இருப்பதையே நான் விரும்புகிறேன்.
73.	அழகானது?	—என் எதிரே நிலைக்கண்ணாடி.
74.	யாராவது பிறந்த நாள் பரிசளிக்க விரும்பினால் என்ன பரிசைப் பெற விரும்புகிறீர்கள்?	—மனம் நிறைந்த பாராட்டுக்களை
75.	உங்களுக்குப் பிடித்தமான ஸ்வீட்?	—இளமையான உதடுகள்

(தொடரும்) —சலன்

டெட் கட்டி உபயோகியுங்கள், வெண்மையை நாடுங்கள்



இன்று முன்னைவிட ஏராளமான மக்கள் டெட் கட்டியின் சிறப்பான சலவையை [redacted]

அன்று இரவு கஸ்தூரியும் வெகு நேரம் உறங்கவில்லை. 'மேற்கொண்டு என்ன செய்வது?' தனக்குள்ளேயே எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்தவளுக்குத் திடீரென்று பங்களூர்த் தோழி நர்மதாவின் நினைவு வந்தது. பின்னர்தான் மனத்தில் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டது. விடியற்காலை வேளை உறக்கத்தின் மயக்கத்திலே ஆழ்ந்து போய்விட்டாள்.

புதற்றமாக விழித்துக் கொண்டு எழுந்த போது பொழுது விடிந்து வெகு நேரமாகி விட்டதை உணர்ந்து பரபரப்பாக வெளியே வந்தாள். சமையல் அறையில் வழக்கம் போல் மருமகள் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

முன்னறையின் நடுவில் கிடந்த வட்ட மேஜை மேல் ஒரு கடிதத் துண்டு. கண்ணாடி பேப்பர் வெயிட்டின் கீழ்... காற்றில் சலசலத்தது. அவசரமாகப் பிரித்தாள்.

''கம்பெனி விஷயமாக ஹைதராபாத்துக்கு இரண்டு வாரம் போக வேண்டியிருக்கிறது. ஆபீஸிலிருந்தே இரவு விமானத்தில் போய் விடுவதாக உத்தேசம். என் மனம் இருக்கும் நிலையில் நான் தனிமையாக இருப்பதுதான் உத்தமம் என்று நினைக்கிறேன். திரும்பி வரும்பொழுது வீட்டில் அந்த நிம்மதி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கிளம்புகிறேன். —ஹர்ஷன்.''

தாய்க்கு மகன் அவசரத்தில் கிறுக்கி வைத்து விட்டுப் போன கடிதத் துண்டு அது.

கோபத்துடன் அதைச் சுக்கலாகக் கிழித்துக் குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு, அலுவலகத்துக்குக் கிளம்ப ஆயத்தமானாள் கஸ்தூரி.

மேஜை மீது தட்டில் இட்லியும், சாம்பாரும் பரிமாறிவிட்டு, காப்பி டம்ளரை வைத்த அந்தப் பிஞ்சு விரல்களைப்பார்த்தபோது அவள் இதயத்தை யாரோ கசக்குவது போன்றதொரு துன்பம் ஏற்பட்டது. கண் இமைகளைச் சுட்ட நீரைச் சமாளித்துக் கொண்டாள். அன்பும், அடக்கமுமான மாதங்கிக்குக் கணவனாக வாழ ஹர்ஷனுக்குக் கொடுத்து வைக்கவில்லை. ஒதுங்கிப் போகிறானே! ஒழியட்டும்! சிறு வயதிலேயே அனாதையாகிப் பல துன்பங்களை அனுபவித்துவிட்ட அந்தப் பெண் குழந்தைக்குக் கஸ்தூரி தங்க இடம் அளித்து, தாய்ப் பாசம் காட்டி அரவணைப்பதைக்கூட, இந்தப் பாவிப் பயல் தடுக்கிறானே? அவள் மனம் தவியாகத் தவித்தது.

புருஷன் வீட்டுக்குப் போகப் போகிற மகளைப் பிரியவிருக்கும் பெற்ற தாயைப் போலக் கண் கலங்கினாள். மாதங்கியை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் துயரவசப்பட்டுப் போனாள்.

ஸ்நானம் செய்த கூந்தலைக் கோடாலி முடிச்சிட்டுக் கொண்டு, பளிச்சென்ற குங்குமப் பொட்டுடன் வீட்டில் வளைய வரும் அவளை... இனி பார்க்க முடியுமா என்ற நினைவே அவளது அடிவயிற்றைப் பிசைந்தது.

''மாதங்கி!.... ரெண்டு மூணு நாள் பொறுத்துக்கொள்ளும்மா... உனக்கு ஒரு நல்ல ஏற்பாடு செய்யறேன். எதுக்கும் நீ உன் சாமான்களை எடுத்துப் பெட்டியில் அடுக்கி வைச்சுக்க....'' என்றாள் ஆதரவாக.



அள்ளித் தெளித்த அவசரக் கோலம் போல நடந்த கல்யாணம் அவளுடையது. திருமணமானவுடனேயே மாமியாருடன் புறப்பட்டு வந்துவிட்டவள் — பெரியம்மா சம்பிரதாயத்துக்காகக் கூட புக்ககத்தில் ஏற்றி, வைக்க ஒரு காமாட்சி விளக்கோ — பித்தளைத் தட்டோ — ஒரு செம்போ கூட சீராகக் கொடுத்து உதவவில்லை. கல்யாண மண்டபத்துக்கு எடுத்து வந்த பெட்டியில் கொண்டு வந்திருந்தாளே ஒரு பட்டுச் சேலை, இரண்டு நூல் சேலைகள், கொஞ்சம் உள் ஆடை, சோப்பு, சீப்பு, கண்ணாடி... இவை தாம் அவள் கொணர்ந்த சொத்து. மற்றபடி மூக்கு காது யாவற்றிலும் கவரிங் உருப்படிகள்.

இவைகளைத் தயாராக எடுத்து வைத்துக் கொள்ள எத்தனை நேரமாகும்?

''அத்தே! பத்தே நிமிஷத்தில் என் மூட்டையைக் கட்டித் தயாராக்கிடுவேன்!'' சோகத்துடன் மெல்லியதாகச் சிரித்தாள்.


விழுந்த மாஜ

அவள் சொல்ல நினைத்ததைக் கஸ்தூரி புரிந்து கொண்டு விட்டாள்.

''நீ இங்கே வரும்போது ஒரு பெட்டியும் கொஞ்சம் துணி மணிகளுடன் வந்தவளாயிருக்கலாம். ஆனால் இங்கிருந்து நீ போகும் போது அப்படி உன்னை அனுப்பறதாக எனக்கு எண்ணம் இல்லே. கூரைச் சேலையிலிருந்து நான் நேத்துவரை உனக்கு வாங்கித் தந்த அத்தனையையும் எடுத்துப் பெட்டியில வச்சுக்க. நான் போட்ட நகைகள் எல்லாம் உன்னைச் சேர்ந்ததுதான். ஆனால் அதையெல்லாத்தையும் இங்கே உன் பெயரில் வங்கி பாதுகாப்புப் பெட்டகத்தில் வச்சுட்டு, சாவியை நீயே கவனமா எடுத்து வச்சுக்கோ. நான் வேலைக்குப் புறப்படு முன், உங்கிட்ட கொஞ்சம் பேசணும். அதனால இப்படி உட்காரு'' என்றாள் கஸ்தூரி.

மாமியாரின் தாராளமான மனத்தைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்தாள் அவள். கஸ்தூரியின் எதிரே கிடந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டு ஆவலுடன் அவள் முகத்தைப் பார்த்தாள்.

''பங்களூரிலே என் தோழி ஒருத்தி இருக்கா. விதவையானவள். குழந்தைகள் எதுவுமில்லாத தனி மனுஷி. அவளைப் போல நானும் ஒண்டிக் கட்டையா இருந்திருக்கலாகாதா... என்று இப்ப நினைச்சுக் கொள்றேன். எத்தனையோ பிரச்னைகளைச் சந்திச்சிருக்க வேண்டாமென்னு அங்கலாய்க்கிறேன். ஹூம்! அதப் பத்தி இப்பப்பேசி என்னபயன்?'' அலுப்புடன் கஸ்தூரி தொடர்ந்தாள்.



லக்ஷ்மி

''மேலே நடக்க வேண்டியதைக் கவனிக்கிறதுதான் புத்திசாலித்தனம். உன்னை, உன் பெரியப்பா வீட்டுக்கு நான் எக்காரணம் கொண்டும் அனுப்பப் போறதில்லை. நீயும் அங்கே போகக் கூடாது. அப்படி எனக்கு ஒரு வாக்குக் குடுப்பாயா மாதங்கி!''

''அத்தே! நீங்க என்னை எங்கே அனுப்பினாலும் போகத் தயார். சரித்தானே'' மெல்லிய குரலில் மேஜையைப் பார்த்தபடி சொன்னாள் மாதங்கி. அவளுக்கு அழுகை பொங்கி வந்தது. அவளது திருமணம், இப்படி ஒரு சிக்கலாக மாறும் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. திருத்தணியில் அன்று காலை கொட்டு மேள கோஷத்திடையே ஹர்ஷன் அவள் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவித்தபோது அந்த நினைப்பே இல்லை. சுவர்க்க போகத்தை அனுபவிக்கப் போகிறோம் என்ற கனவில் அல்லவா மிதந்தாள்!

''என் தோழி நர்மதா தனி வீடு, சமையலுக்கு ஆள், கார் என்று வசதியா வாழ்கிறவள். தன்னந் தனியாக இருக்கிறோமே என்று குறை. அவள் தனிமையைப் போக்கத் துணையாக இருக்க உன்னை அவளிடம் அனுப்பப் போகிறேன். ஆனால் உன்னால் ஆகப் போகும் சாப்பாடு, மற்ற செலவுக்கு அவளுக்கு மாதா மாதம் பணம் அனுப்பி விடுவேன். என்னதான் சிநேகிதம்னாலும் நான் இதுபோல விஷயங்களில் மிகவும் கண்டிப்பும் கறாருமாக இருப்பேன். கஸ்தூரி சற்று நிறுத்தினாள். மாதங்கி பதில் கூறவில்லை.

''ஒரு ஹாஸ்டல்லே தங்கி இருக்கிறது போல் கௌரவமான ஒரு பெண்மணியோட பாதுகாப்பில் நீ இருப்பாய் — அதே சமயம் நீ நாட்களை வீணே கழித்துக் கொண்டிருக்கப் போவதில்லை! எனக்குக் கணவர் சாப்பாட்டுக்குப் போதுமானது வச்சிட்டுத் தான் போயிருக்கார். இருந்தும் நான் ஏன் இன்னமும் வேலை செய்யறேன் தெரியுமா? தனிமையின் துயரை மறக்கவும் — சுதந்திரமான ஓர் உணர்வில் தன்னம்பிக்கையோட வாழவும்தான். ஒவ்வொரு பெண்ணுக்கும் தன்னம்பிக்கையும், சுதந்திர உணர்வும் தன்னைத் தானே காத்துக் கொள்ளும் கல்வி அறிவும் தேவைன்னு மேடைகளில் கூக்குரல் இடுகிறவள் நான். என் மருமகளுக்கு அவைகளை வழங்க நான் மறுத்தால் நியாயமாகுமா.... நர்மதா கிட்ட டெலி



அருள்வாக்கு

உபாசனை என்பது என்ன?


இதோ எனக்கு முன்னால் வாழைச் சீப்பு வைத்திருக்கிறது. ''இதைப் பார், இது மஞ்சளாக இருக்கிறது'' என்று நான் சொன்னால் இது மஞ்சளாகத்தான் இருக்கிறது என்று காண்கிறீர்கள். அதற்கு மேல் மனசில் அதைப் பற்றி எந்தப் பிரதி சிந்தனையும் (Reaction) எழுவதில்லை. மாறாக இதே வாழைப் பழத்தைக் காட்டி, ''இதோ பார், இது சிவப்பாக இருக்கிறது'' என்று நான் சொல்லியிருந்தால் உடனே உங்கள் மனசில் ஓர் ஆட்சேப உணர்ச்சி எழுந்திருக்கும். இது மஞ்சள் என்றோ, சிவப்பு என்றோ நான் சொல்லாமல் ''இந்த வாழைப்பழம் சிவப்பாக இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னால் அப்போது உங்கள் மனசில் ஒரு விதமான பிரதி உணர்ச்சி உண்டாகிறது. மஞ்சள் பழத்தையே சிவப்பாக இருப்பது போல் உங்கள் மனசினால் கற்பனை செய்து பார்க்கிறீர்கள். மனசை ஒருமுகப் படுத்தினால் அப்படிப் பாவிக்கவும் முடிகிறது.

உபாசனை என்பது இப்படிப்பட்டதுதான். பரம்பொருள் இப்படி இப்படி இருப்பதாகப் பாவியுங்கள் என்று பலவிதமான குணங்களைக் கொண்ட பல மூர்த்திகளைக் காட்டிக் கொடுக்கிறது உபாசனா மார்க்கம். வாழைப் பழம் உண்மையில் மஞ்சள் நிறம் என்பது போல் பரமாத்மாவின் உண்மைக் குணம் என்ன? அது குணம் கடந்தது என்பதே. பரமாத்மா எல்லாக் குணமும் கடந்த வஸ்து என்று சொல்லி விட்டால் அப்புறம் ஜனங்களின் மனசு அதில் மேற்கொண்டு நிற்பதற்கு இடமே இல்லை. இது நமக்குப் புரிபடாத வஸ்து என்று விட்டு விடுவார்கள். வாழைப் பழத்தைச் சிவப்பு என்று சொன்னதை மனம் ஆட்சேபித்தது போல் ஒரு சிலையைக் காட்டி இதுதான் பரமாத்மா என்றால் அது எவராலும் ஏற்க முடியாது. 'இது ஒரு கல் பொம்மை அல்லவா? இது எப்படி உலகத்தை நடத்துகிற பரமாத்மா சக்தி ஆகும்?' என்று தோன்றும். ஆனால் ஒரு சிலையைக் காட்டி, ''இதைப் பரமாத்மா என்று பாவியுங்கள்'' என்றால் அப்படிப் பாவிக்க முடிவதாகத் தோன்றும் — வாழைப் பழத்தைச் சிவப்பாகக் கற்பனை செய்வது போல். ஆனால் சிவப்பு என்றால் என்னவென்று மனசுக்குத் தெரிவது போல், பரமாத்ம லட்சணம் தெரியாதே. அதனால் விக்கிரகத்தை 'ஏதோ பெரிய வஸ்து' என்று சிறிது எண்ணிப் பார்க்கலாமே தவிர அதிலேயே ஆழ ஊன்றி நிற்க முடியாது. தெரிந்த விஷயங்களில் மனசு பிடிமானத்தோடு நிற்கும். எனவே ஒரே காருண்யமும், சௌந்தரியமும் வழிகிற மாதிரி ஸ்திரீ ரூபத்தில் விக்ரகம் செய்து, ''இதில் பரமாத்மா தாயாராக வந்திருக்கிறார் என்று பாவனை பண்ணு என்றால் மனசு அதை நன்றாகக் கிரகித்துக் கொண்டு அப்படியே ஆழ்ந்து ஈடுபட முடிகிறது.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

கண்களை டெஸ்ட் பண்ணிக்கொள்ள வேண்டியதுதான்; யார் இல்லை என்கிறார்கள்? அதற்காக, பார்த்தாலே பயமுறுத்துகிற மாதிரி இத்தகை கருவிகளா? அடேயப்பா!

நாடு: மேற்கு ஜெர்மனி
நன்றி: ஸ்காலா.



போனில் பேசி எல்லா ஏற்பாடும் செய்யப் போறேன் மாதங்கி!''

அவள் மாமியாரின் பேச்சுக்குத் தலையை அசைத்தபடி பொம்மையாக அமர்ந்திருந்தாள்.

''நர்மதாவும் என்னைப் போல் கொள்கை உடையவள். அவள் உதவியுடன் நீ சந்தோஷமாக இரு. அருகில் இருக்கும் வேலை வாய்ப்புப் பயிற்சி தரும் நிறுவனத்தில் சேர்ந்துகொள். டைப்பிங், செக்ரட்டேரியட் கோர்ஸ் என்று உபயோகமானதாகப் படித்து பாஸ் செய்திடு. அதுக்காகத்தான் உன்னை அங்கே அனுப்பறேன். உனக்கும் ஹர்ஷனுக்கும் கடவுள் கிருபையால், இடையில ஏற்பட்டிருக்கிற வீண் மனத்தாங்கல் இந்தப் பிரிவினால் மறைஞ்சு, மன நெருக்கம் ஏற்பட்டால் நான் ரொம்பச் சந்தோஷப்படுவேன். இல்லை... ஒரேயடியா, அதிகரிச்சு, பிரிஞ்சு போக நேர்ந்தால் உன்னைக் காப்பாத்திக்கொள்ள உன் கையில் ஒரு நல்ல தொழில் இருக்கு. பிழைச்சுக் கொள்வாய்ன்னு நிம்மதியடைவேன்.'' படபடவெனப் பேசிய கஸ்தூரி, மேலே பேச முடியாமல் சட்டென எழுந்தாள். வாஷ்பேசினருகில் சென்று கையைக் கழுவினாள். மருமகள் பாராத சமயம் பார்த்துக் கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.

மீண்டும் திரும்பி வந்தவள், ''இந்த வீட்டுப் பொறுப்பு இன்னும் சில நாட்களுக்குத்தான். பிறகு நீ ஒரு சுதந்திரப் பறவை... வரட்டுமா?'' துயருடன் சிரிக்க முயன்றபடி தன் பிரீஃப் கேஸைத் தானே தூக்கிக் கொண்டு வெளியேறினாள்.

அதற்குப் பின்னர் கஸ்தூரி வேகமாகச் செயல் பட்டாள். ஒரு நாள் காலை, அலுவலகத்துக்குக் கிளம்பும்போது மருமகளையும் கூடவே காரில் அழைத்துச் சென்றாள்.

அருகிலிருந்த அவர்களது வங்கியில் மாதங்கியின் பெயரில் ஒரு கணக்கை ஆரம்பித்து, அதில் கணிசமான ஒரு தொகையைக் கட்டினாள்.

பாதுகாப்புப் பெட்டகச் சாவி, 'பாஸ் புத்தகம் இரண்டையும் மருமகள் கையில் கொடுத்து வீட்டில் கொணர்ந்து விட்டு விட்டு வேலைக்குத் திரும்பினாள்.

அன்று காலை பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் மாதங்கி பெங்களூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். ஜன்னல் ஓரமாக உட்கார்ந்திருந்தவளிடம் கஸ்தூரி தாழ்ந்த குரலில் சொன்னாள்:

''உன் அவசரச் செலவுக்குன்னு கொஞ்சம் பணம் உன் பேர்ல பாங்கில கட்டி வச்சிருக்கு. மாசம் தவறாமல் நான் பணம் அனுப்பி வைக்கிறேன். கவலைப்படாதே. அடிக்கடி கடிதம் போடு. நீ அங்கே போய்ச் சேர்ந்ததும் நர்மதா அம்மா உன்னிடம் ஒரு தடிமனான கடித உறையைத் தருவாள். அதைப் பிரிச்சுப் பார்த்துட்டுப் பத்திரமா வச்சுக்கோ.''

''அத்தே!'' கலவரத்துடன் விழித்தாள்.

''அது என் உயில்... அசல் நமது குடும்பத்து வக்கீல் கிட்ட இருக்கு. நர்மதா கொடுக்கப் போறது நகல். உன் பார்வைக்கு வைச்சுக்கொள்ள வேண்டியது. என் உயில் பிரகாரம் நம் வீட்டில் பாதி உன்னது. எனக்குப் பின் பாங்கியில் என் பேரில் இருக்கிற பணம், என் நகை எல்லாமே உன்னைச் சேரணும்னு எழுதி வச்சிருக்கேன்.''

''அத்தே! எதுக்காக இப்படியெல்லாம்'' மாதங்கியின் குரல் தழுதழுத்தது. கையை நீட்டி மாமியாரின் கரத்தை ஆதரவுடன் தொட்டாள்.

''என் மகன் எனக்குத் தந்திருக்கிற அதிர்ச்சியின் துயரமே என்னை விழுங்கிடும்னு ஒரு திகில் ஏற்பட்டுடுச்சு. ஒரு சமயம் உன்னைத் திரும்பிப் பார்க்க முடியாமல் உடம்புக்கு வந்து நான் போயிட்டா அநியாயமா ஒரு பெண்ணை நிர்க்கதியாக்கிட்ட பாவம் எனக்கு வரக் கூடாதும்மா மாதங்கி! குழந்தே! என்னை மன்னிச்சுடும்மா...'' கஸ்தூரி கண் கலங்க, மருமகளின் கரத்தை அழுத்திப் பிடித்தபொழுது ''அத்தே!'' என விம்மினாள் மாதங்கி. அதற்குள் வண்டி நகரத் துவங்கவே பிணைத்துக் கொண்ட கரங்கள் பிரிய வேண்டிவந்தது. (தொடரும்)

ஏதாவதொரு மிக்ஸரை வாங்கிவிடாதீர்கள்...



எல்லா உறுப்புகளும் பேடெண்ட் செய்யப்பட்டுள்ளன

... உங்கள் தேவைக் கேற்றது ஸுமீத்

அன்வர்த்தீனின் கலகலப்பும் சிரிப்பும் என்னாயிற்று?- அன்வர்த்தீனின் பெற்றோர்கள் தங்களுக்குள் கேட்டுக் கொண்டனர்.

கணவனின் மகிழ்ச்சியும், "சந்தோஷமும் திடீரென்று கழன்று ஓடிவிட்டதுபோலிருக்கே எதற்காக? ஃபத்ஹுல் பானு குழம்பினாள்.

''ஏம்மா ஃபத்ஹுல், அன்வர்தீன் முன்னம் போல் குதூகலமாகக் கும்மாளமாக இல்லையே, ஏன்? உங்களுக்குள் ஏதும் தகராறு?'' மாமனார் சிராஜுத்தீன் கேட்க, ஃபத்ஹுல் பானு ஒன்றும் புரியாமல் திணறினாள்.

''நான்... இதை உங்க கிட்டே கேட்கணும்னு நினைத்தேன் — உங்களுக்குள் ஏதும் குழப்பமா என்று. ஆனால் நீங்கள் கேட்பதிலிருந்து உங்களுக்குள் இல்லை என்று மட்டும் எனக்குத் தெரிகிறது....''

''நிஜமாவா? வியாபாரம் கூட முன்னை விட நல்லா நடக்குது. பேங்க் பேலன்ஸும் தினசரி பெருகி வருகிறது. அப்படியிருக்க அவன் இப்படி இஞ்சி தின்ன மந்தியாட்டமா இருக்க வேண்டியதில்லையே...''

மௌன ராகங்கள்



''நீங்க என்னங்க... ஃபத்ஹூல் பானு குழந்தை உண்டாகி மூன்று மாதமாகிறது... சுகப் பிரசவமாகித் தாயும் குழந்தையும் மீண்டு வரவேண்டும் என்ற கவலையில் இருக்கலாமில்லையா?'' மாமியார் ஆபிதா பேகம் ஹாஸ்யமாகச் சொன்னாள்.

இப்படி ஒரு வாரமாக அன்வர்த்தீனின் இழந்த கலகலப்பும் தேவையற்ற மௌனமும் குடும்பத்தில் ஒரு குழப்ப நிலையை உருவாக்கி விட்டிருந்தன.

கடந்த வாரம் அன்வர்த்தீனுக்கு வந்த கடிதங்களில் ஒன்றில்:

'....மிஸ்டர் அன்வர்தீன், ரியலி ஐ'ம் வெரி ஸாரி... நேற்றுத்தான் கேள்விப்பட்டேன், நீங்கள் மணந்திருப்பது கப்பல் வீட்டு ஹூஸைன் மரைக்காயர் மகள் ஃபத்ஹூல் பானு என்று. அந்தப் பெண் திருமணமாவதற்கு முன் தன் உதரத்தில் உருவாகியிருந்த மூன்று மாதக்கருவைக் கலைத்த ஒரு நடத்தை பிசகியவள். கருவைக் கலைத்த நர்ஸிங் ஹோமில் இன்ன தேதியில் நடந்தது உண்டா என்று நீங்கள் விரும்பினால் விசாரித்துக் கொள்ளவும். நர்ஸிங் ஹோமின் பெயர் சாந்தி நர்ஸிங் ஹோம்.

இப்படிக்கு.......?

மொட்டைக் கடிதம்.

ஃபத்ஹூல் பானு அப்படிப்பட்டவளா? ஒழுக்கத்தின் பிம்பமாக விளங்கும் ஃபத்ஹூல் பானு நடத்தை கெட்டவளா? ஐந்து வேளையும் தொழுது, ஒழிந்த நேரங்களில் திருமறை ஓதி ரமழான் நோன்பு நோற்று மென்ஸஸ் பீரியடில் தடைபடும் நோன்பை மறு மாதமே நோற்று, ஏழைகள் யாசிக்க வந்தால் மனமுவந்து உதவி, பொது நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதை முடிந்தவரை தவிர்த்து, பல முறை வற்புறுத்தி அழைத்தால் மட்டுமே ஐந்தாறு மாதங்களுக்கு ஒரு தடவை சினிமா பார்ப்பதற்கு இசைந்து... அந்நிய ஆடவர்கள் வியாபார விஷயமாகவோ வேறு பல காரணங்களுக்காகவோ வீட்டுக்கு வந்தால் முடிந்தவரை அவர்கள் பார்வையில் படாமல் ஒதுங்கியிருந்து... சே! இத்தனையும் எத்தனை பெரிய வேஷம்! வெளி வேஷம்!

''பானு அந்த மல்மல் சாரிக்கு இந்த மஜந்தா பிளவ்ஸ் எவ்வளவு எடுப்பா இருக்கு தெரியுமா? உன்னை இன்னும் பத்து வயது குறைத்துக் காட்டுகிறது'' என்று சொன்ன போது,

''அப்படியா.... அப்போ, இனிமேல் இந்தச் சேலையை நான் வீட்டுக்குள் இருக்கும் போது மட்டுமே உடுத்துவேன்'' என்றாள்..

''ஏன் பானு?''

''ஒங்களை மாதிரிதானே மத்தவங்களும் நினைப்பாங்க....! என்னைப் பொறுத்தவரை நான் உங்களுக்கு மட்டுமே சொந்தம். உங்கள் பார்வைக்கு மட்டுமே இனி என்னுடைய அலங்காரங்கள் அமையும்!''

சே! அத்தனையும் நடிப்பு.

''என்ன பானு நம்முடைய திருமணப் போட்டோவைக் கழற்றி பெட்ரூம்லே மாட்டிட்டே? வீட்டின் வரவேற்பு ஹாலில் இருந்தால் என்ன?''

''நேற்று ஒரு கண்ட்ராக்டர் வந்தார். அவருடைய பார்வை நம் புகைப்படத்தை விட்டு அகலவேயில்லை. மாமாவிடம் என்னைக் காட்டி அது யார் என்று கேட்டார். மாமா, என் மருமகள் என்றார். அப்படியா சினிமா ஸ்டார் மாதிரியே இருக்காங்களேன்னார்....''

'' அ ப் ப டி ய ா ? உண்மையைத்தானே சொல்லியிருக்கிறார். அதில் என்ன தப்பு?''

''இந்த பானுவைப் பார்ப்பதற்கும், ரசிப்பதற்கும், ரசித்து மதிப்பதற்கும் உள்ள உரிமை உங்கள் ஒருவருக்குத்தான் உண்டு!''

இப்படிச் சொன்னவளா அப்படி நடந்து விட்டாள்? அத்தகைய தவறுக்கு உறுதுணையாக இருந்தது யாராக இருக்கும்? இதை எப்படித் தெரிவது? அவளிடம் கேட்டால் சொல்லிவிடுவாளா?

கறை மனைவி



''ஆமா, நானும் பார்த்துக் கொண்டு தான் இருக்கேன்... ரெண்டு மூணு வாரமா இப்படி யாரோடும் பேசாமல் கம்முன்னு இருக்கிங்களே... உடம்புக்கு ஏதாவது....?'' பானு முதன் முறை அன்வர்தீனிடம் கேட்டாள்.

''.......''

''என்கிட்டக் கூடவா சொல்லக் கூடாது? 'பானு, பானு' என்று வாய் நிறைய அழைத்து யாரும் காணாத நேரம் பார்த்து, கன்னத்தில் முத்தமிட்டு என்னைக் கொ

''எந்த விஷயமாக இருந்தாலும்என்னிடம் சொல்லாமல் இருக்க மாட்டீர்களே... தூங்கும்போதுகூட 'என்ன தூக்கம் வேண்டிக் கிடக்கிறது... முகத்தை அலம்பிட்டு வா... இப்படி உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசுவோம்' என்று என்னை எழுப்பி வைத்து மணிக் கணக்கில் பேசுவீர்களே... அந்த வாய் ஏன் இப்போது மூடிக் கிடக்கிறது''

ஒரு நீண்ட பெருமூச்சு.

''இப்படி இருந்தால் நான் அழுதுவிடுவேன். என்ன இருந்தாலும் மனம் திறந்து என்னிடம் சொல்லி விடுங்கள்'' — சிணுங்கினாள் ஃபீத்ஹாவ் பானு.

குப்புறப் படுத்துக் கொண்டான் அன்வர்தீன்.

சாகஸக் கள்ளி எப்படியெல்லாம் பாவலா பண்ணுகிறாள். எரிச்சல் எரிச்சலாக வந்தது அன்வர்தீனுக்கு.

''சும்மா ஏன் தொணதொணன்னு உயிரை எடுக்கிறே? சும்மா கிடக்க மாட்டயா? பேசாமல் தூங்கி விழி. விடிஞ்சப்புறம் மீதியை வைச்சுக்கோ!''

''குங்குமப் பூ கேட்டேனே எங்கே? இந்த மாதிரி கூட்டத்திலே குங்குமப் பூ சாப்பிட்டால் குழந்தை அழகாகவும் அறிவு தீட்சண்யமாகவும் இருக்கும் என்று சொல்லி விட்டு, இப்படி ஒரு வாரமா சும்மா வர்றீங்களே இது உங்களுக்கே நன்றாயிருக்கா?'' சகஜ நிலைக்குக் கணவனைத் திருப்புவதற்குமுயன்றாள் பானு.

அன்வர்தீன் அசைந்து கொடுக்கவில்லை. ஆழ்ந்து நித்திரை வயப்பட்டவன் போல் செயற்கைக் கொட்டாவியை உதிர்த்தான்.

சாந்தி நர்ஸிங் ஹோம்.

கூட்டம் ஓரளவு குறைந்திருந்தது.

லேடி டாக்டர் அலர்மேலு மங்கை அப்போதிருந்தே காத்திருக்கும் அன்வர்தீனை அருகழைத்தார். ''உங்கள் உடம்புக்கு....?''

''உடம்புக்கு ஒன்றும் இல்லே. ஒரு சின்னத் தகவல் தெரிந்து கொள்ளலாம்னு வந்திருக்கேன்....''

''உங்களுக்கு எந்த ஊர்?''

''ஏரல்.. ஐந்தாறு வருஷங்களுக்கு முன்..''

''சொல்லுங்கள்!''

''இந்த நர்ஸிங் ஹோமில் ஃபீத்ஹாவ் பானு என்ற குமரிப் பெண் கருக் கலைப்புச் செய்திருக்கிறாளா என்ற விவரம் தெரியவேண்டும்.''

அன்வர்தீனை அலர்மேல்மங்கை சில கணங்கள் மேலும் கீழும் நோக்கிவிட்டு.. ''ஐந்தாறு வருஷத்துக்கு முந்திய சமாசாரம் இப்போது வருவானேன்?'' என்றாள்.

''இப்போதுதான் அந்தத் தகவல் கிடைச்சிருக்கு டாக்டர்! இது ஒருவரின் வாழ்க்கைப் பிரச்னை... அதாவது என் நண்பனின் மனைவி ஃபீத்ஹாவ் பானு. இப்போது அவங்களுக்குள் ஒரு பெரிய பிளவு உருவாகி வருகிறது. அதற்காகத்தான்....''

''இதைத் தெரிந்து வைத்து என்ன செய்வதாக உத்தேசம்?''

''திருமணத்துக்கு முன்பே நடத்தை பிசகிய அந்தப் பெண்ணை விவாகரத்து செய்வதற்காக இருக்கிறார்கள்!''

நெகிழ்ச்சி ஏற்படுத்திய நிகழ்ச்சி?



:: மூகம்மது பக்கீராம், துடியலூர்

கே. 'கின்னஸ்' உலகசாதனை புத்தகத்தில் இடம் பெற கலைமாகர் சாதிக்கக் கூடியதைச் சொல்லுங்கள்.

ப: நீங்கள் கின்னஸ் புத்தகம் முழுவதையும் படித்திருந்தால் இப்படிக் கேட்க மாட்டீர்கள். எல்லா சாதனைகளும் கடினமானவைதாம் (இதெல்லாம் ஒரு சாதனையா என்று சில விஷயங்கள் கேள்விக்குறி எழுப்பும் என்பது வேறு விஷயம்). ஒரு சின்னத் தகவலைச் சொல்லுகிறேன். இந்தி நடிகை ஹெலன் இதுவரை 700 படங்களில் நடித்திருக்கிறார். இந்தச் சாதனையைப் புத்தகத்தில் போட வேண்டும் என்று ஒருவர் எழுதியிருந்ததற்கு கின்னஸ் புத்தகக்காரர்கள் பதில் போட்டிருக்கிறார்கள்: ''படத்தில் நடித்திருப்பது என்பதைச் சரியாக வரையறுக்க முடியாது. எத்தனையோ துணை நடிகர்கள் நிறையப் படங்களில் நடித்திருக்கிறார்கள். பலர் டி.வி. படங்களில் விளம்பரப் படங்கள், செய்திப் படங்களில் நடித்திருக்கிறார்கள். ஆகவே இதில் நாங்கள் ஒன்றும் செய்ய இயலாதிருக்கிறோம்.'' ஆகவே உங்கள் கேள்விக்குப் பதில்: ஸாரி, ப்ளீஸ்.



:: கே. ஆர். பரிஜுகர், தஞ்சாவூர்

கே. புத்தகம் வாங்க வசதி இருந்தும் சிலர் ஓசிப் புத்தகங்களையே எதிர்பார்க்கிறார்களே?

ப: என்னை மனத்தில் வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

:: கௌசல்யா மணாளன், திருவையாறு

கே. சமீபத்தில் நெகிழ்ச்சி ஏற்படுத்திய நிகழ்ச்சி ஒன்றைக் கூறுங்களேன்.

ப: ஒரு திரைப்படம் பார்த்தபோது ஏற்பட்டது. 'ஒரு வீடு, ஒரு உலகம்' என்ற படத்தில் மறைந்த ஷோபாவின் அபாரமான நடிப்பைப் பார்க்க உள்ளத்தில் பெரிய கனம் அழுத்தியது. மனம் நெகிழ்ந்து போனது.

கடுகு பதில்கள்!

✖ எம். கே. வரதராஜன், செங்கல்பட்டு

கே. 'சங்கரன் என்றொரு சாச்வத' என்று எஸ். ஜானகி பாடிய சினிமாப் பாட்டு குன்னக்குடி வைத்தியநாதன் கூடத் தம் வயலினால் வாசிக்க முடியுமா என்று சவால் விடுவதாக உள்ளதே! பாட்டு நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?

ப: நான் கேட்டதில்லை. குன்னக்குடியிடம் உங்கள் கேள்வியைக் கேட்டேன். அவரும் கேட்டதில்லையாம்.

✖ கு. அருணாசலம், தென்காசி

கே. பசி வந்திட பத்தும் பறந்து விடும்; பணம் வந்திட...?

ப: பதினொன்றும் பறந்து விடும். அந்தப் பத்துடன் பசியும் போய்விடும்.

✖ டி. எஸ். சீதாராமன், கும்பகோணம்

கே. இதுவரை 5 ரூபாய்க்கு மேல் செலவு செய்து கேள்விகள் அனுப்பி விட்டேன். பதிலும் இல்லை. பரிசும் இல்லை. தபால் அலுவலகம் என் மாமனார் வீடல்ல; தெரிந்து கொள்ளும்.

ப: எல்லாருக்கும் பரிசு கொடுக்க ரிசர்வ் பாங்க் என் மாமியார் வீடல்ல தெரிந்து கொள்ளும்.

✖ கலைக்கண்ணன், மதுரை-1

கே. பெண்களுக்கு முழு சுதந்திரம் அளிப்பது நல்லதா, கெட்டதா?

ப: என்ன இப்படி ஒரு சந்தேகம் வந்துவிட்டது? வீடு நடத்தவும், கணவனைக் கவனிக்கவும், குழந்தை பெறவும்தான் பெண் லாயக்கு என்று கருதும் சமூகம் விரைவில் அழிந்து படும். பெர்ட்ராண்ட் ரஸ்ஸலின் பொன் மொழியைத் தரட்டுமா? ''பெண்ணுக்குச் சுதந்திரம் தராமல் ஆண் ஆதிக்கம் செலுத்துவதன் காரணமாகத் துரதிர்ஷ்டமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. திருமணம் என்கிற மிக நெருக்கமான உறவு முறை சமமானவர்களுக்கு இடையே உள்ளதாக அமையாமல் எஜமான்-அடிமை என்கிற ரீதியில் அமைந்து விடுகிறது.''

பரிசு பெறுபவர்:
கலைக்கண்ணன், பாலா இல்லம், 7-வது தெரு, சொக்கலிங்க நகர், மதுரை-16



''ஓ....அப்படியா? ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பாகவா? இங்கே பல பேர் வருகிறார்கள். இந்த ஐந்தாறு வருஷங்களுக்கு இடையில் ஏறக் குறைய இருநூறு பேர்களுக்கு மேல் இங்கே அந்த மாதிரி செய்ததுண்டு. இதில் அறுபது சதவிகிதத்தினர் தங்கள் உடல் நிலைக்கு ஒத்துக்கொள்ளாததால் செய்யப்பட்டவர்கள். மீதிப் பேர் வறுமையின் காரணமாகவும் பிள்ளை குட்டிகள் அதிகமாக இருப்பதாலும் செய்து கொண்டவர்கள். இவர்களில் பெரும்பாலோர் தங்கள் உண்மைப் பெயரைக் கூறுவதில்லை. மேலும், ஒரே பெயரைக் கொண்டவர்கள் பல பேர் இருக்கிறார்கள். கங்கா என்பவள் தன் பெயரைக் காமாட்சி என்று சொன்னால் நாங்கள் காமாட்சி என்றுதான் பதிந்து வைப்போம்... இந்த மாதிரி நீங்கள் கூறும் பெயர் இருந்திருந்தால்?''

அன்வர்தீன் திண்டாடினான்.

''நண்பனின் மனைவியை அழைத்து வந்தால் உங்களால் வருவாகக் கூற முடியுமே!''

''இம்பாஸிபில்! ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு உள்ள சமாசாரம் இது. ஒரே சாயலில் பலர் இருப்பதுண்டு. மேலும், பல பேர் வருகிற இடம். எனக்கு ஒரு குறிப்பிட்ட பெண்ணின் முகத்தை நினைவில் வைத்திருப்பது சாத்தியமில்லை. அது சரி, ஐந்தாறு வருஷங்களுக்கு முன்புள்ள விஷயம் இப்போது எப்படித் தெரிய வந்தது?''

அன்வர்தீன் அந்த மொட்டைக் கடிதத்தைப் பற்றிக் கூறினான்.

கலகலவென்று நகைத்தார் டாக்டர்.

''சில சமூகப் புல்லுருவிகளின் சதிச் செயலை நம்பி அனாவசியமாக ஒரு பெண்ணின் வாழ்வைப் பாழ்படுத்தி விடாதீர்கள். நானும் உங்கள் மதத்தையும் மதக் கோட்பாடுகளையும் பற்றி ஓரளவு தெரிந்து வைத்திருக்கிறேன். அப்பாவிப் பெண்கள் மீது அவதூறு கூறுவது மிகப் பெரும் குற்றமாகும். சரியான நேர்முக சாட்சியமின்றி இவ்வித அவதூறுகளை நம்புவது — நம்பிச் செயல்படுவது யாவுமே பெருங் குற்றமாகும். சந்தேகம் வாழ்க்கையின் சத்துரு. எனவே உங்கள் நண்பரைச் சந்தேகத்துக்கு இடம் கொடாமல் தன் மனைவியுடன் சுமுகமாகக்கூடி வாழச் சொல்லுங்கள். எவ்வித முகாந்திரமுமின்றி ஒரு பெண்ணைத் ''தலாக்' கூறுவது இறைவனுக்குக் கோபம் உண்டு பண்ணுவதாகும்.''

எவ்வளவு பெரிய உண்மை! இங்கே ஃபத்ஹுல்பானு என்ற பெயர் பதிவாகி இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், நாமே நம்மை மறைத்து நண்பனின் மனைவி என்று சொன்னதைப் போல், தங்கள் பெயர் வெளியே வந்துவிடக் கூடாது என்று ஏன் அவர்களும் தங்கள் பெயரை மாற்றியிருக்கக் கூடாது?


மறுபடியும் அன்வர்தீனின் பழைய கலகலப்பும் குதூகலமும் தலை தூக்கியது.

ஃபத்ஹுல் பானுவுக்கு மீண்டும் சந்தேகம் பிறந்தது.

இந்த மாறுதலுக்கான காரணத்தைக் கணவனிடம் கேட்ட போது...

மறுபடி மௌனம்!

துக்கடா



வடபழனி. காலணிகள் மற்றும் வாகனங்களைப் பாதுகாக்கும் ஓர் இடத்தில் நம் விருப்பம் போல் காசு கொடுக்கலாம் என எழுதியுள்ளார்கள். கட்டணம் குறிப்பிட்டு வரும் தொகையை விட இம்முறையில் அதிகமாக வருலாகிறதாம்!

''இந்திரா வாழ்க! எம்.ஜி.ஆர். வாழ்க! கலைஞர் வாழ்க! தமிழ் வாழ்க! — ஆமாம்... நாங்கள் வாழ்வது எப்போது?'' என ஒரு சிறுவன் எழுதுவதாக அமைந்த விளம்பரம் 'சுமை' என்ற படத்துக்காக — கோட்டம் பாக்கம் மேம்பாலம் அருகே காணப்படுகிறது.



சண்டைக் காட்சி நடிகர்கள் — இயக்குனர்கள் சங்கத்துக்கு கமலஹாசன் ஒரு சைக்கிளை நன்கொடையாக அளித்துள்ளார் என்ற அறிவிப்புடன் அச்சைக்கிள் பயன்படுத்தப்பட்டுவருகிறது. ஆமாம்... சண்டைக் காட்சிக்கும் கமலுக்கும் என்ன சம்பந்தம்?


சென்னை முத்தியால்பேட்டை மேல் நிலைப் பள்ளியில் கணித ஆசிரியர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஓய்வு அறையின் பெயர் ''என் நண்பர் இல்லம்''.

அண்மையில் டி.வி.யில் 'காண்போம் கற்போம்' நிகழ்ச்சியில் விறுவிறு. இந்நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் உருவத்தில் சிறுவர்-சிறுமியராகத் தோன்றிய போதிலும் ஆடையில் பெரியவர்களாகத் தோன்றினார்கள். ஒருவேளை சிறுவர்களுக்கான ஆடைகள் போதிய அளவில் தொலைக் காட்சி நிலையத்தில் இல்லையோ?

சென்னை கோட்டையில் உள்ள அருங்காட்சியகத்தில் ராபர்ட் கிளைவ் தன் திருமணத்தின்போது கையெழுத்திட்ட மணப் பதிவேடு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு: **யெம்ஜி.**

இருபத்தைந்து வருடங்களாக டில்லியில் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஸெல்ஃப் டிஃபென்ஸ் அண்ட் நேஷனல் காரெக்டர் என்று ஓர்




சர்வ தேச ஸ்தாபனம் இயங்கி வருகிறது. தற்காப்புக்கும் தேசிய நல்லொழுக்கத்துக்கும் முக்கியத்துவம் தரும் நிறுவனம் என்பது இதன் பெயரிலேயே உள்ளடக்கம். இது நிறுவனத்தின் வெள்ளி விழா ஆண்டு.

உலகின் பல நாடுகளிலும் உள்ள ராணுவத்தினரையும் மற்றும் பல முக்கியஸ்தர்களையும் அங்கத்தினர்களாகக்கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மக்களுக்குத் தேவைப்படும் பொருள்களைத் தயாரிக்கும் சிறந்த நிறுவனத்தையும்தொழிலகங்களுக்குத்தேவையான இயந்திரங்களைத் தயாரிக்கும் சிறந்த நிறுவனத்தையும் தேர்ந்தெடுத்துத் தங்கப் பதக்கம் பரிசு அளிக்கிறது. சென்ற வருடம் பாரத் டி. வி.க்குத் தங்கப் பத்க்கம் கிடைத்தது.

இதில் இன்னொரு விசேஷம், தனது வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு இந்நிறுவனம் வைரம் பொதிக்கப்பட்ட தங்கப் பதக்கத்தைப் பாரத் டி.விக்கு அளித்தது.


—சிக்கி.



மே தினச்

தொழிலதிபர் ஈசுவரன்:

“பலரும் மே தினம் என்றால் அது மாஸ்கோவில்தான் தொடங்கியிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் முதலாளித்துவ நாடான அமெரிக்காவில், சிகாகோ நகரில் 1886ல் மோட்டார் வாகனத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து எட்டு மணி நேர உழைப்பு, எட்டு மணிநேர ஓய்வு, எட்டு மணி நேர உறக்கம் என்ற கோரிக்கைகளை முன்வைத்து உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்று கோஷமிட்டுத் துவங்கிய நாளே மே தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதற்குப் பிறகுதான் பிற நாடுகளுக்கு இந்தத் தினத்தின் மேன்மை பரவிற்று. இந்தியாவில் 1926ல், தொழிற் சங்கப் பிதாமகர் எனப்படும் திரு சர்க்கரைச் செட்டியார் அவர்களால் மே தினக் கொண்டாட்டம் துவங்கப்பட்டது.



✖ தொழிலதிபர் ஈசுவரன்

''இங்கே தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்திருப்பதில்லை. நல்லது செய்யவே ஒன்று சேர்கிறோம் என்ற மனப்பான்மை இல்லாமல் ஆத்திரத்தில், அல்லது ஆவேசத்தில்தான் ஒன்றாக இணைகிறார்கள். ஒருசில கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி ஒரு தொழிலாளர் தலைவரின் கீழ் திரண்டு வருகிறார்கள். அவ்வளவே. மே தினக் கொண்டாட்டங்களில் உற்சாகத்தோடு பங்கு கொள்ளாது அந்த மகத்தான விடுமுறையைப் பொழுது போக்காகக் கழித்துவிட்டுப் போகிறார்கள்.

''ஏன், மே தினச் சம்பளத்தைத் தொழிலாளர் சமுதாயத்தின் கூட்டு நலனுக்குப் பயன்படுத்தலாமே? இதை ஒரு தொழிலாளர் நல நிதியாகத் திரட்டி அவர்கள் நலனுக்கு உபயோகப்படுத்தலாமே?

''92 சதவீதம் வேலை வாய்ப்பு வசதி அமைந்துள்ள மேற்கத்தி நாடுகளில் இந்தத் தினத்தின் மேன்மை பொருந்தும். இந்தியாவில் எட்டு சதவீத வேலை வசதிகூட இல்லாத சூழ்நிலையில் இது எப்படிப் பொருந்தும்? ஓர் அணியாகத் திரளாத, தொழிற்சங்க அமைப்பே இல்லாத தொழிலாளர் இங்கே மிக மிக அதிகம். இவர்களுக்கும் மே தினத்துக்கும் சம்பந்தமே இல்லையே! இவர்கள் மட்டும் பாடுபடும் தொழிலாளர் இல்லையா?

''எந்த ஒரு கட்சியும் தனக்கு ஓட்டு மொத்தமாக வோட்டுக் கிடைக்கும் என்ற அடிப்படையிலேயே இந்தத் தொழிலாளர் அமைப்புக்களைத் தாஜா செய்து, தமது கைக்குள் வைத்துக் கொள்ளப் பார்க்கின்றன!

''ஒரு கிழக்கத்திய நாட்டில் நடந்தது இது: சில சிப்பாய்கள் ஒரு ஓட்டலில் புகுந்து அட்டகாசம் செய்தார்களாம். நாசம் விளைவித்தார்களாம். மானேஜர் இவர்களின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு பயந்து பிறகு சற்று யோசித்து விட்டு, அந்த நாட்டுத் தேசிய கீதத்தின் இசைத் தட்டைச் சுழல விட்டாராம். அத்தனை பேரும் துணுக்குற்று அப்படியே ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டார்களாம்! அந்த அமர்க்களமான நிலைமையிலும் அவர்களது நாட்டுப் பற்று எப்படி அவர்களைக் கட்டுப்படுத்துகிறது பாருங்கள்! இங்கே தேசிய கீதம் இசைக்கப்படும்போது?..

''அமெரிக்காவில் கிரைஸ்லர் கார்ப்பரேஷன் மூடப்படும் என்று உரிமையாளர்கள் அறிவித்தவுடன், தொழிலாளர்கள் காரணம் கேட்டனர். ஏக நஷ்டம். இந்தச் சம்பளம் தர எங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்றனர் உரிமையாளர்கள். நல்ல காலம் பிறந்ததும் நல்ல சம்பளம் வாங்கிக் கொள்கிறோம். அதுவரை நீங்கள் கொடுக்கிற சம்பளம் போதும் என்று அறிவித்தனர் தொழிலாளர்கள். இந்தப் பொறுப்புணர்ச்சி வருகிறபோதுதான் நம் நாடும் உருப்படும்.

''இங்கேயெல்லாம் நாளாக நாளாக வேலையில் பற்று மிகக் குறையத் தொடங்குகிறது. வேலையைச் சரியாகச் செய்ய இயலாது போகிறது. ஜப்பானில் வருடங்கள் ஆக ஆக, தொழிலாளர்களின் உற்சாகமும் வேலையில் பற்றும் கூடுகின்றன.

''முதலாளிகள் எல்லாம் பொய் சொல்லுகிறவர்கள் என்று ஓர் எண்ணம் வந்துவிட்டது. அதேபோல் தொழிலாளர்கள் ஒரு மாதிரியானவர்கள் என்றும் ஒரு தீர்மானம்! ஆனால் நல்லகாலமாக இந்த மனப்பாங்கு குறைந்து கொண்டு வருகிறது. பரஸ்பர மனிதத்துவம் உணரப்படும்போதுதான் இந்த எண்ணங்கள் மாறும். சமுதாயத்தில் தொழிலாளரும் நமக்குச் சமனதயானவர்கள் தாம் என்று முதலாளிகள் எண்ணும் நிலை உருவாக வேண்டும். தொழிலாளி இல்லாமல் முத

சிந்தனைகள்

லாளி ஏது? அவர்களை வேலைக்கு அமர்த்தியதால் நானே என்னை வேலையில் அமர்த்திக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு உற்பத்தி, உழைப்புத் திறன் இருக்கிறது. எனக்கு விற்பனைத் திறன் இருக்கிறது. இவை இணைகிறபோதுதான் நிறுவனம் வெற்றிகரமாகச் செயல்பட முடியும்.

தொழிற் சங்கத் தலைவர்
திரு என். வி. என். சோமு

''**வே**லை வாய்ப்பு வசதி வேறு; மே தினக் கொண்டாட்டம் வேறு என்பது என் கருத்து. எட்டுச் சதவீதத் தொழிலாளரே இங்கே இருக்கிறதினால் மே தினத்தைப் புறக்கணிக்க முடியாது. வருங்காலத்தில் இதே எட்டுச் சதவீதம் இன்னும் அதிகமாகும் பட்சத்தில் நாம் மே தினத்தை அப்போது கொண்டாடத் துவங்க முடியுமா? தொழிலாளர்களின் உரிமைகளை வற்புறுத்திய நாளைக் கொண்டாடத்தானே மே தினம்!

''மே தின விடுமுறையை அந்தத் தினக் கொண்டாட்டத்தில் செலவழிக்காமல் கேளிக்கையாகக் கழிக்கின்றனர் என்பது ஓரளவு உண்மைதான். அன்றைய தினத்துக்கு 2 மடங்கு ஊதியம் தருவோம் என்று உரிமையாளர்கள் சொன்னால் அன்று வேலை செய்யவே தொழிலாளர்கள் முன்வருவர். அரசு அன்றையத் தினத்தைக் கட்டாய விடுமுறை நாளாக்கி, அன்று வேலை செய்யக் கூடாது என்று கண்டிப்பாக்கினால் ஒழிய இந்த மனப்பாங்கு மாறாது.


''அரசியல் கட்சிகள் தொழிலாளர் அமைப்பைத் தாஜாச் செய்து கைக்குள் வைத்துக் கொள்ளப் பார்க்கின்றனர் என்கிறார் திரு ஈஸ்வரன். சில அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்களில் தமது கருத்துக்களைத் திணிக்கின்றனர். ஆனால் நான் சார்ந்திருக்கிற தி. மு. க.வைப் பொறுத்த வரை எங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தித் தொழிலாளர் நலனுக்கு உதவவே நாங்கள் செயல்படுகிறோம்.

''குறைந்த பட்ச போனஸ் 4 சதவீதமாக இருந்ததை மாற்றி 8.33 சதவீதமாக ஆக்க இந்தியாவிலேயே முதல் குரல் கொடுத்த கட்சி டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கும் எங்கள் தி. மு. க.தான். காலம் சென்ற என் தகப்பனார் அப்போது தமிழகத்தில் தொழிலாளர் நல மந்திரியாக இருந்ததை நான் மகிழ்ச்சியுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

'' 'உழவனின் உள்ளத்தில் புயல் இருக்குமானால், வயலில் வளம் காண முடியாது' என்றார் அறிஞர் அண்ணா. ஜப்பானில் தொழிலாளர் நிலை வேறு. அங்கே அவர்களுக்கு லாபத்தில் பங்கு உண்டு. இங்கே ஒவ்வொரு தொழிலாளியும் ஒவ்வொரு ரூபாயையும் போராடிப் பெற வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் அவன் தன் உரிமைக்காகவும் போராட வேண்டும். உழைக்கவும் வேண்டும். ஆனால் உரிமையும் கடமையும் ஒன்றாக இணைந்தது. ஒன்று இல்லாமல் இன்றொன்று இல்லை. இதை நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம்.

''ஹிந்து ஆபீஸில் தொழிலாளர் தலைவன் நான். இந்த 14 ஆண்டுகளில் இதுவரை வேலை நிறுத்தம் கிடையாது. சுமுகமான உறவு நிலவி வருகிறது. 4 சதவீத போனஸிலிருந்து 28.33 சதவீத போனஸாக உயர்த்தியதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். ஒரு சிறு முணுமுணுப்போ ஸ்ட்ரைக்கோ இல்லாமல் சாதிக்கப்பட்டது இது.

''முதலாளிகள் பரந்த மனப்பான்மையுடன் இருக்க வேண்டும். உரிமையாளர் — தொழிலாளர் உறவு சுமுகமாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறை உள்ளவன் நான்.



✖ என். வி. என். சோமு

திரு ஈஸ்வரன்கூட, தமது தொழிலாளர் பிறந்த தினத்தில் அவர்களுக்குப் பரிசு கொடுத்து உற்சாகப் படுத்துகிறவர்தான். தொழிலகம் நம்முடையது; நாம் அதைச் சேர்ந்தவர்கள் என்ற மனப்பாங்கு தொழிலாளர்களுக்கு உண்டாகும் சூழ்நிலை வளர வேண்டும். ஏன், எங்கள் கட்சியே அண்ணா அவர்கள் சொன்னது போல் அண்ணன்—தம்பி என்ற குடும்பப் பாசத்துடன் உருவாகி வளர்ந்ததுதானே?

''அரசும் ஒரு முன்மாதிரியான முதலாளியாக — மாடல் எம்ப்ளாயர் போல்—இருந்து, தொழிலாளருக்கு எதிரான சட்டங்களை உருவாக்காமல் இருந்து, தொழிலாளர் நலன் காப்பதில் முன்னோடியாக விளங்க வேண்டும்.

''மே. தின நாளில் தொழிலாளர் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்!''

பேட்டி: சாருகேசி, தமயந்தி

லாவண்ய ராம கந்து-
ஜூடவே கதி...

கர்னாடக சங்கீதத்தின் உயிர்நாடியான தியாகய்யரின் 55 கீர்த்தனைகள் முழுதாகவும் பகுதியாகவும் கே. வி. மகாதேவன் மேற் பார்வையில் எஸ். பி. பாலசுப்பிரமணியன் குரலில் ரீங்காரமிடுகிறது.

மேரு கோவய்ய மம்மேலுகோ ராம
மேலைந வீதாஸமேத நா பாக்யமா....

ராமனைத் தவிர யாரையும் புகழ்ந்து பாட மாட்டேன் என்று சில துன்பங்களை அனுபவித்துக் கடைசியில் பாடிப் பாடி நாதப் பிரும்மானந்தாவாகிறார்.

ஓடனு ஜரிபே முச்சட கநரே
வநிதலாரநேடு.....

சோமயாஜுலுவைப் பார்க்கையில் தியாகையர் நினைவுக்கு வருவதற்குப் பதில் சங்கர சாஸ்திரிதான் மனதில் ஆக்கிரமித்துக்-கொண்டிருக்கிறார்.

சாந்தமுலேக ஸௌக்யமு லேது-
ஸாரஸ தள நயந.....

திருஷ்டி பரிகாரமாய் ஜோதி லட்சுமி நடனம். தியாகய்யாவின் மனைவியாய் கே. ஆர். விஜயா. வேறெந்த நடிகையைப் போட்டிருந்தாலும் இதைச் செய்திருப்பார்.

எந்தரோ மகாநுபாவு
லந்தரிகி வந்தனமு..

கேமரா ஒவ்வொரு பிரேமையும் கவிதை நயத்துடன் பார்க்கிறது. டைரக்டர் பாபு கலை அனுக்கமுள்ளவர் என்பது தெரிகிறது.

நிதி சாலா ஸுகமா ராமுநி ஸந்-
நிதிஸேவ ஸுகமா நிஜமுக பல்கு மநஸா

ஒரு நிமிடம் பேசினால் ஐந்து நிமிடம் பாடுகிறார்கள்.

நாத தநுமநிசம் சங்கரம்
நமாமி மே மநஸா சிரஸா....

• ஒரு நல்ல படம் பார்த்ததிருப்தி வரவில்லை. மாறாக ஒரு இனிய கச்சேரி கேட்ட உணர்வு மிகுக்கிறது.

தியாகய்யா


ராஜபார்வை

நமக்கு இரண்டு கண்கள்தான். கண் பார்வை யற்றவருக்கோ உடல் முழுவதும் கண்கள். ஊனமடைந்தோர் நலன் ஆண்டில் வந்துள்ள இப் படத்தில் ஆரம்பக் காட்சிகள் நம் அடி மனத்தை அசைத்துப் பிசைந்து விடுகின்றன.

கமலின் 100வது படம். கண்ணில்லாத ரகுவின் காதல் கதை. இரு வீட்டார் எதிர்ப்பு. சாதாரணக் கதைதான். ஆனால் ஹாஸன் பிரதர்ஸின் வசனமும் சங்கீதம் சீனிவாச ராவின் டைரக்ஷனும், இயல்பான நடிப்பும் புதுமையான கேரக்டர்களும் படத்துக்குப் பாலிஷ் போடுகின்றன. ஒவ்வொரு பிரேமையும் அனுபவித்து எடுத்திருக்கிறார்கள். அனுபவிக்கச் செய்திருக்கிறார்கள்.

நடிப்பில் எல்லோரையும் அமுக்கிவிடுபவர் தாத்தாவாக வரும் எல். வி. பிரசாத். மனத்தை விட்டு நீங்காத பாத்திரம். பேத்தியுடன் கொட்டமடித்து அவள் காதலுக்குத் துணை நின்று, இரவில் காதலனைச் சந்தித்து வரும்போது ஏணி வைத்து மாடியேற உதவி, மாதவியுடன் கண்ணைக் கட்டி விளையாடி— தாத்தா வரும்போதெல்லாம் தியேட்டர் அதிர்கிறது.

100வது படம் என்று கமல் அலட்டிக் கொள்ளவில்லை. அதுவே அவரின் வெற்றி. உயர்ந்தவர்களில் கமல் முன்பே குருடனாக நடித்துள்ளார். இப்போது கஷ்டப்படாமல் நடிக்கிறார். மாதவி கமலிடம் 'ஐ லவ் யூ' என்று சொல்ல, கமல் "இதோ பாருங்க நான் குருடன் கமாதி..." என, மாதவி மறுக்க, கமல் திரும்பவும் "நான் குருடன்" என்று ஆரம்பிக்க, ஒரே வேகத்தோடு மாதவி தன் உதடுகளால் கமலின் உதடுகளை அழுத்திப் பேசவிடாமல் முத்தமிடும் இடத்தில் காதல் ஜொலிக்கிறது. இதுபோல் நிறைய இடங்கள். பதத்துக்கு இது ஒரு சோறு.







மாதவியிடம் இவ்வளவு எதிர்பார்க்கவில்லை. பெரிய கண்களும், வேகமான நடிப்பும், உணர்ந்து செயல்படுகிறார்.

கமல் கரண்ட் கட்டானதும் ''அப்படியா எனக்கு ஒன்றும் வித்தியாசம் தெரியல'' என்கிறபோதும், மாதவியிடம் ''ஹோட்டல் வாசல்ல வெயிட் பண்றேன், சீக்கிரம் வந்துடு. நேரமானா அப்புறம் காசு சேர்த்திடும்'' என்கிற போதும், பீச்சில் சின்னப் பசங்கள் கமலின் கண்ணைக் கட்டி (குருடன் என்று தெரியாமல்) 3 விரலைக் காட்டி இது எவ்வளவு என்று கேட்க, கமல் குருட்டாம் போக்கில் சரியாகச் சொல்லிவிட சிறுவர்கள் ''கண் தெரியுது. நல்லாக் கட்டுங்கடா'' என்கிறபோதும் – மேலோட்டமாய் உடனே வருவது சிரிப்பு. ஆனால் அடுத்த நிமிடமே மனசுக்குள்ளே சோகம் பிசைகிறது.

மகேந்திரன் கமலுடன் சேர்ந்து நல்ல கொட்டம். சின்ன வயசுக் கமல் பிரமாத செலக்‌ஷன். அந்தக் கண்கள்....

கமலின் குடியிருப்புப் பகுதி, சுற்றுப்புறம் எல்லாம் கேமரா கண்ணில் ஆங்கிலப் படம் போன்ற பிரமை தருகின்றன. வடக்கிலிருந்து வந்தாலும் அபாரமான கேமரா. கமல் வயலின் வாசிக்கும்போது லைட்டிங் ரொம்ப எஃபக்ட்டிவ். ஒரே ஃபிரேமில் மாதவியின் அப்பா ஸ்லோ மோஷனில் புறப்பட மாதவி வேகமாக இயங்குவது புது அனுபவம். நல்ல படங்களுக்கு நிறைய சிரத்தை எடுத்துக்கொள்ளும் இளையராஜா.

கடைசியில் நாயகனும் நாயகியும் கிளைமேக்ஸில் தப்பி ஓடும் போதுதான் தெரிகிறது நாம் பார்ப்பது - **சினிமா என்று.**

-நளினி சாஸ்திரி

ஒரு கணக்கு

விஜயகாந்த்

அறை சற்றுப் பலமாகவே விழுந்தது. உமா கன்னத்தைப் பற்றிக் கொண்டாள். இது நான்காவது முறை.

''ஆனாலும் உனக்கு இவ்வளவு கோபம் ஆகாதுடா....''

பதறியபடிவந்த கல்யாணியையோ, அவளுடைய வார்த்தைகளையோ சிறிதும் லட்சியம் செய்யாதவன் போல் மிதியடிகளை அணிந்து கொண்டு மளமளவென்று புறப்பட்டு விட்டான் கணேசன்.

பகல் வேளைக்காக உமா கட்டிக் கொடுத்த டிபன் பொட்டலம் மேசை மீதே கிடந்தது.

அவன் தோளை ஆதாரத்துடன் பற்றிய கல்யாணி, ''சாப்பிட வா. என்ன செய்யறது சொல்லு? அப்பாவுக்குத் தப்பாமல் பிள்ளை வந்து பிறந்திருக்கிறான். அதே முரட்டு சுபாவம். முன்கோபம்...'' என்றாள்.

சொல்லிக் கொண்டு வரும் போதே சொற்கள் திடீரென்று அடைபட்டு நின்றன.

பிற்பகல்.

லெட்ஜரைப் புரட்டிக் கொண்டிருந்தான் கணேசன்.

'ஆனாலும் உனக்கு இவ்வளவு கோபம் ஆகாதுடா...'

தாயின் வார்த்தைகள் நெஞ்சைச் சுற்றிச் சுற்றி வந்தன.

'ஆகாதுதான்....'

கைகள் வெளிர்ப் பச்சை நிறத் தாள்களைப் புரட்டிக் கொண்டிருக்கையில் மனத்துள் ஓர் அறப் போராட்டம்.

'இந்தக் குணம் எனக்கு எங்கிருந்து வந்தது?....'

அந்தக் கேள்விக்கு விடையாகத் தந்தையின் நிழலுருவம் மனக்கண்ணில் தரிசனம் காட்டிற்று.

அந்த எண்ணங்களின் ஆக்ரோஷமான அலைமோதுதல்களைத் தாங்க இயலாதவனாக லெட்ஜரை மூடிவிட்டு அவன் எழுந்திருக்கையில்—

''சார்! உங்க அப்பா வந்திருக்கார். வராந்தாவிலே உட்கார்த்தி வச்சிருக்கேன்'' என்று சக ஊழியன் ஒருவனின் குரல் கேட்டது.

வெளியே வந்தான்.

வராந்தாவில் போடப்பட்டிருந்த சோபா ஒன்றில், சிந்தனையை ஒருசேரத் தேக்கிவைத்துக்கொண்டு இடதுபுறமாகத் திரும்பி வெற்றுச் சுவரின் வெள்ளைப் பூச்சையே கவனித்துக் கொண்டிருந்தார் சிவம்.

'என் அப்பாவா இவர்!....'

பழைய முகத்தின் பளபளப்பை மிதித்துத் தள்ளிவிட்டு வெள்ளையும் கறுப்புமாய் அப்பிக் கிடக்கும் ரோமங்கள். துவைத்துக் கட்டிய வேட்டி சட்டையில் வரி வரியாய்ச் சுருக்கங்கள். சற்றே கூன் விழுந்த முதுகு.

ஆண்மைக்குரிய இலக்கணங்கள் அத்தனையும் அழிந்து விட்டன. தானாக அழியவில்லை. அவரே அழித்துக் கொண்டு விட்டார்.

''அப்பா....'' — கூப்பிடும்போதே குரலில் ஒரு கரைவு.

''ஓ... வந்துட்டியா? பசிக்கிறதுடா.''

''வாங்க கேண்டீனுக்குப் போகலாம்.''

சொன்னவன் உள்ளே சென்று மானேஜரிடம் சொல்லிக் கொண்டு வந்தான்.

புறப்பட்டார்கள். கேண்டீனில் ஓர் ஒதுக்குப்புறமான இடத்தில் அமர்ந்தார்கள்.



''என்னப்பா சாப்பிடறீங்க?''

''மனசுக்கு ருசியில்லாதபோது வயித்துக்கு என்னடா? எதையாவது வாங்கு.''

டோக்கனைப் பெற்றுக் கொண்டு இரண்டு தட்டுக்களில் எதையோ சூடாக வாங்கி வந்தான்.

வாயருகே கையைக் கொண்டு போகையில் நடுக்கம் தெரிந்தது.

'ரொம்பவும் தளர்ந்து விட்டார். இந்த ரோஷம் இன்னும் எத்தனை நாளைக்குச் செல்லுபடியாகும்?'

சற்றைக்கெல்லாம் வெளியே வந்தார்கள். கேண்டீனை ஒட்டி வளர்ந்த ஒரு மரத்தின் நிழலில் சென்று நின்றார்கள்.

''உன் அம்மா எப்படிடா இருக்கா? உமா எப்படி இருக்கா?''

ஓடிப்போனவருக்கு உதட்டளவில் இன்னும் பந்தம் தொற்றிக் கொண்டிருக்கிறதா?

''எல்லாரும் நல்லா இருக்காங்க...''

பொய். முழுப் பொய்.

பல இரவுகள் அம்மா தூங்குவதே இல்லை. கழுத்தில் தாலியைச் சுமக்க வைத்த கணவன் நெஞ்சில் ஒரு பரிதவிப்பையும் சுமையாக இறக்கி வைத்து விட்டுப் போன பின் தூக்கமாவது ஒன்றாவது?

''ஆத்திரம் இப்படியாடா கண்ணை மறைக்கும்? ஒரு வார்த்தை சொன்னதுக்கு ரோஷப்பட்டுக் கொண்டு இப்படி என்னை



உன் கூடாரத்திலே தங்க வச்சிட்டுத் தன் னிச்சையாகக் கிளம்பிட்டாரே! இது எந்த நியாயத்திலேடா சேர்த்தி?''

கல்யாணி என்னென்னவோ சொன்னாள் ஒரு நாள். சொல்லிவிட்டு வாய் நிறைய அழு தாள். மனசு வலிக்கக் கதறினாள்.

இவனும் அழுதான்.

அத்தனை கண்ணீரிலும் கரையாத ஒரு பந்தம். சாம்பசிவத்துக்கு மட்டும் இது பொருந்தாதோ?

''அப்பா! மனசை லேசாக்கிண்டு நீங்க என்னோட வந்திடணும். உங்களுக்கு நீங்களே ஒரு தண்டனையை விதிச்சிட்டிருக்கீங்க.. இதனால அம்மாவுக்கு ஒரு சுகமும் இல்லேங்க றது வேற விஷயம். உங்களுக்கும் எந்தவிதப் பிரயோசனமும் இல்லேங்கறது உங்களைப் பார்க்கறப்பவே தெரியறது...''

அவர் வெறுமையாய்ச் சிரித்தார்.

''ரெண்டு நாள் போகட்டும்டா. யோசிச்சு முடிவெடுக்க எனக்குக் கொஞ்சம் அவகாசம் வேணும்....''

இரவு எட்டு மணி அளவில் அவன் வீடு திரும்புகையில், அவன் கையில் மல்லிகைப் பூப் பொட்டலம்!

கல்யாணி சிரித்தாள்.

''பித்துக்குளி! கையை நீட்டி உன் பலத்தை அவ கன்னத்துல காட்டு. அப்புறம் பூ வாங் கிண்டு வந்து அவளுக்கு ஐஸ் வை. என்னடா அக்கிரமம் இது? அவ முகத்தைப் போய்ப் பாருடா. அழுது அழுது வீங்கிப் போயிருக்கு. இன்னொருத்தியா இருந்தா இத்தனை நேரம் பிறந்த வீட்டுக்கு ரயிலேறியிருப்பா...''

உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாகச் சொற்சிலம்பம் ஆடத் தொடங்கிய தாயை ஏறிட்டு நோக்கியவன் அசடு வழிய நின்றான்.

உடை மாற்றிக் கொண்டு வந்தவன் கல் யாணியிடம் பேச்சை ஆரம்பித்தான்.

''அம்மா! அப்பாவை இங்கேயே வந்திடச் சொன்னேன்...''

''என்ன சொன்னார்?''

''யோசிக்க முடிவெடுக்க ரெண்டு நாள் அவகாசம் வேணுமாம்.....

''தாடியும் மீசையுமா கசங்கிப் போன டிரஸ்ல அவரைப் பார்க்கறப்ப என்னவோ போலிருக்கு.''

''யாருடா அவரை அப்படி இருக்கச் சொன்னது? நானா? நீயா? அவராகத்தானே போனார்? போகாதீங்கன்னு முட்டிண்டேனே தலைதலையா அடிச்சிண்டேனே! மனசோட வலி தாளாம நான் கண்ணாலையும் வாய்விட்டும் அழுதது அவருக்குத் தெரியலியே! ஏண்டா! வேளாவேளைக்குச் சாப்பிடறாரா கேட்டியா?''

''கேட்கலே. வாங்கிக் கொடுத்தேன். சாப்பிட்டார். கையிலே பணமும் கொடுத் தனுப்பினேன்...''

''நீ கொடுத்த பென்ஷன் செலவழிஞ்சிடுத் தாக்கும்!'' சொல்லிவிட்டுச் சிரித்தாள் கல் யாணி.

இரவின் அமைதியான சூழ்நிலையில் அவன் கட்டிலில் படுத்தபடி உமாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''உமா!....''

''ம்....''

''பலமா அறைஞ்சிட்டேன். வலிக்குதா?''

''இல்லே, மனசுதான் வலிச்சுது. அதுவும் போனஸ் வாங்கின உடனே மறைஞ்சிடுத்து!''

''போனஸா?''

''ஆமாம். வழக்கமா செவ்வாய், வெள்ளி யிலே ஒரு முழம் பூ வாங்கிண்டு வருவீங்க. கன்னத்துல அறை விழுந்தா ரெண்டு முழமா வாங்கிட்டு வரீங்களே! ஒரு முழம் போனஸ் தானே?....''

''ஆபீஸ்ல எனக்கு வேலையே ஓடலே.. சத்தியமா இனி அடிக்கமாட்டேன்.''

''சத்தியமெல்லாம் வேண்டாங்க. நீங்க என்னை அடியுங்க. திட்டுங்க. ஆனால் அம்மா பயப்படற மாதிரி மட்டும் செஞ்சுடாதீங்க.''

''அம்மா பயப்படறாளா?''

''ஆமா. அப்பாவோட குணம் உங்களுக்கு அப்படியே படிஞ்சிருக்காம். அவரும் இப்படித் தான் கோவத்துல கண்ணுமண்ணு தெரியாம அடிச்சிப்பிட்டு சாயந்திரமானு ரெண்டு முழம் பூவோட வந்து நிப்பாராம். நீங்களும் அப் படியே செய்யறதைப் பார்த்ததும் அம்மா வுக்குப் பயம். எங்கே நீங்களும் ஒருநாள் உறவை வெட்டிக்கிட்டுத் தனியா போயிடுவீங் களோன்னு....''

உமாவின் கண்கள் ஏதோ ஒரு விபரீதக் கற்பனையில் மருட்சியை உமிழ்ந்தன.

''உமா! இதோ பார். அந்த மாதிரி யெல்லாம் எதுவும் நடக்காது. அப்பாவை இங்கே வந்திருங்கன்னு சொன்னேன். நாளைக்கு மறுநாள் முடிவு தெரியும். கட் டாயம் வந்திடுவார். எல்லாரும் ஒண்ணா இருக்கணும். நல்லா இருக்கணும்!''

மறுநாள். வேலைகளைமுடித்துக் கொண்டு மணி ஐந்தைத்தொட்டதும் கணேசன் அலுவ லகத்தை விட்டு வெளியே வந்தான்.

அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தார் சாம்பசிவம்.

''அப்பா! பெட்டி படுக்கை யெல்லாம் எடுத்திண்டு வரலியா?''

''நாளைக் காலையில ஏழு மணிக்கெல்லாம் வந்திடறேன். அம்மா கிட்ட சொல்லு.''

''ஏண்டி, உன் காலேஜ் லெக் சரரையே மணந்து கொண்டா யாமே. வாழ்க்கை எப்படி?''

''அதே ''போர்!''

–கே. வி. கோபால்



அந்தச் சொற்கள் அவனது உடலில் ஊடுருவி இரத்த நாளங்களிலெல்லாம் பரவி ஓர் இன்ப வேதனையில் அவனை ஆழ்த்தின.

அவர் கையில் பத்து ரூபாய் தாளொன்றைக் கொடுத்தான். ''ஆட்டோவிலேயே வந்துடுங்க.''

''அம்மா....!'' நடையில் ஒரு வேகம். குரலில் ஒரு வேகம்.

''ஏண்டா! பாறையாக் கிடந்த மனசு பாகாய் உருகிப் போச்சா? உன் அப்பா வரேன்னு சொல்லிட்டாரா?''

கல்யாணியின் கேள்வி கணேசனை அதிர வைத்தது.

''அம்மா அப்பா புது மனுஷராயிட்டார். தாடி மீசையெல்லாம் உதிர்ந்து போச்சு. பளிச்சின்னு உடுத்திண்டு உத்தியோகம் பார்த்த பழைய அப்பாவா மறுபடியும் அவதாரம் எடுத்திருக்கார்....''

''ஏண்டா! காலேலே கோவிச்சுண்டு சாயங்காலம் திரும்பி வரப்போ ரெண்டு முழம் பூ வாங்கிண்டு வருவார். இத்தனை நாளைக்கப்புறம் திரும்பி வருகிறவர் எத்தனை முழம் பூ வாங்கிண்டு வரணும்?''

அந்தக் கணக்குக்கு யார் விடை சொல்வது? சிரித்தான்.

''நாளைக்குக் காலேலவரேன்னு சொன்னார்.''

அந்த நான்கு சொற்களே ஒரு மூலிகை ரசமாய் உள்ளே இறங்கி அம்மாவுக்குத் தெம்பை ஊட்டியிருப்பதை உணர்ந்து அந்தக் கணக்கை வெகுவாக ரசித்தான்.

கடிகார முட்கள் பத்து, பதினொன்று என்று மணியைக் கூட்டிக் கொண்டே போயின.

கல்யாணி தூங்கவில்லை.

மணி ஐந்து.

'இன்னும் கொஞ்சம் போனா பொழுது விடிஞ்சுடும். அவர் எப்ப வருவார்னு சொன்னான்? ஓ!... காலையிலேன்னான். இல்லையா? நேற்றைக்கே வந்திருந்தா என்னவாம்? அப்படி வந்தா தன்னோட ரோஷத்துக்குத் தங்கம் வைரத்தோட மதிப்பு இல்லாமப் போயிடும்னு? கேட்கத்தான் போறேன். எல்லாத்தையும் கேட்பேன். கேட்கறதையும் அவர் சமுகமா இருக்கிற நேரம் பார்த்துக் கேட்கணும். இல்லேன்னா வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்துல வாசம் செய்ய ஆரம்பிச்சுடும்!....'

அவன் மீது அக்னிக்குழம்பாக வார்த்தைகளை இவ்வளவு அவ்வளவு என்றில்லாமல் மொண்டு ஊற்றிவிட்டு வீட்டை விட்டு அவர் புறப்பட்ட அன்று—

''ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சுக்கோ. நமக்குள்ளே இருந்த பந்தம் கண்ணாடியைத் தரையிலே ஓங்கி அறைஞ்சு சில்லுச் சில்லா உடைச்சு எறியற மாதிரி நொறுங்கிப் பொடிப் பொடியாயிடுத்து. மறுபடியும் என்னைப் பார்ப்பேன்னு சொப்பனம் கண்டிண்டிருக்காதே....''

நினைக்கும்போதே நெஞ்சு வலிக்குது.

'இப்படியா ஒரு மனுஷனுக்குக் கோபம் வரும்? மறுபடியும் பார்க்க முடியாதாமே! இன்னும் கொஞ்சம் நேரம் போனா இங்கே தானே வரப்போறேன்? உங்களைப் பார்க்



''எங்க வீட்டிலே திடீர்னு விருந்தாளிகள் வந்திருக்காங்க. அதனாலே இந்தக் கரண்டியிலே...!''

''என்ன வேணும்?''

''பத்து மூட்டைப்பூச்சி இருந்தா அம்மா வாங்கிட்டு வரச் சொன்னாங்க இரவலா. விருந்தாளிங்க படுக்குற தலையணையிலே விடணுமாம்!''

-அ. இராமதாஸ்

கத்தானே போறேன்? அப்படி உங்களை நான் பார்க்க முடியல்லேன்னா அந்தப் பாவத்தைச் செஞ்சவா யாரு? அந்தத் தண்டனை யாருக்கு?....'

சீராகச் சென்று கொண்டிருந்த நினைவோட்டம் லேசாகத் தடம் புரள ஆரம்பித்தது.

இதயத்தின் ஒரு மூலையில் தலை நீட்டிய வலி கொஞ்சம் கொஞ்சமாக விசுவரூபம் எடுத்து உடம்பெல்லாம் வியர்க்கச் செய்து...

வலி அதிகமாகிக் கொண்டு வந்து, நெஞ்சைக் கைகளால் பற்றிக் கொண்டாள்.

உறக்கம் கலைந்து உமா எழுந்து வந்தாள். கல்யாணியைப் பார்த்தாள்.

''என்னம்மா செய்யறது?''

''நெஞ்சு வலி தாங்க முடியலே. கணேசனைக் கூப்பிடேன்...''

ஓடினாள்.

கணேசன் பதறியபடி வந்தான். நிலைமை புரிந்தது.

''உமா! டாக்டரைக் கூட்டிண்டு வரேன். அம்மாவைப் பார்த்துக்கோ...''

டாக்டர் வருவதற்குள் அவள் அடங்கிப் போயிருந்தாள்.

வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் ஓசை. சாம்பசிவம்தான்.

பெட்டி படுக்கையோடு இறங்கிக் கொண்டிருந்தார். அவற்றைத் தவிர கையில் ஒரு பொட்டலம்.

'ஏண்டா! காலையில கோவிச்சுண்டு சாயங்காலம் திரும்பி வரப்போ ரெண்டு முழம் பூ வாங்கிண்டு வருவார். இத்தனை நாளைக்கப்புறம் திரும்பி வருகிறவர் எத்தனை முழம் பூ வாங்கிண்டு வரணும்?'

தற்கால தமிழ் நாவல்!



✖ விவாதத்தில் தீவிர பங்கேற்றவர்கள

மதுரையில் உள்ள கல்லூரிகளில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று கல்வி, ஒழுக்கம், விளையாட்டு இப்படிப் பலதரப்பட்ட துறைகளிலும் முன்னணியில் நிற்பது பாத்திமா பெண்கள் கல்லூரி. பிரான்ஸைச் சேர்ந்த Sisters of St. Joseph Lyons – ஆல் நடத்தப்படுகிறது இக்கல்லூரி.

கல்கி நினைவு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவரும், துரிதமாக வளர்ந்து வரும் பெண் எழுத்தாளருமான திருமதி எம். ஏ. சுசீலா இக்கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியையாகப் பணி புரிகிறார். அவரது முயற்சியாலும், கல்லூரி நிர்வாகத்தின் ஒத்துழைப்பினாலும் ‘தற்கால தமிழ் நாவல் இலக்கியப் போக்கு’ எனும் தலைப்பில் இக்கல்லூரி மாணவரிடையே ‘கல்கி’ ஒரு விவாத அரங்கை நடத்தியது.

ஆறு மாணவிகள் விவாதத்தில் பங்கேற்றனர்.

பங்கேற்ற மாணவியர்:

1. குமாரி எஸ். பிரமீளா
2. குமாரி ஆர். மலர்விழி
3. குமாரி ஜான்ஸி ராணி
4. குமாரி ஆரோக்கிய மேரி செல்வி
5. குமாரி கே. ஜோஸபின் மேரி
6. குமாரி பி. அருள்மொழி

பிரமீளா: தற்போது பெரும்பாலான தமிழ் நாவலாசிரியர்கள் மேல்மட்ட வர்க்கத்தினர் சம்பந்தப்பட்ட பிரச்னைகளைத்தான், அதிகம் எழுதுகின்றனர். பொருளாதார கீழ் மட்ட வர்க்கத்தின் பிரச்னைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றைப் பற்றிச் சிறிதும் கவலைப்படுவதேயில்லை....

செல்வி: எல்லா எழுத்தாளர்களும் அப்படித்தான் என்று சொல்லிவிட முடியாது. ஜெயகாந்தன், ஜெயந்தன் போன்ற எழுத்தாளர்கள் நீ சொன்ன பிரச்னைகளைத்தான் நிறைய எழுதியிருக்கிறார்களே...

பிரமீளா: இது மாதிரி ஓரிருவரைத் தவிர பெரும்பாலான நாவலாசிரியர்களும் எழுத்தை ஒரு வியாபாரமாகக் கருதித்தான் எழுதுகிறார்கள். எழுத்து என்பது மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகிற ஒரு சாதனம் என்கிற பிரக்ஞையே பல நாவலாசிரியர்களுக்கும் இல்லை. அதிலேயும் பாலுணர்வு பற்றியும், தகாத பாலுணர்வு உறவு பற்றியும் எழுதும் நாவலாசிரியர்கள்தான் மிக மிக அதிகம். சமுதாயத்திலே வேறு பிரச்னையே கிடையாதா?

ஜான்ஸி ராணி: இதற்கு அடிப்படைக் காரணமான பத்திரிகை ஆசிரியர்களைத்தான் நான் குற்றம் சாட்டுவேன். குறிப்பிட்ட சில எழுத்தாளர்கள் பின்னால் மட்டும் போய்த் தொங்கிக் கொண்டு அவர்கள் எதை எழுதினாலும் போடத் தயாராக இருப்பதால்தான் இந்நிலை ஏற்படுகிறது. சமீப காலமாக மாதாந்திர நாவல்கள் எனும் பெயரில் பத்திரிகைகள் வெளியிடுகின்றனவே அவற்றை விட வேறு அவலம் தமிழ் நாவல் இலக்கியத்துக்கு வர வேண்டாம். எவ்வித கலா ரசனையோ, எழுத்து வளமோ, கதைக் கருவோ இல்லாமல் கை போனபடி எழுதும் எழுத்துக்களெல்லாம் நாவல் என்ற பெயரில் வெளிவந்து விடுகிறது. குறிப்பிட்ட தினத்துக்குள் நாவல் வேண்டும் என்று பத்திரிகை ஆசிரியர்கள் கெடு வைக்க, அதற்குள் எழுதியாகவேண்டிய கட்டாயத்தில் எவ்விதக் குறிக்கோளும் இல்லாதபடி எழுத்தாளர்கள் எழுதுவதுதான் இந்த அவல நிலைக்குக் காரணம்.

அருள்மொழி: இதற்குப் பத்திரிகை ஆசிரியர்களை மட்டும் குறை சொன்னால் போதாது. எழுத்தாளர்களையும் சொல்லத்தான் வேண்டும். பத்திரிகையாசிரியர்கள் நெருக்கடி செய்தால் என்ன? எழுத்தாளர்கள் மன உறுதியோடுஇருந்து நல்ல ஆழமான படைப்புக்களைத் தருவோம், இல்லாவிட்டால் சும்மா இருப்



✖ பார்வையாளரில் ஒரு பகுதி

போம் என்ற குறிக்கோளுடன் செயல்படலாமே!

பிரமீளா: எழுத்தாளர் எண்ணிக்கையும், போட்டியும் அதிகமாகி விட்ட நிலையில் ஒருசில எழுத்தாளர்கள் மன உறுதியோடு இருந்தாலும் மற்றவர்கள் பத்திரிகையாசிரியர்களின் இழுப்புக்குப் போவதால் இந்நிலை நீடிக்கத்தான் செய்கிறது. இதனால் நல்ல எழுத்துக்கள் பிரசுரத்துக்கே வராமல், மக்களின் பார்வைக்கு வராமல் போய்விடுகிறதே அதுதான் ரொம்ப விசனத்துக்குரியது.

அருள்மொழி: இதற்கு அடிப்படையாக வாசகர்களையும் குறை கூற வேண்டியது அவசியமாகிறது. தங்களது வேலைச் சுமைக்கு இடையில் கிடைக்கும் நேரத்தில் மேலெழுந்தவாரியான எழுத்துக்களைத்தான் விரும்பிப் படிக்கின்றனர். அழுத்தமான, ஆழமான எழுத்துக்களை அதிகம் விரும்புவதில்லை. இதனால்தான் பத்திரிகையாசிரியர்கள் இம்மாதிரி எழுத்தை நாடிப் போகின்றனர்.

பிரமீளா: பத்திரிகைகளில் தொடர் கதைகளாக வெளிவரும் பலவற்றில் நாவல் என்ற அந்தஸ்து பெறத் தகுதிவாய்ந்தவை எத்தனை?

ஜான்ஸி ராணி: நீ சொல்வது சரிதான். பெரும்பாலான தொடர்கதைகள் இத்தகைய அந்தஸ்தைப் பெறத் துளிக்கூட அருகதையற்றவை. அந்தந்த வாரம் பக்கத்தை நிரப்புகிற கதையாக இருக்கிறது. பத்திரிகையாசிரியர்களில் பலரும்குறிப்பிட்ட சில எழுத்தாளர்களிடமே திரும்பத் திரும்பப் போய்க் கையேந்தி நிற்க, அந்தக் கதாசிரியர்களும் ஏதோ ஒரு சம்பவம், பாலுணர்ச்சியைத் தூண்டும் சில வரிகள், கடைசியில் ஒரு சஸ்பென்ஸ் என்று வாரா வாரம் பிச்சை போட்டு அனுப்புகிறார்கள்.


(பார்வையாளரிலிருந்து தமிழ்ப் பேராசிரியை) பாதிமா: பொதுவாக இப்படி இருந்தாலும் நல்ல நாவல்கள் வெளிவருவதையும் குறிப்பிட வேண்டுமல்லவா? சமீபத்தில் வந்த தொடர் கதைகளில் இந்திரா பார்த்தசாரதியின் 'வெந்து தணிந்தகாடுகள்' ஒரு சிறப்பான படைப்பு!

பிரமீளா: சிவசங்கரியின் 'ஒரு மனிதனின் கதை'யும் தான். நா. பார்த்தசாரதி எழுதும் 'நிசப்த சங்கீதங்களையும்' குறிப்பிடலாம். வேறு சிலவும் உண்டு. சுஜாதா சிறப்பான இலக்கியம் படைக்கத் தக்க திறமை வாய்ந்தவர். அதே சமயத்தில் மிகப் பிரபலமாகவும் இருக்கிறார். பத்திரிகை ஆசிரியர்கள் அவரைப் படுத்தும் பாட்டில் அவர் சர்வசாதாரண நாவல்களையும் எழுதித் தமது திறமையைப் பாழடித்துக் கொள்கிறார் என்பது என் கருத்து.

பிரமீளா: தற்போது பெரும்பாலான நாவலாசிரியர்கள் சமுதாயப் பிரச்னைகளை அலசும் விதமாக நாவல் எழுதுவதில்லை. அப்படி ஓரிருவர் எழுதினாலும் பிரச்னைகளுக்கான தீர்வைச் சொல்லாமல் விட்டுவிடுகின்றனர். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

✖ அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக: எம். ஏ. சுசீலா, நாயகள், உதவி முதல்வர் தெரேஸா, முதல்வர் என். சகுந்தலா, தமிழ்ப் பேராசிரியை பாதிமா





(பார்வையாளரிலிருந்து) ராக்கினி மேரி: இதனை நான் ஆட்சேபிக்கிறேன். ஒரு எழுத்தாளனது கடமை சமுதாயத்தில் மண்டிக் கிடக்கும் பிரச்னைகளை அணுகி அவற்றின் தீவிரத்தைச் சமுதாயத்துக்கே வெளிச்சம் போட்டுக் காட்டுவதோடு சரியாகிவிடுகிறது. பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டியது சமுதாயத்தின் கடமையாகும்.

பிரமீளா: வெறும் பிரச்னைகளை மட்டும் காட்டுவதற்கு எழுத்தாளன் எதற்கு? சாமானியனே போதுமே!

ராக்கினி: சாமானியன் பிரச்னையை எடுத்துச் சொன்னால் அது நாளிதழ் செய்தி போலிருக்கும். எழுத்தாளன் பிரச்னையை இலக்கிய நயத்துடன் எடுத்துக் கூறுகிறான். அவன் அரசியல்வாதியாகவோ நிர்வாகத் திறன் கொண்டவனாகவோ இருக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லை. சமுதாயத்தில் இருக்கும் பிரச்னைகளை இனம் கண்டுகொண்டு அனைவரும் அறிய வெளிப்படுத்துவதே பெரிய தொண்டாகும். அதற்கான தீர்வு என்னவென்று அவனுக்கே தெரியாமல் இருக்கலாம். 'நீ தீர்வு சொல்லித்தான் ஆக வேண்டும்' என்று அவனை வற்புறுத்துவதில் அர்த்தமே இல்லை!.

அருண்மொழி: நீங்கள் சொல்வது சரிதான்.

பிரமீளா: ஒரு விஷயத்தை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். முன்பெல்லாம் தமிழ் நாவல்களில் நாடகத்தைப் பார்ப்பது போன்ற செயற்கையான நடை இருக்கும். தற்போது இந்நிலை மாறிப் பல நாவலாசிரியர்களும் இயற்கையான நடையில் எழுதி வருகின்றனர்.

மலர்விழி: ஆனால் தற்போது ஆங்கிலக் கலப்பு அதிகமாகி விட்டது. இது அவசியமில்லாதது... தவிர்க்கப்பட வேண்டியது!

ஜான்ஸி ராணி: பாத்திரங்கள் பேசும் போது வேண்டுமானால் யதார்த்தமாக அவர்கள் பேசுவது போல ஓரிரு ஆங்கில வார்த்தைகளைக் கலக்கலாம்.

பிரமீளா: தமிழ் நாவல் இலக்கியம் வளர வேண்டுமானால் கதாசிரியர்களை அவசர அவசரமாக எழுதச் சொல்லி அவர்கள் ஏனோதானோ என்று எழுதுவதைப் போடாமல் நிதானமாக ஆழ்ந்து சிந்தித்து எழுதச் செய்து . அப்படியே புஸ்தகமாகவோ, தொடர் கதைகளாகவோ சிதைக்காமல் பிரசுரிக்க வேண்டும்.

ஜான்ஸி ராணி: அழுத்தமான எழுத்துக்களை வரவேற்றுப் படிக்கும் மனப்பான்மை வாசகர்களிடம் வளரவேண்டும். வாசகர்களின் ரசனையை உயர்த்தும் விதமான எழுத்தைப் பிரசுரிக்கும் மனப் பக்குவமும் பொறுப்பும் பத்திரிகையாசிரியர்களிடமும் வளர வேண்டும். இல்லையேல் தற்காலத் தமிழ் நாவல் தற்காலிக இன்பம் பயப்பதாகவே முடிந்து போகும்.

தொகுப்பு: நாயகன்



அரிப்பும் எரிச்சலும் தரும்
வியர்க்குருத் தொல்லையிலிருந்து
விடுதலை பெறுவீர்!
நைஸில்
உபயோகிப்பீர்-
மிகத்துரித நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு
பவுடர.
2
பேக்குகளில்—
'ப்ளூ' மற்றும்
'ஸாண்டல்வுட்'
வாங்குவீர் நைஸில்.
விரட்டுவீர்
வியர்க்குருவை.
பால்கம் பவுடரைவிட
குறைந்த விலையில்!
மருந்துக் கலவை
யுள்ள நைஸில்:
1. அதிக வியர்வை
யைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை
உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்
படுத்தும் கிருமி
களை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இத
மளிக்கிறது.
Glaxo
nycil
GN-79-PR-TM



Dr. S. R. சிவராஜ்

வாலிபர்கள் ! **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி,
தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ,
இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்'
ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

❊ **குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்**
❊ **கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்**

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள், அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

ஆலோசனைக் கட்டணம் ரூ. 10-00 ❊ **சிகிச்சைக் கட்டணம் தனி**

எமது கேட்லாக் வேண்டுவோர் ரூ. 1-00 ஸ்டாம்ப் அனுப்பியோ, M.O. செய்தோ பெறலாம்

எமது உயர்ந்த — விசேஷ — ஸ்பெஷல் மருந்துகள் கிடைக்கும்

உயர்ந்த ரக சிகிச்சை 1 மாதம் ★ விசேஷ சிகிச்சை 1 மாதம் ★ ஸ்பெஷல் சிகிச்சை 1 மாதம்

A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு	A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு	மீடியம்	ஸ்பெஷல்	1 நெம்பர்
1500-00	750-00	500-00	400-00	300-00	200-00	175-00	150-00	115-00

ஹோட்டாபீசுக்கு லெட்டர் எழுதி V.P.P. மூலமும் பெறலாம். தேவையான சிகிச்சைக்கு டிராப்ட் மூலம் (பேங்க் ஆப் இந்தியா) வாங்கி அனுப்பினால் ரிஜிஸ்டர் பார்சல் மூலம் பெறலாம்.

மாதாந்திர சுற்றுப் பயண விவரம்: ஒவ்வொரு ஆங்கில தேதிகளிலும்

பிரதம வைத்தியர் தங்குமிடங்கள்

சென்னை-600 001. பிரதி மாதம் 1 2 & 3-ந் தேதி ஹோட்டல்ரோஸ்லக்ஸ். போன்: 24236. 190, NSC போஸ் ரோடு, பூக்கடை எதிரில். காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை.

சென்னை-600 002. 4 முதல் 10ந் தேதி வரை. ராமச்சந்திரா லாட்ஜ். போன்: 846526 6, அத்திப்பட்டன் தெரு, அண்ணாசாலை சமீபம். காலை 7 முதல் இரவு 7 மணி வரை.

சேலம் தலைமை அலுவலகம்: 11, 16, 17, 18, 19, 20, 27, 28, 29, 30 தேதிகள்.

திருச்சி: 9, 10 தேதி. அசோக் பவன், ஜங்ஷன் ரோடு, போன்: 25783. காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கோவை: 12, 13ந் தேதி. ஸ்ரீ லக்ஷ்மி லாட்ஜ், ராஜ வீதி, போன்: 33330.

பொள்ளாச்சி: 14ந் தேதி. மாடர்ன் லாட்ஜ், தாலுகா ஆபீஸ் எதிர் சந்து. காலை 8 மணி முதல் 12 மணி வரை.

திருப்பூர்: 14ந் தேதி. ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. மாலை 3 மணி முதல் 5 மணி வரை.

ஈரோடு: 15ந் தேதி. ஆனந்த் லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

மதுரை: 21, 22, 25, 26 தேதி: மணீஸ் கேப் (டவுன் ஹால் ரோடு) போன்: 22019. காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை.

தூத்துக்குடி: 23ந் தேதி: ராதா லாட்ஜ், ஜி.சி. ரோடு. காலை 9 முதல் பகல் 12 மணி வரை.

திருநெல்வேலி: 23, 24, தேதி. நெல்லை லாட்ஜ் காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை.

உதவி வைத்தியர் தங்குமிடங்கள்:

விழுப்புரம்: 3ந் தேதி. வாசவி விஹார் ஹோட்டல், எம். ஜி. ரோடு. காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கடலூர் என்.டி. 3ந் தேதி. ஹோட்டல் பிருந்தாவன், மாலை 3 முதல் இரவு 8 மணி வரை.

சிதம்பரம்: 4ந் தேதி. ஜெயராம் லாட்ஜ், (மேல வீதி) காலை 7 முதல் பகல் 3 மணி வரை.

கும்பகோணம்: 5ந் தேதி. தாஜ்மஹால் லாட்ஜ் பொற்றாமரைக் குளம் (போன்: 1423) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

தஞ்சாவூர்: 6ந் தேதி. அசோகா லாட்ஜ், (ராஜா கலை அரங்கம்) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

திண்டுக்கல்: 22ந் தேதி. ஆரிய பவான் லாட்ஜ் பழனி ரோடு. காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை.

விருதுநகர்: 23ந் தேதி. ஹோட்டல் ஆஞ்சநேயா, காலை 7 மணி முதல் 12 மணி வரை.

இராஜபாளையம்: 23ந் தேதி. அசோகா லாட்ஜ். மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

நாகர்கோவில்: 24ந் தேதி. உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண பவன், போஸ்டாபீஸ் ஜங்ஷன் ரோடு. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

தென்காசி: 25ந் தேதி. பார்வதி லாட்ஜ் காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.


தலைமை அலுவலகம்:

சிவராஜ் சித்த வைத்தியசாலை

C-56, தமிழ்ச் சங்கம் ரோட் பின்புறம்

(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)

காந்தி ஸ்டேடியம் - சேலம்-636007



22. சிவந்த மண்ணை நோக்கி...

அசோகன் கலிங்கத்துக்குப் புறப்பட்டபோது எப்படிப் புறப்பட்டானோ தெரியாது. ஆனால் அதைவிட மிடுக்காகவும் உணர்ச்சி மிக்கதாகவும், வெற்றியைப் பற்றிய உறுதி யுள்ளதாகவும் அவனது நாகர்கோவில் பயணம் இருந்தது.

முதலில் திருவனந்தபுரம் மெரிலாண்ட் ஸ்டுடியோவுக்கு போன் செய்து சுப்பிரமணிய பிள்ளையை அழைத்து, கன்னியாகுமரியில் இருக்கும் அவரது வீட்டைக் கேட்டு வாங்கிக் கொண்டான். கன்னியாகுமரி நண்பர் ஒருவரிடம் சாப்பாட்டுக்கு ஏற்பாடு .செய்து கொண்டான்.

ஒரு காரில் குழந்தைகள், இரண்டு கார்களில் அவனுக்கு வேண்டியவர்களை ஏற்றிக் கொண்டான். அவனும் ஜெயகாந்தனும் ஒரு காரில் ஏறிக் கொண்டார்கள்.

ஜெயகாந்தன் கூட இருந்தால் கார் பயணத்தின் களைப்புத் தெரியாதே! ஜெயகாந்தன் சோவியத் யூனியன் மீது மதிப்பும், மரியாதையும் மிக்கவர். அவனது சோவியத் யூனியன் விஜயம் பற்றிக் கேட்டுக் கொண்டே வந்தார். அவனும் விவரித்துக் கொண்டு வந்தான்.

அவனது அருமை மகள் அலமேலுவின் திருமணத்துக்குப் பிறகு 'அவன் சோவியத் யூனியனுக்குச் செல்ல வேண்டும்' என்று நண்பர் மோகன் குமாரமங்கலம் கேட்டுக் கொண்டார்.

அவன் கூட பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ.யும் மன்னை அம்பிகாபதியும் வருவதாகவும், கூட யாராவது ஒரு கலைஞரைச் சேர்த்துக் கொள்ளும்படியும் மோகன் கூறினார்.

பாடக்கூடிய கலைஞராக யோசித்து யோசித்து, கடைசியில் அவன் மெல்லிசை மன்னர் விசுவநாதனை முடிவு செய்தான்.

டெல்லிவரை எல்லோருக்கும் சொந்தச் செலவு. டெல்லியிலிருந்து இந்தோ சோவியத் கலாசாரக் கழகத்தின் செலவு.


ஏராளமான காங்கிரஸ்காரர்கள் சென்னை விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்தார்கள்.

டெல்லியில் அவனும் விசுவநாதனும், 'ரிட்ஸ்' ஹோட்டலில் தங்கினார்கள். அங்கேதான் ஹோட்டல்களில் போடப்படும் விலைவாசிகளின் மீது அவனுக்குக் கடுங் கோபம் வந்தது.

ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கிக்கொண்டே பெட்டிக்கடையில் சோடா வாங்க ஆரம்பித்தான்.

மறுநாள் காலையில் ஆப்கானிஸ்தான் விமானமான ஹரியானா - ஆப்கனிஸ்தான் ஏர்லைன்ஸில் புறப்பட வேண்டும். காபூலில் ஒரு முழு நாள் தங்கி, பிறகு சோவியத் விமானத்தில் போக வேண்டும் என்றார்கள்.

காபூல் விமானம் வசதியாகவே இருந்தது. ஆனால் காபூலில் போய் இறங்கியதும் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.



✕ ஆப்கானிஸ்தானத்தில் ஒரு குதுப்மினார்: இந்த ஆப்கன் கோபுரத்துக்கும் நமது குதுப்மினாருக்கும் இடையில் கட்டிடக் கலை ரீதியான பல ஒற்றுமைகள் உண்டு.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1981

அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம் போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ. 1000**
இரண்டாம் பரிசு	**ரூ. 500**
மூன்றும் பரிசு	**ரூ. 500**

(இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம்)

ஆகமொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப்பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளருக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.
- முடிவு தேதி ஜூன் 15.
- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர் கல்கி, சென்னை-600 032

காபூலில் ஏர்லைன்ஸ் செலவில் தங்கு வதானால், டெல்லியிலிருந்தே ஒரு சீட்டு வாங்கி வந்திருக்க வேண்டுமாம்; இல்லையென்றால் சொந்தச் செலவாம்.

இதை டெல்லியில் ஒரு பாவியும் சொல்லித் தரவில்லையே!

நாங்கள் திருதிருவென்று விழித்தோம். அங்கே பல்வேறு விமானக் கம்பெனியிலும் இந்திய தூதரகத்திலும் வேலை செய்யும் பத்துப் பதினைந்து தமிழர்கள் கூடிவிட்டார்கள். அவர்கள் எல்லோரும் பிராமணர்கள். 'தங்கள் வீட்டில் தங்கலாம்' என்று எல்லோரும் அழைத்தார்கள்.

எந்த வீடும் அவனுக்கு வசதிப்படாது. தெ. பொ. மீ.க்கு மட்டும் அந்த மாதிரி வீடுகளில் தங்குவதில் ஒரு குஷி. காரணம்: தயிர், ரஸம் சாதம் கிடைக்குமல்லவா!

அந்த பிராமண நண்பர்களின் வீடுகளுக்கு அவனும் சென்றான். எல்லா வீடுகளுமே தமிழ் நாட்டுப் பாணியில் இருந்தன.

அவனும், விசுவநாதனும் ஹோட்டல் காபூல் என்ற நட்சத்திர ஹோட்டலில் ரூம் எடுக்கச் சொன்னார்கள். அங்கு இடமில்லை. பிறகு ஒரு சின்ன ஹோட்டலில் ஒரு அறையை எடுத்துக் கொண்டார்கள்.

காபூலில் தங்குவதற்கான ஹோட்டல்கள் மூன்றே. சாப்பிடுவதற்கான ஹோட்டலோ ஒன்றே ஒன்று. ஹோட்டல் கைபர் என்பது அதன் பெயர்.

இதுதான் காபூலா! இந்தியாவைத் தினறடித்த கஜினி முகம்மதுவும், கோரி முகம்மதுவும் இங்கிருந்தா புறப்பட்டார்கள்?

ஒரே வறுமையின் ஏகபோகம்; எங்கு பார்த்தாலும் பழுப்பு நிற மணற்காடு; தெருவில் மருந்துக்குக்கூட ஒரு பெண்ணின் நடமாட்டம் இல்லை. ஆனால் ஹோட்டல் கைபரில் சாப்பாடு அற்புதம்!

பச்சைப் பசேல் என்று அங்கு கிடைக்கும் கீரை இந்தியாவில் கிடைத்தால் மாமிசமே தேவையில்லை. கீரை மட்டுமா? மாமிச வகைகளிலும் கைபர் ஹோட்டல் தயாரிப்பு போல் இந்தியாவில் எங்கும் காண முடியாது.

அந்தத் தீனிப் பண்டாரம் நன்றாகவே இன்று தீர்த்தான். மறுநாள் புறப்படுகிற வரை அதே சாப்பாடுதான்.

பகிரங்க மார்க்கட்டிலேயே மன்னரின் அரசாங்கம் இருக்கிறது. அவர்கள் போகும் போது மன்னராக இருந்தவர்தான் மூன்று ஆண்டுகளுக்கு முன் நாடு கடத்தப்பட்டார்.

காபூல் மக்கள் தங்களை 'ஆரியர்கள்' என்று அழைத்துக் கொள்கிறார்கள். காபூல் முஸ்லீமும், ஜெர்மானியரும் ஆரியர்கள்தான். 'ஆரியர்கள் என்றால் பிராமணர்கள்' என்று நம் ஊர் அகராதி அர்த்தம் கூறுகிறது. ஆனால் ஊருக்கு ஊர் அகராதி மாறுபடுகிறது.

ஆப்கனிஸ்தான்தான் மத்திய ஆசியா. 'ஆரியம்' என்ற வார்த்தையே அங்கு பிறந்தது தான். அது ஒரு இனத்தின் பெயரல்ல. தன்மையின் பெயர். புனிதமானவர்கள் என்ற பொருளிலேயே ஆப்கானியர்கள் தங்களை ஆரியர்கள் என்று அழைத்துக் கொள்ளுகிறார்கள். தங்கள் விமானக் கம்பெனிக்கும் அதே பெயரை வைத்திருக்கிறார்கள்.

அங்கே 'ஆரியன் டைவர் ஷாப்' என்ற தையற்கடையை அவன் பார்த்தான்.

அன்று மாலை இந்தியத் தூதரகத்துக்குப் பிராமண நண்பர்கள் அவனை இட்டுச் சென்றார்கள். அப்போதைய தூதர் பெயர் நினைவில்லை. பெரும்பாலும் மற்ற அதிகாரிகள் தமிழர்களே.

ஏராளமான ஹிப்பிகள் காபூலில் உலாவினார்கள். அவர்களிலே ஒருத்தி 'இந்தியத் தூதரகத்தில் அமர்ந்திருந்தாள். அவனைப் பார்த்ததும் எப்படியாவது தான் இந்தியா செல்ல விசா வாங்கிக்கொடுக்கக் கெஞ்சினாள்.

அவள் ஒரு இத்தாலியப் பெண்ணாம். வெள்ளை வர்க்கத்தில் அப்படி ஒரு பேரழகியை அவன் பார்த்ததே இல்லை.

இந்தியத் தூதரிடமே போய், அவளை எப்படியாவது இந்தியாவுக்கு அனுப்பும்படி கெஞ்சினான். அவர் சிரித்துக்கொண்டே ''அவள் திரும்பி இத்தாலிக்குத்தான் போக வேண்டும், வேறு எந்த நாட்டுக்கும் போக முடியாது'' என்றார்.

அவளது பாஸ்போர்ட்டில் இரண்டு கறுப்புப் புள்ளிகள் உள்ளனவாம். அது கள்ளக் கடத்தலைக் குறிக்குமாம்.

தம்பி விகவநாதனுக்குக் கோபம் வந்து விட்டது. ''அண்ணே, உங்களுக்கு ஏன் இந்த வம்பு? பேசாம வாங்கண்ணே'' என்று இழுத்துக் காரில் ஏற்றி விட்டான்.

காபூலிலேயே ஒரு பிரும்மாண்டமான ஏரிக்கரைக்குப் பிராமண நண்பர்கள் அவர்களைக் கூட்டிச் சென்றார்கள். மனிதக் கூட்டமே இல்லாத அந்த ஏரிக்கரை எவ்வளவு அழகாக இருந்தது தெரியுமா?

நல்ல ஏரி மீனைப் பொரித்து விற்றார்கள். ஆளுக்கு நான்கு சாப்பிட்டு விட்டுத் திரும்பினோம்.

அன்று இரவு ஏழு மணிக்கு காபூல் நகரத்துக் கடைத் தெருவைப் பார்வையிட்டோம்.

எங்களில் அம்பிகாபதி மட்டும் வேட்டி கட்டியிருந்தார். பத்துப் பதினைந்து பள்ளிக்கூடச் சிறுவர்கள் அந்த வேட்டியை அதிசயமாகப் பார்த்துச் சிரித்து விட்டார்கள். இத்தனைக்கும் அவர்களுடைய ஆடைதான் கோமாளித்தனமாக இருந்தது.

காபூல் கடைத் தெருவில் என்னைக் கவர்ந்தது ஒன்று. நூற்றுக்கு அறுபது சதவீதம் இந்தியாவில் செய்யப்பட்ட பொருள்களே அங்கு விற்பனை ஆகின்றன.

கடைத் தெருவில் கூடப் பெண்களைக்காணோம். அவ்வளவு கடுமையான 'கோஷா'!

எல்லைக் காந்தி அங்கு தங்கியிருப்பதாகக் கூறினார்கள். அவர் தங்கியிருக்கும் இடம் ஆபத்தான இடம் என்றும், 'போக முடியாது' என்றும் கூறிவிட்டார்கள்.

ஆப்கானிஸ்தானுக்குள் பன்னிரண்டு பேர் போகக் கூடிய குட்டி விமானங்கள் ஓடுகின்றன. இந்த விமானங்களின் பட்டியலை வாங்கிப் பார்த்தபோது பார்க்க வேண்டிய இடங்களில் 'காண்டகார்' என்று ஒன்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் கீழே, ''மகாபாரதத்தில் வரும் 'காந்தாரி' பிறந்தது இந்த ஊரில்தான்'' என்று குறிப்பிட்டிருந்தார்கள். காந்தாரம் என்பது அதுதான் என்று சரித்திர ஆசிரியர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். போக விருப்பம்தான். சோம்பேறித்தனத்தால் போகவில்லை! அப்போது தோண்டி எடுக்கப்பட்ட என்பது அடி புத்தரையும் பார்க்கவில்லை.

காபூல் ஒரு பாலைவனம் போல் தோற்றமளித்தாலும் இங்கு தங்கிப் பார்க்க வேண்டிய இடங்கள் ஏராளம். இத்தனைக்கும் டெல்லியில் இருந்து இரண்டு மணி நேரத்தில் போய்விடலாம்.

மறுநாள் இரவு எங்கள் மீது அன்பையே கொட்டித் தீர்த்த பிராமண நண்பர்களிடம் விடை பெற்றுக் கொண்டோம். அவர்கள் இல்லையென்றால் காபூலில் நாங்கள் அவ்வளவு வசதியாக இருந்திருக்க முடியாது.

இரவு அதே ஹரியானா-ஆப்கான் விமானத்தில் ஏறி உட்கார்ந்தோம். சுமார் இருபத்தைந்து நிமிடங்கள் விமானம் தரையிலேயே ஓடிக் கொண்டிருந்தது.

''என்னண்ணே இது தரையிலேயே ஓடுது?'' என்று கேட்டான் விகவநாதன்.

''இது மாஸ்கோ வரைக்கும் தரையில் தான் ஓடும்'' என்றான் அவன்.

''என்னண்ணே, கிண்டல் பண்றீங்களா?'' என்றான் தம்பி.

விமானம் பறந்து விட்டது.

வகை வகையான மதுவை விமானத்தில் அருந்தி ஆனந்த மயமாகத் தூங்கியபோது தாஷ்கண்ட் நகரம் வந்து விட்டது.

நல்ல தூக்கத்தில் தாஷ்கண்டில் விழித்தோம். இரண்டு மணி நேரம்தான் விமான நிலைய தங்கும் விடுதியில் தூக்கம். பிறகு மீண்டும் தூக்கத்தோடு, ரஷ்ய விமானத்தில் ஏறி உட்கார்ந்தோம்.

காலை ஏழு மணிக்கு துர்க்மிஸ்தான் தலைநகரான அஷ்காபாத்தில் விமானம் இறங்கிற்று.


(வளரும்)

ஜீ. டி. நாயுடு அவர்கள் கோவையில் தம் நிர்வாக அலுவலகத்தில், பைல்களை மிகச் சிறந்த முறையில் கையாளுவது வழக்கம். ஏறத்தாழ ஒரு லட்சம் பைல்கள் அவரது பார்வையில் இருந்தன.

''நட்பு'', ''போலீஸ்'', ''பாராட்டு'', ''மரியாதை'', ''முகஸ்துதி'', ''உண்மை'', ''எருமைகளை எங்ஙனம் வழிக்குக் கொணர்வது'' ''ஒருவரை எப்படி வேலை வாங்குவது'' ''என்னுடைய தவறுகள்'' எனது முகமதுபின் துக்ளக்'' என்பன சில பைல்களின் தலைப்புகள்!

இவற்றில் ஏராளமான கடிதங்களும், எழுத்துச் சான்றுகளும், உண்மைகளும் அடங்கியுள்ளன.

- பி. நாராயணன்



சொல்ல முடியுமா?

அன்னம்

நீங்கள் பத்திரிகைகளில்படித்திருப்பீர்கள்!

தபாலாபீஸ் ஒன்றில் திருட்டுத்தனமாக ஆயிரம் ரூபாய் வாங்க முயன்ற நபரைத் தந்திரமாகப் பிடித்துக் கொடுத்த போஸ்ட் மாஸ்டருக்குப் பாராட்டு என்று. அந்தப் போஸ்ட் மாஸ்டர் நான்தான். பெயர் முரளி.

நான் காணமற் போய் ரேடியோவில் விளம்பரம் செய்யப் போனல் இப்படித் தான் செய்வார்கள்:

உயரம் ஐந்தடி ஆறு அங்குலம். பருமனில்லாத உடல்வாகு. பெரிய கோலிக் குண்டு அளவுக்குக் கழுத்தில் எலும்பு புடைத்திருக்கும். சோடாப் புட்டிக் கண்ணாடி போட்டிருப்பான். படியாத தலை. பொத்தான் போடாத சட்டை; கூர்மையான மூக்கு; வயது இருபத்தி ஆறு.

என்னுடைய சமயோசித புத்தியையும், கூர்மையான அறிவையும் பாராட்டி என் மேலதிகாரி கூட எனக்குத் தனியாகக் கடிதம் எழுதியிருக்கிறார். பிரத்தியேகமாக ஒரு விழா ஏற்பாடு செய்து பரிசுகூட வழங்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள்.

எப்படிக் கண்டு பிடித்தேன்? வெளியே சொல்ல முடியாத சமாசாரம். உங்கள் காதோடு காதாகப் போட்டு வைக்கிறேன்.

நான் தபாலாபீசில் வேலைக்குச் சேர்ந்த பிறகு எனக்கு ஜில்லா முழுவதும் அத்துபடி. சேர்ந்தாற்போல் என்னை ஓர் ஊரில் கூட மூன்று மாதம் வைத்ததில்லை. கடைசி கடைசியாகப் — போனல் போகிறதென்று — என்னை இந்தச் சிற்றூரில் போஸ்ட் மாஸ்டராகப் போட்டு விட்டார்கள்.

காலையில் எட்டு மணிக்குத் தபால் வரும். எட்டரை மணி வரை நாலைந்து பேர் தபாலாபீஸ் வராந்தாவில் உட்கார்ந்திருப்பார்கள். அதற்குப் பிறகு பகல் நான்கு மணிக்குக் கட்டு எடுக்கும்போதுதான் மறுபடியும் ஜனங்களைப் பார்க்கலாம்.

வேலை அதிகம் இல்லை. உள்ளூர் லைப்ரரிக்கு வரும் பத்திரிகைகளை யெல்லாம் நான் படித்துப் பார்த்துவிட்டுத்தான் அனுப்புவேன். அப்படியும் நேரம் மிஞ்சி இருக்கும்.

ஒரு நாள் காலை ஒன்பது மணிக்குத் திடீரென்று சந்திரன் உதித்தது. அதாவது அப்படிப்பட்ட முகத்தைக் கொண்ட ஒரு பெண் ஆபீஸ் வராந்தாவுக்கு வந்தாள். சிக்கென்ற உடை. பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல ஒரு வனப்பு.

இருபத்தைந்து பைசா கொடுத்து ஒரு இன்லண்ட் லெட்டர் கேட்டாள். நான் கொடுத்தேன். அப்புறம் பேனா இருக்குமா என்று விசாரித்தாள். என் தனி உபயோகத்துக்காக வைத்திருந்த புதுப் பேனாவை எடுத்துத் தந்தேன்.



அவள் தபாலாபீஸ் டெஸ்கின் மீது படிந்திருந்த தூசியைத் தட்டி விட்டு உட்கார்ந்தாள். அவள் எழுதும்போது நான் என் கவனத்தை வேறு பக்கம் திருப்ப முயன்றேன். இருந்தும் கூட என் கண்கள் திருட்டுத்தனமாக அவள் மேல் பதிந்தன. இடுப்பிற்கு மேல் ஜாக்கெட்டுக்குக் கீழே தெரிந்த அந்தச் சந்தன நிற மேனியில் லயித்தன.

அவள் கடிதம் எழுதினாள். என்னிடம் கொடுத்தாள். நானே ஒட்டினேன். தபாலில் சேர்ப்பதற்காகத் தனியே எடுத்துவைத்தேன்.

நான்கு நாட்களுக்குப் பிறகு அவள் மீண்டும் வந்தாள். மறுபடியும் ஒரு இன்லண்ட் லெட்டர், என் பேனா இரவல் போயிற்று. கடிதம் தபாலில் சேர்க்கப்பட்டது.

சென்ற இரண்டு மாதங்களில் ஐந்தாறு தடவை அவள் வந்து போய்விட்டாள். என் பேனாவைத் தொட்டுத் தொட்டு எழுதி என்னை மகிழ்வித்துப் போனாள்.

அவளுடன் நான் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஏதாவது பெரிய இடத்துப் பெண்ணாக இருக்கும். தப்பாக நினைத்துச் சத்தம் போட்டால் ஊரில் பஞ்சாயத்து கூட்டி என்னை நார் நாராகக் கிழித்து விடுவார்கள்.

போன சனிக்கிழமை அவள் தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் புத்தகமும் பணம் வாங்கும் படிவமும் கொடுத்தாள். மூவாயிரம் ரூபாய் கேட்டு அந்தப் படிவம் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பெண்ணின் பெயரைக் குறிப்பிட்டு அவளிடம் பணத்தைத் தரும்படி அக்கௌண்ட் வைத்திருந்தவர் குறிப்பிட்டிருந்தார்.

அத்தனை பெரிய தொகை என்னிடம் இல்லை. மாலை வரும்படியும் அதற்குள் வரவழைத்து வைப்பதாகவும் கூறினேன்.

அவள் போன பிறகு விண்ணப்பத்தில் உள்ள கையெழுத்தையும் எங்கள் ரிக்கார்டில் உள்ள கையெழுத்தையும் சரி பார்த்தேன். ஒத்துத்தான் இருந்தது. தபால்காரர் வந்தார். அவரைத்தான் பக்கத்து ஊரில் இருந்த பெரிய தபாலாபீசில் பணம் வாங்கி வர அனுப்ப வேண்டும்.

அவரிடம் அந்தப் பெண் தந்த படிவத்தைக் காட்டினேன். "ஆமாம்...ஆமாம். இது பெரியதனக்காரர் பாண்டியன் கையெழுத்துத்தான்" என்று கூறிவிட்டுப் பணம் பெற்று வரப் போய்விட்டார்.

ஆபீஸ் இடைவேளையின்போது நான் பாண்டியன் வீட்டை நோக்கி நடந்தேன். அவரே இருந்தார். பணம் மாலையில் கிடைக்கும் என்று சொன்னேன்.

"பணமா?.... எதற்கு?" என்று வியப்புடன் கேட்டார்.

நான் அவரிடம் விவரங்களைச் சொன்னேன். "அப்படியா?" என்றவர் தம் பெட்டி, பீரோ எல்லாம் தேடிப் பார்த்தார். அவர் பாஸ் புத்தகம் களவு போயிருந்தது. இது ஏதோ மோசடி என்பதை உணர்ந்தோம். காதும் காதும் வைத்தாற்போல் போலீசுக்குச் சொல்லி அனுப்பினோம்.

அவள் பிற்பகல் இரண்டு மணிக்கு வந்தாள். பணம் வந்து விட்டதா எனக் கேட்டாள். உள்ளே வந்து உட்காரச் சொன்னேன். அவள் பணம் வாங்கப் போகும் சமயம் மறைந்திருந்த எஸ். ஐ.யும் பாண்டியனும் பிடித்துக் கொண்டார்கள்.

அவர்களைக் கண்டதும் அவள் நடுங்கிப் போனாள். பாண்டியன் வீட்டில் பாஸ் புஸ்தகம் பழைய புஸ்தகங்களுடன் கலந்து கடைக்கு வந்து விட்டது. அதை அகஸ்மாத்தாகப் பார்த்திருக்கிறான் அவள் கூட்டாளி. ஏதோ தர்மத்துக்கு நிதி வசூலிப்பது போல் அவர் கையெழுத்தை ஒரு நோட் புஸ்தகத்தில் வாங்கி விடுகிறான். கள்ளக் கையெழுத்துப் போடுவதில் அவன் எக்ஸ்பர்ட்.... போதுமா?

நடந்ததைப் போலீஸ்காரரிடமும் சொன்னேன். எங்கள் அதிகாரியிடமும் சொன்னேன். "அது சரி, உனக்கு எப்படி சந்தேகம் வந்தது? எதற்காகப் பாண்டியனைப் பார்க்கப் போனாய்?" என்று கேட்கிறார்கள்.

அந்தப் பெண் மட்டும் கடிதங்களை ஒட்டித் தபாலில் போட்டிருந்தாலோ — ஒட்டச் சொல்லி என்னிடம் கொடுத்த கடிதங்களை லேசாக ஒட்டி அவள் போன பிறகு நான் பிரித்துப் படிக்காமல் இருந்திருந்தாலோ — அந்தக் கடிதங்களில் 'ரெஜினா' என்று ஆங்கிலத்தில் கையெழுத்து இட்டவள் இதில் ரமாதேவி என்று கையெழுத்துப் போடாமல் இருந்திருந்தாலோ — நான் சந்தேகப்பட்டிருக்கமாட்டேன். அவளும் தப்பி இருப்பாள்.

இதை எப்படி வெளியே சொல்ல முடியும்? தபாலில் போடப்பட்ட கடிதங்களை அதிகாரியான நான் பிரித்துப் படித்தேன் என எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? சும்மா விடுவார்களா?

அவள் இருடப் போய் நான் மாட்டிக் கொண்டு விழிக்கிறேன்!



இட நெருக்கடி காரணமாக எங்கள் வீட்டில் மாடியில் துணிகளை உலர்த்துவது வழக்கம். ஒரு நாள் இரவு உலர்ந்த துணிகளை எடுக்க மறந்துவிட்டோம். நள்ளிரவில் திடீரென்று விழித்துக்கொண்ட என் தந்தை ஓர் உருவம் எல்லாத் துணிகளையும் கொடியிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து அடுக்குவதைப் பார்த்து 'மூர்த்தியாடா' என்று கேட்டார். அந்த உருவமும் 'ஊம்' எனப் பதில் கூற, தந்தை திரும்பிப் போய்ப் படுத்துத் தூங்கிவிட்டார்.

காலையில் எழுந்தவுடன் ஞாபகமாக எல்லாத் துணிகளையும் இரவே எடுத்து வைத்ததற்காக அப்பா என் அண்ணன் மூர்த்தியைப் பாராட்ட, அவன் பேந்தப் பேந்த விழித்து 'நானா? இரவில் எழுந்து துணி மடித்தேனா?' என்று திருப்பிக் கேட்டபொழுதுதான் எங்களுக்கு நடந்தது தெரிந்தது! துணிகள் போனது போனதுதான்.

- கல்கத்தா மீக்கி

[redacted]

18 தங்கக் காசு

கணேஷ் டைரக்டரியில் அருணாவைத் தேடினான். அருணா இண்டஸ்ட்ரீஸ் அருணா ஆர்ட்ஸ்தியேட்டர், ஹோட்டல், ஆட்டோ மொபைல்ஸ், இவைகளில் எங்கே செல்வது? எழுதினவன் தெளிவாக இன்ன இடத்தில் இன்ன விலாசத்தில் என்று எழுதித் தொலைக்க மாட்டானோ? என்ன இது? புதுக் குழப்பம். வசந்துக்குத் தெரிந்திருக்கலாம். மொட்டையாக அருணாவுக்கு வா என்றால் எங்கே போய்ச் சேர வேண்டும் என்கிற நிழலான விஷயங்கள் எல்லாம் அவனுக்குத்தான் சரியாகத் தெரிந்திருக்கும். அவனைக் கேட்பதற்கு முன் பேராசிரியர் புதுசாகத் தங்கக் காசு என்று புரளி பண்ணுகிறாரே அது என்ன என்று பார்க்கலாம்.

பேராசிரியரின் வீட்டுக்குச் சென்ற போது அவர் ஒரு நோபல் கண்டு பிடிப்பு செய்துவிட்ட பரபரப்புடன் இருந்தார். ''வாங்க கணேஷ். வருவீங்க வருவீங்கன்னு எதிர்பார்த்துக் கிட்டே இருந்தேன். இப்பத்தான் உங்களுக்கு போன் பண்ணேன். அடிச்சுக்கிட்டே இருந்தது.''

''என்ன ஸார் விஷயம்? யு ஸீம் எக்ஸைட்டட்!''

''கணேஷ் இதை உங்க கிட்டச் சொல்லாட்டா என் தலையே வெடிச்சுப்போயிடும் போல இருக்கு. அவங்கள்ளாம் எதுக்காக



வஸந்த்! வஸந்த்!

சுஜாதா

அந்தப் பாழுங் கிணத்துக்கு அலையறுங்கன்னு இப்பத் தெளிவாத் தெரிஞ்சு போச்சு. அதுக்காகப் பத்துக் கொலை கூட அங்க விழும்!''

''அதான் சொன்னீங்களே தங்கக் காசுன்னு!''

''காசு மட்டும் இல்லே. இன்னும் எத்தனையோ விஷயங்கள் இருக்கு. இனியா! இனியா!''

''என்னப்பா!'' என்று உள்ளே இருந்து வந்த இனியாவைப் பார்த்து கணேஷ் நல்ல வேளை வஸந்த் வரவில்லை என்று நினைத்துக் கொண்டான். வந்திருந்தால் வாயில் விரல் வைத்து 'ஷ்ய்' என்று விசில் அடித்திருப்பான். இனியா அப்படி ஒரு அசாத்திய உடை அணிந்திருந்தாள்.

''அலமாரில புஸ்தகமும் குறிப்புகளும் வெச்சிருக்கேன். எடுத்துட்டு வாம்மா.''

''மறுபடியும் ராஜ ராஜன் கிணறு ஆராய்ச்சியாப்பா? எம்பா நடந்த குழப்பங்கள் போதாதா? வஸந்த் அடிபட்டு ஆஸ்பத்திரில இப்பவோ அப்பவோன்னு கிடக்கிறார்ப்பா.''

''சும்மாரும்மா. வீட்டுக்குள்ள ஆராய்ச்சி பண்ணிக்கிட்டிருக்கிறதுல ஒருவித ஆபத்தும் கிடையாது.''

இனியா அலுத்துக்கொண்டு அலமாரிக்குப் போக, ''கணேஷ்! உங்ககிட்டே இதை எல்லாம் காட்டறதுக்கு முன்னாடி ஒரு கண்டிஷன்'' என்றார்.

''சொல்லுங்க.''

''அந்தக் காசுகள்ள ஒரு காசு எனக்கு வேணும். ஒரே ஒரு காசு போதும் ஸாம்பிளுக்கு.''

''முதல்ல அது என்ன காசு சொல்லுங்க.''

இனியா நோட்டுப் புத்தகத்தையும் புத்தகத்தையும் எடுத்து வர அதைப் பேராசிரியர்



ஆவலுடன் பிடுங்கிக் கொண்டு பரபரவென்று பிரித்து.

''இதபார் மெய்கீர்த்தி தொடக்கம், ராஜன் ராஜன் காலத்தது. 'காந்தளூர்ச் சாலை களமறுத்தருளிய'ன்னு ஆரம்பிக்கிறது பாரு'' என்றார்.

''ப்ரொபஸர்! ரொம்ப டெக்னிக்கலா வேண்டாம். நீங்க ஆராய்ச்சி பண்ணியிருந்தீங்கன்னு அதில ஆதார பூர்வமா விஷயங்கள் இருக்கும். அதைப் பத்திச் சந்தேகமே எனக்கில்லே.''

அவன் சொன்னதைப் பேராசிரியர் சிறிதும் கவனிக்காமல் ''பூமருவிய பொழிலெழும் பூமருவிய திருமாதும்னு இரண்டாம் ராஜ ராஜனைக் குறிக்கிறது. அண்டர்ஸ்டாண்ட்?'' என்றார்.

'அடடா வஸந்த் இல்லையே. தனியாக மாட்டிக்கொண்டு விட்டோமே' என்று எண்ணினான்.

''கணேஷ் கவனமாகக் கேளுங்க. சோழர்களுடைய கல்வெட்டுக்கள் ஒரு மன்னரைக் குறிப்பிடறபோது எந்த மண்டலத்தை எந்த

கூற்றத்தைச் சார்ந்ததுன்னு தெளிவா சொல்லும். ராஜ ராஜன் ஆட்சிக்கு வந்தப்புறம் நாட்டைக் கிள்ளு அளந்து வகை செஞ்சான். அதனால இடத்தைக் கண்டு பிடிக்கிறது ரொம்பவும் சுலபம். கூழமந்தல் உக்கல் பிரதேசத்தில இருக்கிற எல்லாக் கல்வெட்டுக்களையும் நான் பூரா பிரதி யெடுத்து ஆராய்ச்சி செய்திருக்கிறேன். எல்லாத்தையும் ஒண்ணு விடாமத்தான் எடுத்தேன். தீஸிஸ் எழுதறபோது ஒரே ஒரு இன்ஸ்கிரிப்ஷன் விட்டுப் போயிருக்கு. மறுபடி என் குறிப்புக்களைச் சமீபத்திய சம்பவங்களுக்கு அப்புறம் சரி பார்த்ததிலதான் விட்டுப் போயிருக்கிறது தெரிய வந்தது. அந்தக் கல்வெட்டு வாசகங்கள். என்ன. தெரியுமா கணேஷ்? நீங்க அதிர்ந்து போயிருவீங்க. படிக்கிறேன் கேளுங்க:

'உடையார் ஸ்ரீ ராஜ ராஜீச்வரம் உடையார்க்குச் செய்த வீரபட்டம் ஒன்று தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் முந்நூற்று நாற்பத்து முக்கழஞ்சு.... தடவிக் கட்டின பளிங்கு... கழஞ்சே மஞ்சாடியும் பொத்தி முன்றினால் நிறை மஞ்சாடியும் பளிங்கு வயிரம் பத்தினால்... திருப்பட்டிகை முதலியனவும்....'

''அப்புறம் கேளுங்க:

'கண்டநாண் ஒன்றிற் கட்டின மாணிக்கம் பதினஞ்சும் மரகதம் பதினாறும் வயிரம் இருபத்தெட்டும் தைய்த்த முத்து ஒப்பு முத்தும் குறுமுத்தும் பாட்டமும் ஆக முத்து நாற்பதும் உட்பட நிறை நூற்று எழுபத்தின் கழஞ்சேய் எழுமஞ்சாடிக்கு விலை ராஜராஜன் மாடை ஐஞ்ஞூறு உக்கல் ராஜராஜன் கிணற்றிவிடப்பட்டது.''

பேராசிரியர் பிரகாசமாகப் ''பாத்தீங்களா'' என்றார்.

''ஒரு அட்சரம் புரியலே ஸார்! முதல்ல கழஞ்சுன்னு என்ன?''



ரங்கு: உ. ராஜாஜி சிறுகதை எழுதினால் எப்படி இருக்கும்?
வெங்கு: 'ஜோக்'கா இருக்கும்.
—வேங்கடராமன்

''தங்கத்தை நிறுத்த ஒரு அளவு அது. பலம், வராகன், எடை, கழஞ்சு, குன்றி!''

''சரி! சரி! கன்ஃப்யூஸ் பண்ணாதீங்க! எப்படி இதில காசைப் பத்தி ஒண்ணையும் காணமே?''

''காணமா? கடைசி வரியைப் பாருங்க! 'ராஜ ராஜன் மாடை ஐநூறு உக்கல் ராஜ ராஜன் கிணற்றிவிடப்பட்டது' — என்ன அர்த்தம்?''

''என்ன அர்த்தம்?''

''மை டியர் கணேஷ் மாடைன்னு பொற்காசுன்னு பொருள். ராஜராஜன் காலத்துப் பொன் காசு தமிழ் நாட்டில் கிடைச்சிருக்கு. ஒரு பக்கத்தில் புலி போட்டிருக்கும் அப்புறம் ரெண்டு மீன் வில் அதுக்குக் கீழே ராஜ ராஜராஜ சோழன்னு நாகரி எழுத்தில இருக்கும். பின் பக்கத்திலேயும் அதேபோல இருக்கும். ரொம்ப அரிதான காசு மாடை!''

கணேஷ் சிந்தனையில் இருந்தான்.

''இப்ப புரியுதா? அந்தக் காசுக்கு எத்தனை பேர் அலைஞ்சாங்கன்னு. ஏன்?''

''ப்ரொபலர் இஸ் இஸ் வெரி இன்டரஸ்டிங்! இப்ப அந்தக் காசு கிடைச்சா?''

''அரசாங்கத்துக்குப் போகணும்.''

''மதிப்பு எவ்வளவு இருக்கும்?''

''பொன்னாலான காசு! அதுக்கு மதிப்பை விடுங்க. அந்தக் காலத்துச் செப்புக் காசு கிடைச்சாலே இப்ப அதுக்கு மதிப்பு எவ்வளவுங்கிறீங்க கணேஷ்! இது ரொம்பப் பெரிய விஷயம். எல்லாரும் கிணத்துல காசைத் தேடிட்டு அலைஞ்சிருக்காங்க. புரியுது. இதில வெளி நாட்டுக் கோஷ்டி கூடக் கலந்திருக்கலாம்.''

''கிணத்துக்குள் காசைப்போட்டாங்களா? ஆச்சரியமா இருக்கே?''

''அதைப் பத்தி ஒரு கல்வெட்டு இருக்கு! அது பழங்காலத்து வழக்கம். நம்ம களிக் ராமச்சந்திரா அதில பி எச்டி பண்ணியிருக்கார் காட்டட்டுமா?''

''இல்லே ஸார். இன்னிக்கு ஜீரணிக்கிறதுக்கு இது போதும்னு தோணுது. ஆனா ஒரு வழியா விஷேரியோ புரியுது. கிணறு கிணறுன்னு ஏன் அலைஞ்சாங்கன்னு அர்த்தம் விளங்குது....''

''அந்தக் காசுகளை மட்டும் நாம கண்டெடுத்துட்டம்னா....''

''இன்னம் கண்டெடுத்திருக்க மாட்டாங்கன்னு நினைக்கிறீங்களா?''

''கண்டெடுத்திருக்கக் கூடாதுன்னு தெய்வத்தை வேண்டிக்கிறேன் கணேஷ்! நாம போலீஸ் உதவியோட உடனே அந்தக் கிணற்றை ஸீல் பண்ணிடறதுதான் நல்லதுன்னு தோணுது.''

''ஏன் ஸார் இதுக்கு முந்தி இந்தக் கல்வெட்டை யாரும் பார்த்துப் பணத்தை அபேஸ் பண்ணி யிருக்க மாட்டாங்களா?''

''இந்தக் கல்வெட்டு ரகசியமா அடிச்சுப் புதைச்சு வெச்சிருந்த கல்வெட்டு! இந்த மாதிரி காசு பற்றின ரகசியம் அதில இருக்கிறதினால இந்த மாதிரி கல்வெட்டுக்களை மறைவான இடத்திலதான் வெட்டுவாங்க. கள்ளர் பயத்தினால. டட்டாங்கமன்னுடைய சமாதியைப் பத்திக் கேள்விப் பட்டிருப்பீங்களே. அதுக்குள்ள திருடர்கள் யாரும்

போக முடியாதபடி வழிகளை யெல்லாம் மறைச்சு வெச்சிருப்பாங்களாம். அதுபோல இது மறைச்சு வெக்கப்பட்ட கல்வெட்டு. நான்தான் இந்த சீரிஸையே கண்டுபிடிச்சு டிரான்ஸ்க்ரைப் பண்ணி அந்த ஸ்லாபைக் கூட ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்டிலே ஒப்படைச்சிருக்கேன்.''

''ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட்! ஸார் குத்துப்பட்டுச் செத்தானே கூழமந்தல் ஆசாமி? அவங்கூட ஆர்க்கியாலஜி டிப் பார்ட்மெண்ட் ஆசாமிதான்.''

''பத்தீங்களா? பிளாட் உருவாகறது கணேஷ்! எனக்கு இந்தத் துப்பறியற வேலை களில எல்லாம் இஷ்டம் இல்லே. எனக்கு வேண்டியது அந்தக் காசுகளிலே ஒண்ணே ஒண்ணு! ஸ்பெஸிமனுக்கு. ராஜராஜன் காலத்தில பொறிச்ச காசை என் கையால தொட்டுப் பார்த்தாக்கூடப்போதும்! அதுவே எனக்கு திரில்லிங்கா இருக்கும்.''

''பார்க்கலாம் ஸார். ஏற்கனவே லேட் டுன்னு நினைக்கிறேன். இப்பப் போய் டிஐஜி ராஜேந்திரனைப் பார்க்கப் போறேன். அவர் கிட்ட விவரம் எல்லாம் சொல்றேன். நீங்க சொல்ற மாதிரி உடனே அந்த உக்கலுக்குத் தகவல் சொல்லிக் கிணத்தை சீல் பண்ணிடச் சொல்லிடலாம். நாங்க போற வரைக்கும் யாரையும் கிட்ட விட வேண்டாம்னு ஆணை கொடுத்துறலாம். அதான் முந்திச் செய்ய வேண்டியது. எனக்கென்னவோ ஹோப் இல்லே. பார்க்கலாம். வரட்டுமா? இனியா! நான் வரட்டுமா?''

கணேஷ் உடனே அறைக்குச் சென்று ராஜேந்திரனுக்கு போன் செய்தான். அவர் இல்லை என்று தெரிந்தது. எங்கே போயிருக் கிறார் என்று சொல்லத் தயங்கினார்கள். வந் தால் கணேஷ் போன் பண்ணியதாகத் தக வல் தெரிவிக்கும்படி மெஸேஜ் கொடுத்து விட்டு வஸந்தை அடித்தான்.

''என்ன பாஸ்?''

''பொருள் என்னன்னு தெரிஞ்சுருச்சு.''

''சிலைதானே?''

''இல்லே. காசு! தங்கக் காசு!''

''சில்லறையா? அட! எவ்வளவு பெறும்?''

''வஸந்த் கழஞ்சுன்னு என்னன்னு தெரி யுமா உனக்கு?''

''கழஞ்சா?''

''ஆமா கழஞ்சு!''

''கழண்டு இல்லியா? அல்லது 'குழஞ் சு'ன்னு ஒரு பிரயோகமும் உண்டு. ஆமா என்ன இது திடீர்னு பழந் தமிழ்ல விளை யாடறீங்க?''

''கிணத்துல ஐந்நூறுகாசைப் போட்டிருக் காங்க. அத்தனையும் பொன்னு! அதுக்குத் தான் ஜனங்க இந்த அலை அலையுது.''

வஸந்த் விசிலடித்தான். ''இப்பப் புரியுது பாஸ்.''

''உடம்பு எப்படி இருக்கு?''

''அதை ஏன் கேக்கறீங்க? லேகியம், ஸ்பெஷல் பஸ்பம் மிக உயர்ந்த ரகம் ஒரு செட் தொண்ணூறு ரூபாய்க்கு அடிக்கலாம் போல உடம்பு பூரா ஒரு இயலாமை,

ரத்தக்குறைவு, உஷ்ணம், சோம்பல், தளர்ச்சி ஆயாசம், மனத் தடுமாற்றம்!''

''திமிரு! வேற ஒண்ணும் இல்லே உனக்கு!''

''இல்ல பாஸ்! மருத்துவ நிபுணர்களின் கருத்துப்படி.....''

''போது போகாம விளம்பரங்களை எல்லாம் படிச்சுக்கிட்டிருக்கேன்னு தெரியுது. காலேல ஆபிசுக்கு வந்துரு.''

''நம்ம கேஸ் விஷயமா...''

''அட்ஜர்ன்மெண்ட் வாங்கிட்டேனே.''

''அதில்ல பாஸ். பேராசிரியர் கிட்ட நம்மைப் பத்தி சுக வாக்கியங்கள் ஏதாவது பேசினீங்களா? இந்த வாரம் வார பலன்ல 'சரசங்கள், பொழுதுபோக்கு, கேளிக்கைகள் என்று பொழுது உல்லாசமாகச் செல்லும்; ஒரு முக்கியமான முதியவரின் உறவு கிட்டும்'னு போட்டிருக்கே என்ன அர்த்தம்?''

''மண்ணாங்கட்டி! உனக்கு உடம்பு சரியாப் போச்சு. சும்மா கதை பண்ணிட்டு இருக்காதே. ஏகப்பட்ட வேலே இருக்கு.''

''மறுபடி கிணத்தைத் தோண்டப் போறமா? இங்க இருந்தே டிபன் கட்டிண்டு பிளாஸ்கில தண்ணி எடுத்துண்டு போயிறலாம் பாஸ்.''

''மறுபடி நிச்சயம் அங்கே போக வேண்டியிருக்கும். விஷயம் ரொம்பப் பெரிசு!''

''தங்கக் காசு.''

''பேராசிரியருக்கு அதில ஒரு காசு கொடுத்திட்டா உனக்கு அடுத்த முகூர்த்தத்திலயே இனியாவைக் கட்டிக் கொடுத்துட்டு உன் மூஞ்சிக்கு வரதட்சிணை வேற கொடுப்பார்.''

''அப்ப இப்பவே வரட்டுமா?''

''காலேல வந்தாப் போதும். இனியா இன்னிக்குப் பிரமாதமா டிரஸ் போட்டிண்டிருந்தா.''

''வெறுப்பேத்தறீங்களா?''

''பார்த்த உடனே எனக்கே ஒரு மாதிரியா இருந்தது.''

''என்ன டிரஸ்? வெய்ட்! சொல்லாதீங்க. ராத்திரி பூரா ஒத்தெல்லோ மாதிரி பெருமூச்சு விட்டுக்கிட்டு இருப்பேன்.''

''வளவளன்னு பேசாதே. ஒரு காலே எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்.''

''நான் வேணா பொடி நடையாப் போய் அவளைப் பார்த்து விசாரிச்சுட்டு வந்து படுத்துறவா?''

''டிரஸ்ஸைக் கழட்டிருப்பா!''

போனைச் சிரித்துக் கொண்டே வைத்ததும் ராஜேந்திரனிடமிருந்து கால் வந்தது.

''என்ன கணேஷ், என்ன விஷயம்? வி எம் மீட்டிங் போயிருந்தேன்.''

''ஸார், உக்கல்ங்கிற கிராமத்தைப் பத்தித் தெரியுமா உங்களுக்கு?''

''உக்கல்! கேள்விப்பட்டாப்பல இருக்கே... இருங்க. வடார்க்காடு மாவட்டத்தில...''

''ரைட் யூ ஆர்! அங்க நான் நேற்றைக்குப் போயிருந்தேன். சில விநோத சம்பவங்கள் எல்லாம் நடந்தது.''

''அப்படி நடக்கலேன்னு நீங்க ஏன் அந்தக் கிராமத்துக்குப் போறீங்க? அதென்ன அந்தக் கொலையுதிர் காலத்தை அப்படி முடிச்சுட்டீங்க?''

''அது சமாசாரம் வேறங்க! அப்புறம் சொல்றேன். இப்ப ராஜ ராஜன் கிணத்தைப் பார்க்கலாமா?''

''என்ன கிணறு?''

''ராஜ ராஜன்.''

''ஏதாவது எண்ணெய்க் கிணறு?''

''தெரியலே. ஆறு நாட்டிலே இருக்கிற பாதிக் கேடிங்க அதைச் சுத்திக்கிட்டு இருக்காங்க.''

''அப்படியா? இண்ட்ரஸ்டிங்! நடந்ததைச் சொல்லுங்க.''

சொன்னான். பேராசிரியரின் சரித்திர ஆராய்ச்சிக் கட்டுரையில் ஆரம்பித்து வஸந்தின் பல்லாவரப் பயணம், உக்கல் கத்திக் குத்து, சதாசிவம் விவகாரம், உணவில் விஷம், அந்த விநோத வியாபாரங்கள், திரும்பி வந்தது, பேராசிரியரின் சமீபத்திய கண்டுபிடிப்பு....

ராஜேந்திரன் அவன் முடித்துக் கொஞ்ச நேரம் கழித்து ''விஷயம் ரொம்பச் சிக்கலா இருக்கு. பார்ட்டி பெரிசுன்னு தோணுது. காசு அதுவும் தங்கக் காசு, பழங்காலத்து தங்கக் காசுன்னு ரொம்பப் பேர் அலையறதில ஆச்சரியமில்லே. நான் உடனே அந்தக் கிணத்தைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யறேன். கம்ப்ளீட்டா ப்ரொட்டெக்ட் செய்துறலாம். கவலைப்படாதீங்க. ஆறு நீங்க சொல்ற மாதிரி பொருள் பறந்து போயிருக்க வாய்ப்புக்கள் அதிகமா இருக்கு. இத்தனை நேரம் சும்மா விட்டிருக்க மாட்டாங்க. அண்டை மாநிலங்களிலயும் சொல்லி வைக்கணும். காலேல பார்க்கலாம்.''

அவருடன் பேசி முடித்ததும் மறுபடி டெலிபோன் ஒலித்தது. எடுத்தால்...

''தூரத்தில் இருந்து உன்னைப் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன் பிரதர்! வரன்!''

(தொடரும்)



''எப்படிடா, குடிப்பழக்கத்தை அடியோட விட்டுட்டே? ஆச்சரியமா இருக்கே!''

''ஒரு மாசத்துக்கு முந்தி என் மாமியார் ஊட்டுக்கு வந்தா. எனக்கு ரெண்டாத் தெரிஞ்சது. அன்றையிலேருந்து உட்டுட்டேண்டா!''



○ "இந்தத் தொலைபேசி தொல்லையால் ஒரு வருஷம் தீபாவளியே கொண்டாடலே!"

"1965 ஆம் வருடம் இந்தத் தொலைபேசித் தொல்லையால் அவ்வருடத் தீபாவளியே கொண்டாடவில்லை. அப்போது எனக்கு இளம் வயது. தீபாவளிக்கு முதல் நாள் ஒரு அநாமதேய டெலிபோன் கால்!" என்று ஆரம்பித்து நடித்தே காட்டினார் ஜெய்சங்கர். வசனம் இதுதான்:

"என்ன சார் சௌக்கியமா?"

"பேசறது யார்? உங்களுக்கு என்ன நம்பர் வேணும்?"

"உங்களோடதான் சார் பேசணும்! நாளை தீபாவளி இல்லையா? எச்சரிக்கலாம்னு போன் செய்தேன்!"

"ஹலோ! ஹலோ! எதுக்கு எச்சரிக்கை? நீங்க யாரு?"

ராசியான வீட்டில் தீபாவளிக்கு

"நான் நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது சாம்பு நடராஜன் அப்பொழுதுதான் ஒரு வீட்டைக் கட்டியிருந்தார். நான் தங்குவதற்கு ஒரு நல்ல வீடில்லாமல் தவிப்பதைக் கண்டு என்னை அந்த வீட்டிலேயே தங்கச் சொன்னார். அந்த வீடு 149, நந்தனம் எக்ஸ்டென்ஷன்! குருவின் சொந்த வீட்டில் தங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது!"

"நடந்து வந்த பாதைக்கு எந்த வீட்டைத் தேர்ந்தெடுக்கலாமெனக் கேட்ட பொழுது மேலே சொன்ன விஷயங்களைத் தெரிவித்தார் ஜெய்.

149 எண்ணுள்ள அந்த வீட்டைத் தேடினோம். அந்த எண்ணே இப்போது அங்கு இல்லை. மாறிவிட்டது. ஆனாலும் தான் முன்பு இருந்த வீடு எது என்று தெரிந்திருந்ததால் உள்ளே நுழைய, வரவேற்பு பிரமாதமாக இருந்தது. அந்த வீட்டில் தற்போது குடியிருப்பவர், சாம்பு நடராஜனின் நெருங்கிய உறவினரும், திரைப்பட ஒளிப் பதிவாளருமான என்.பாலகிருஷ்ணன். இரண்டு திரைப்படப் புள்ளிகள் சேர்ந்துவிட்டால் கேட்கவா வேண்டும்?

அவர்கள் பேச்சில் நடிக, நடிகையர் அடிபட்டார்கள். இயக்குனர்கள் அவ்வப்போது இடறினார்கள். தயாரிப்பாளர்கள் தடுக்கி விழத் தவறவில்லை. அவற்றில் எதையும் எழுதக்கூடாது என்றுஎனக்கு உத்தரவு வேறு! என்றால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஜெய்சங்கரைத் தனியாக அழைத்துக் கொண்டு போய் ஒவ்வொரு அறையாகப் பார்க்கச் செய்தேன். காமிராவைக் கிளிக் செய்தார் பாஸ்கர்.

"அன்று நான் எந்த இடத்தில் தொலைபேசியை வைத்திருந்தேனோ இன்றும் அதே இடத்தில்தான் இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே தம் வீட்டு நம்பரையே சுழற்ற ஆரம்பித்தார் ஜெய். நான்கு முறை சுழற்றியதில் இரண்டு முறை ராங் நம்பர்கள், இரண்டு முறை எங்கேஜ்ட் ஒலி.



"நாளைக்கு உங்க வீடு முழுக்கப் பட்டாசு வெடிக்கப் போகுது. வீடே தரை மட்டமாகப் போகுது. அந்த மாதிரி பட்டாஸ் தான்!"

ஜெய் தொடர்ந்து சொன்னார்:

"டெலிபோன் வைக்கப்பட்டது. அன்று இரவு எனக்குக் குளிர் ஜுரமே வந்துவிட்டது. இப்போதென்றால் இது மாதிரி ஃபோன்களுக்குப் பயப்படவே மாட்டேன். ஆனால் அப்போ தொழிலுக்குப் புதுசு. பயத்தில் அடுத்த நாள் காலை தீபாவளியே கொண்டாடலை!

"இந்த இடத்தில்தான் அன்றும் டைனிங் டேபிள் இருந்தது. ஆனால் இவ்வளவு பளபளப்பாக இல்லை. வீட்டில் நான், எனது சகோதரர்கள், தாயார் ஆகிய நான்கு பேர். அவ்வப்போது அப்பா வந்துவிட்டுச் செல்வார்.

"படுக்கை அறை ஒன்றும் பிரமாதமாக இல்லை. ஒற்றைக் கட்டில் ஒன்று மூலையில் இருக்கும். அப்பொழுது எனக்குத் திரு



○ ''நானே சமைத்துச் சாப்பிட்டிருக்கிறேன். அடிக்கடி காப்பி, டீ போட்டுக்குவேன்...''

மணமும் நடக்கவில்லை. இந்த அறைதான் படுக்கை அறை என வைத்துக்கொள்ளவுமில்லை. முன் அறையிலும் படுத்துக்கொள்வேன். இந்த அறையிலும் படுத்துக்கொள்வேன். இந்த வீட்டுக்கு நான் வரும்போது 'இரவும் பகலும்' ரிலீஸாகிவிட்டது. நானும் மெல்ல மெல்லப் புகழேணியில் உயர ஆரம்பித்தேன்.

''இந்த வீடு ராசியான வீடு. எனக்குப் புகழ் கொடுத்த வீடு. முதன் முதலில் நான் கார் வாங்கியதும் இந்த வீட்டில் வசித்த போதுதான். அதற்கு முன்வரை ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தேன். பாலகிருஷ்ண

வேட்டு!

னைப்பொறுத்தவரையிலும் கூட இது மிக ராசியான வீடு. அவருடைய பல சிறு பிரச்னைகள் இந்த வீட்டுக்கு வந்த பின் தீர்ந்துவிட்டன இல்லையா?'' என பாலகிருஷ்ணனை ஜெய் கேட்க, ''ஆமாம். இந்த வீட்டை விட்டுச் சொந்த வீட்டுக்குப் போகாமலிருக்கிறேன் என்றால் இரண்டு காரணங்கள். ஒன்று ராசியான வீடு என்பது. இரண்டாவது என் உறவினர் சாம்பு நடராஜன், 'நீ இருடா இங்கே' எனச் சொல்லவும் அவர் பேச்சைத் தட்ட முடியாமல் இருந்து வருகிறேன்'' என்றார் பாலகிருஷ்ணன்.

சமையலறைக்குள் எட்டிப் பார்த்தார், ஜெய். ''நான் என் சகோதரர்களுடன் இருக்கும்போதும் சரி, தனியாக இருக்கும்போதும் சரி, நானே சமைத்துச் சாப்பிட்டிருக்கிறேன். டிபனுக்கு பிரெட் டோஸ்ட் செய்வேன். காப்பி, டீ அவ்வப்போது தயாரித்துக்கொள்வேன். என் நண்பன் ஒருவன் முட்டையைப் பாலில் அடித்து எனக்குக் கொடுப்பான். அது சரி, இப்ப இங்கே என்ன தயாராகிறது....?'' என்று கேட்டார் ஜெய்.

குறிப்பறிந்து டிபன் காப்பி வந்தது. வெட்டிறோம்!

— சலன்

படங்கள்: ஏ. வி. பாஸ்கர்

○ ''அன்று இந்த அறையில் 'சிங்கிள் காட்' தான்.''

○ பாலகிருஷ்ணன் குடும்பத்தாருடன்.





நடந்து வந்த பாதை



கிருஷ்ண பிரேமி

கிருஷ்ணபிரேமிக்கு அன்று கண் கட்டை அவிழ்க்கிறார்கள். டாக்டர், நிச்சயம் பார்வை தெரியும் என்று சொல்லி இருக்கிறார். அதனால் அவனுக்கு மனத்தில் அப்படியொன்றும் பரபரப்பு இல்லை. பொறுமையாக, அந்தக் கணத்துக்காகக் காத்திருந்தான்.

அப்போது—

மெல்லிய வளையோசையும் படபடப்பான காலடியோசையும் அறையினுள் புகுந்தது. அவற்றின் சொந்தக்காரர்கள் யாரென்பது அவனுக்குத் தெரியும். எனவே உதட்டில் இளம் புன்னகையைத் தவழ விட்டுக் கொண்டே, 'ஹலோ மீரா, ஹலோ ராதா' என்றான் அவன்.

அழகழகான கோவில் சிற்பங்கள் அற்புதமான எழிற் கோலங்களில் இருக்கும்—நெஞ்சை அள்ளும். யாரோ விஷமக்காரர்கள் ஏதோ ஒரு இடத்தைப் பின்னமாக்கி யிருப்பார்கள். — பார்க்க நெஞ்சை அடைக்கும். துக்கம் வெள்ளமாக வரும். சே, இவ்வளவு அற்புதமான அழகை இப்படிச் சேதப்படுத்த எப்படித்தான் மனம் வந்ததோ என்று.

கற்சிலைகளின் விஷயத்திலேயே இப்படி.

உயிர்ச் சிலைகளாம் மனித ஜீவன்களின் விஷயத்தில் இறைவனே இப்படி விஷமம் பண்ணி விட்டிருந்தால்....?

யாரிடம் போய் முட்டிக் கொள்வது?

மீராவின் நிலையும் இதுதான். அந்த முகமும், கண்ணும், எடுப்பான நாசியும் காது மடல்களும் சுந்தரமான வடிவமும் கொள்ளை அழகு. கால்....? ஊனம். விந்தி விந்தித்தான் நடக்க முடியும்.


ஜெயசுதா

ஒரு செம்போத்துப் பறவை தத்தித் தத்தி நடந்தால் பார்க்கப் பரவசமாகத்தான் இருக்கிறது. ஆனால் ஒரு பெண் தத்தித் தத்தி நடப்பதைப் பார்த்து ரசிக்கவா முடியும்? நெஞ்சைக் குத்திக் கிழிக்காது துன்பம்?

மீராவுக்குக் கால் ஊனமாக இருக்கலாம். ஆனால் மனம் முழுதாக இருக்கிறதே! அந்த மனத்தில் — இளமைக்கால இன்ப உணர்வுகளின் தூண்டுதல்களில் — கிருஷ்ண பிரேமியின் மேல் மாறாக்காதல் உருவாயிற்று. கிருஷ்ணப் பிரேமியும் அவளிடம் அன்பாக இருந்தான். ஆனால் தன் மனக் கிடக்கையை மீரா அவனிடம் சொன்னபோது — தான் அவனுக்கு மனைவியாக விரும்புவதாகத் தெரிவித்தபோது—

''ஸாரி மீரா...'' என்றான் அவன். ''என் அன்பு அந்தக் கோணத்தில் இல்லே.''

மீரா இதை எதிர்பார்க்கவில்லே. அவள் பேரழகி; குணவதி; நிறையப் படித்தவள்; புத்திசாலி; இது அவனுக்கே தெரியும். அந்தத் தன்னம்பிக்கையில் தைரியமாகத் தன் உள்ளத்தைத் திறந்து காட்டப் போய், இப்போது.....?



''....ம்'' என்றாள் அவள். ''என் கால் மட்டும் ஊனமாக இல்லாமல் இருந்திருந்தால் நீங்கள் நிச்சயம் அந்தக் கோணத்திலும்....''

''உன் ஆர்க்யுமெண்டை மறுப்பதற்கில்லே மீரா. நான் சாதாரண மனிதன். எனக்கு — என் மனைவியுடன் ஜோடியாக நடந்து போக வேண்டும். ஊரெல்லாம் சுற்றியலைய வேண்டும். பார்க்கிற கண்களெல்லாம் 'என்ன பொருத்தமான ஜோடி இது' என்று வியக்க வேண்டும். ஒரு சராசரி விடலையின் இளமைக் கனவுகள் எனக்கும் உண்டு மீரா. இவை அல்ப ஆசைகள்தான். ஆனால் இவற்றை விட்டுக் கொடுக்க, எனக்குப் பெரிய மனசில்லே. ஸாரி.''

''கிருஷ்...'' மீராவின் குரல் தழுதழுத்தது.

''மீரா நான் உன் தங்கை ராதாவை மணந்து கொள்ள விரும்புகிறேன். அவளும் என்னை உயிருக்குயிராக நேசிக்கிறாள்.''

மீரா, கிருஷ்ணபிரேமியை ஒரு மன அடக்கத்தோடு கண்ணியமாகக் காதலித்து வந்தாள். மாறாக, ராதா அவன்மேல் விழுந்து பிறாண்டி ஒரு உத்வேகத்தோடு காதலிக்கும் ஆக்ரோஷக் காதலியாகத் திகழ்ந்தாள். கிருஷ்ண பிரேமிக்கும் ராதாவின் காதலே புரிந்தது; கவர்ச்சியாக இருந்தது; கவனத்தை ஈர்த்தது!

ராதாவுடன் கிருஷ்ண பிரேமியின் திருமணம் நிச்சயமாயிற்று. ஒரிஜனல் புரோகிராம், மீரா — கிருஷ்ணபிரேமி, ராதா— ஹரிப்பிரியன் திருமணங்கள்தான். ஹரிப்பிரியன் கிருஷ்ண பிரேமியின் தம்பி. எல்லாம் அத்தை பிள்ளைகள் — மாமன் பெண்கள் உறவுதான். ஆனால், கிருஷ்ண பிரேமியின் மனமும், ராதாவின் மனமும் வேறு விதமாக இருக்கும்போது, வேறு என்ன செய்ய?

ஒரு நாள்—

கொஞ்சமும் எதிர்பாராத விதமாக — அந்த ஆக்ஸிடெண்ட்.

ஸ்கூட்டரிலிருந்து கிருஷ்ண பிரேமி தூக்கி எறியப்பட, கூலிங் கிளாஸ் உடைந்து, கண்ணாடிச் சில்லுகள் கண்களைக் குத்தி—

இப்போது நர்ஸிங் ஹோமில்.

மீரா, ராதா இருவருமே அவனைப் பரிவுடன் கவனித்துக் கொண்டார்கள்.

கிருஷ்ண பிரேமி அமைதியாக இருந்தாலும் சுற்றி இருந்தவர்களுக்கு ஏகப் பரபரப்பு. நர்ஸ் கட்டுகளை அவிழ்த்தாள்.

''அய்யோ... கடவுளே... கடவுளே...'' என்று அலறினான் கிருஷ்ண பிரேமி. ''எனக்குக் கண் தெரியல்லியே... எனக்கு என்று எதுவுமே தெரியல்லியே... ஒரே இருட்டா இருக்கே'' என்று அரற்றினான்.

டாக்டரே பிரமித்துப் போய் நின்றார். 'இது ஏன்? சான்ஸே இல்லேயே... ஒரு குறையும் இல்லேயே... பின் எப்படி?'— திகைத்தார்.

''ராதா....ராதா... எனக்குப் பார்வை'' அரற்றிக் கொண்டிருந்தவன் திடீரென்று அமைதியானான். உணர்ச்சிகளை உள்வாங்கிக் கொண்டான். ஒரு திட நம்பிக்கையோடு நிதானத்தோடு, காதல் கொப்புளிக்கும் குரலில் மெள்ளச் சொன்னான். ''அதனாலென்ன ராதா. நீ என் ஒளியாகத் திகழப் போகிறாய். உன் விழி வழியே நான் இந்த உலகத்தைக் காணப் போகிறேன். தனியாக எனக்கொரு பார்வை தேவையில்லே. அதை இழந்ததை ஒரு பெரிய குறையாகவும் நான் உணரப் போவதில்லே.''

ராதாவின் முகம் வெளிறிப் போனது.

''வந்து....வந்து....'' ஒரு நொடி—ஒரே ஒரு நொடி — தடுமாறினன்; பின் திடமாகச் சொன்னன்—

''ஸாரி மிஸ்டர் கிருஷ்ணன். நான் ஹரிப் பிரியனையே மணந்து கொள்வதாக முடிவு செய்து விட்டேன்.''

''ராதா.....''

உண்மையில் ராதா, கிருஷ்ண பிரேமிக்குப் பார்வை போய்விடும் என்று நினைக்கவே யில்லை. அந்த நிலை அவள் எதிர்பாராத ஒன்று.

''நிச்சயமான திருமணத்தை நீயே இவ்வளவு சுலபமாக உதறுகிருயே? இந்த நிலையில் இன்னொரு பெண் என்னை விரும்புவாளா?'' — கிருஷ்ணன் உடைந்தே போனன். அவன் கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர்.

மீராவுக்குத் தாளவில்லை. ''கிருஷ்ணு... கிருஷ்ணு... மனசைத் தளர விடாதீர்கள். நான் இருக்கிறேன் உங்களுக்கு....''

''ராதா.... நீயில்லாமல் நான்....''

''என்னை மறந்து விடுங்கள்.'' வெட்டொன்று துண்டிரண்டாகக் கண்டிப்புடன் பேசிய ராதா, விருட்டென்று எழுந்தாள். வேக வேகமாக நடந்தாள். அவசரமாக வெளியேறிவிட முயன்ற அவளது படபடப்பில், மாடிப் படிகளைச் சரியாகப் பார்க்காமல் காலை வைக்க.....

''ராதா.... பார்த்து, பார்த்து... அங்கே மாடிப் படி....'' கிருஷ்ண பிரேமிதான் கத்தினன்.

சரியான சமயத்தில் கிடைத்த சரியான எச்சரிக்கையில் 'தட்'டென்று ராதா நிற்க, மாடிப் படிகளில் உருள்வதிலிருந்து அவள் தப்பித்தாள்.

அதே கணம்—
இதை எப்படி—
கிருஷ்ண பிரேமியால்—
சொல்ல முடிந்தது??!
எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்!

''அத்தான்! உங்களுக்குப் பார்வை....? ஓ.... விளையாடினீர்களா?'' ராதா திரும்பி வந்தாள் பேராார்வத்துடன்.

கிருஷ்ண பிரேமிக்கு உண்மையில் பார்வை தெரியத்தான் செய்தது. கண் கட்டை அவிழ்க்கு முன், அவனுக்குள்ளே ஒரு எண்ணம் — குறும்பான எண்ணம் — விளையாட்டான எண்ணம்....

'எனக்குக் கண் பார்வை போய்விட்டதாக உணர்ந்தால், என் ராதா எப்படித் துடித்துப் போவாள்? தன் உயிரையே என் மேல் வைத்திருக்கும் என் அருமைக் காதலி... அவளது எல்லையில்லா அன்பை நாம் உணர்ந்து அனுபவிக்கக் கூடிய வாய்ப்பாயிற்றே இது? சற்றுநேரம் விளையாடிப் பார்த்தால் என்ன?'

முடிவோ....?

விபரீதம்!

''இப்படித்தான் விளையாடுவதா....?'' — சிணுங்கலோடு அவன் மார்பில் குத்திச் செல்லக் கோபம் காட்ட முற்பட்டாள், ராதா. அவளது கைகளை நிதானமாக அப்புறப்படுத்திவிட்டுக் கிருஷ்ண பிரேமி சொன்னன்—

''மீரா, பெரிய மனசு பண்ணி நீ என்னை ஏற்க வேண்டும். எனக்கு இப்போதுதான் புரிகிறது —ஊனம் உடலில் இருப்பதில் ஒரு குற்றமும் இல்லை, அது மனத்தில் இருக்கக் கூடாது.''

மே தினம்



டக்கு புக்கு ட்ராய்ங் ட்ருய்ங்
ஓசைகள் நின்றதை வயல்கள் வியந்தன.
தீவுகளற்ற நிசப்த சாகரத்தில்
திசைகள் தெளிந்து பறவைகள் நீந்தின.
உமிழ்தல் நீங்கிய போக்கிக் கூண்டுகள்
குளிரத் தொடங்கி நேரமாயிற்று
நெரிசல் குறைந்தது நகரப் பேருந்தில்
'இன்று மேதினம் அதனுல் விடுமுறை
என்று பேசித் தெருவில் நடந்தார் சிலபேர்
நாளே மார்ச்சில். ஆனுல் இன்று
மார்ச்சும் இல்லை ஏப்ரலும் இல்லை, மே.
இதுதான் மேதினம் என்ருல்
வருக மேதினம் பலநா ளுக.

— ஞானக் கூத்தன்

கார்ட்டூன் நன்றி: வாஷிங்டன் போஸ்ட்



❊ ''மூக்கைப்பாரு மூக்கை!... எப்படி இருக்கு தெரியுமா?.....''

❊ ''.........................''



❊ ''பிரதமர் வெட்டுவது எதைக் குறிக்கிறது புரியுதா? மின்சார வெட்டை!''

❊ ''...''



ஜோக் எழுதுங்கள்

ரூ 500/

[redacted]

பக்திப் பாடலிலும் தேசபக்தி

தருமன் சகுனியுடன் சூதாடுகையிலே, தன்வசம் உள்ள பொன்னைத் தோற்றான்; பொருள்களை யெல்லாம் தோற்றான்; பின்னர் நாட்டையும் சூதில் வைத்துத் தோற்றான்; அதனையடுத்து நாட்டு மக்களை யெல்லாம் பணயம் வைத்துத் தோற்று விடுகிறான். இதனைச் சொல்லும்போதும் தேச பக்தி ஆவேசம் கொண்டுவிடுகிறார் பாரதி.

கோயிற் பூசை செய்வோர் — சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் — வீட்டை
வைத் திழத்தல் போலும்,
ஆயிரங்களான — நீதி
யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்; சிச்சீ!
சிறியர் செய்கை செய்தான்.

பெரிய பதவியில் உள்ளவர்களுக்குச் சிறிய புத்தி கூடாதுதானே! இந்திய அரசர்களெல்லாம் பிரிட்டனுக்கு நாட்டை அடிமைப் படுத்திய கொடுமையை நினைத்துக்கொண்டு பாஞ்சாலி சபதத்தைப் பாடுகிறான் பாரதி.

தருமத்தின் நாயகனை யுதிட்டிரனையே 'சிச்சி' என்று கூறிச் சிறுமை செய்கிறான்.

அடிமை வாழ்வின் கொடுமை பாரதிக்குத் தானே தெரியும்!

தெய்வ பக்திப் பாடல்களிலேயும் நமக்கு இருந்த தேச பக்தியைத் தேச விடுதலை ஆவேசத்தைப் பாரதியார் வெளியிடுகின்றார். ஆம்; விநாயகரைப் பாடி வழிபடுமிடத்து.

''கணபதி ராயன் — அவனிரு
காலைப் பிடித்திடுவோம்.
குணமுயர்ந்திடவே — விடுதலை
கூடி மகிழ்ந்திடவே!''

என்று கூறுகின்றார். தனக்காக, தன் குடும்பத்துக்காகப் பிறிதொருவரின் கால் பிடித்து வாழ விரும்பாத அந்த விடுதலை வீரன் தன் தாயகத்தின் விடுதலைக்காகக் கணபதி ராயன் காலைப் பிடித்து வரம் கேட்கிறான். தான் சொர்க்கம் புகுவதற்காக அல்லாமல், தன் தாய் நாடு சுதந்திரம் பெறுவதற்காகக் கணபதி ராயனின் காலைப் பிடித்துக் கெஞ்சுகின்றான்.

''முருகா முருகா — முருகா'' என்று குன்று தோறும் கோவில் கொண்டுள்ள முருகனைக் கூவி அழைத்து,

''அடியார் பலரிங்குளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே — அசுரர்
முடிவே கருதும் வடிவேலவனே!''

என்று வரம் வேண்டுகிறான். ஆம்; அன்னியருக்கு அடிமைப்பட்டுள்ள இந்திய நாட்டு மக்களெல்லாம் முருகப் பெருமானின் அடியார்களாம்! அதனால் அவர்களுக்கெல்லாம் விடுதலை தந்தருளுமாறு வேண்டுகின்றார்.

தன்னம்பிக்கை யுடையவராயினும், பாரதத்துக்கு விடுதலை தேடுவது முப்பது கோடி மக்களாலும் முடியாமற் போய் விடுமோ என்ற ஐயம் எழுகிறது, அந்த ஆவேசக் கவிஞருக்கு! அதனால், கவுரவர்கள் இழைத்த கொடுமையிலிருந்து பாண்டவர்களைக் காத்த கண்ணை பெருமானிடம் முறையிட்டு அழுகின்றார்.

''என்று தணியுமிந்த
சுதந்திர தாகம்
என்று மடியுமெங்கள்
அடிமையின் மோகம்,
என்றெமை தன்னைகை
விலங்குகள் போகும்
என்றெமை இன்னல்கள்
தீர்ந்து பொய்யாகும்.''

என்று வினவிடுத்து, தேச மக்களின் சுதந்திர தாகத்தைத் தணிக்குமாறு வேண்டுகிறார்.

''தாயே, தன் குழந்தைக்கு அருள் செய்ய மறந்தால் வேறு யாரிடம்தான் அடைக்கலம் புகுவது?'' என்றும் கேட்கின்றார். இந்தப் பாடலுக்கு ''ஸ்ரீகிருஷ்ண தோத்திரம்'' என்று பாரதியார் தலைப்புத் தந்திருக்கிறார்.

''அன்றொரு யுகத்திலே பாரதப் போரை நடத்திப் பாண்டவரைக் காத்தது நீதானே?'' என்று கேட்டு, ''இன்று இந்த பாரதத்தின் அடிமையைத் தகர்க்கப் போர் புரியும் எங்களை ஆதரிக்க மாட்டாயோ?'' என்று கேட்டு விம்மி அழுகின்றார்.

ம.பொ.சி



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course, Road, Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

REGISTERED No. 4392
Registered as a Newspaper in Sri Lanka

